வெளியீடு 21-8-2002 Issued 21-8-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 14, 2001 – தொகுதி 13 – எண் 2

**Friday the 14th September, 2001 – Volume 13 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

பக்கங்கள்

**தகவல் கோரல்**—தொடர்ச்சி.

(ஈ) வெளிநாடுகளில் வேலைக்காகச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக இருப்பவர்களை மீட்பது குறித்து — 454-455

(உ) தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் செய்ய உள்ள வேலைகளுக்கான பட்டியலைக் கொடுக்கும் கால அளவை நீட்டித்தல் — 459-460

**அறிக்கைகள் அளித்தல்**—

(அ) பொதுக் கணக்குக் குழு — 455-456

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 456

**அறிவிப்புகள்**—

(அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு — 457-459

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 (ஆ. இ.) — 459

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆ. செ.) — 460-461

**கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு**— — 461-463

**அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**—

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 — 463

223756
சென்னை-600 009



பக்கங்கள்

**அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2001 — 464-552

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 464,530-551

டாக்டர் க. பொன்முடி — 464-474

திரு. பி.ஆர். சுந்தரம் — 474-488

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 490-496

*திரு. கு. ஜெயக்குமார் — 497-501

திரு. ஜி.கே. மணி — 501-511

*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 511-526

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 — 553-555

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 553-555

(இ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 555-557

*மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 555-557

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 557-559

*மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 557-558

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 559-561

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 559-560

(ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 2001 — 561-562

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 561-562

பக்கங்கள்

**10. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல் — 553

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 567-568

**11. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்** — 563-566

**12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 567-569


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 29, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 14, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க***

***துன்பத்துள் துப்பாயார் நட்பு."***

மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது. துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 90, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**90—**

**நிதி உதவி**

**•9306—திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 14

(அ) மாநில மூலதனச் செலவுகளுக்காகப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறும் நிதி உதவி, வருவாய்க் கணக்கிலான செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களுக்குச் செலவு செய்யப்படுகிறது. இத்திட்டங்களுக்காக 2001-2002-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு வருமாறு:

## தமிழ்நாட்டில் வெளிநாட்டு நிதியுதவியுடன் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டங்கள் | திட்ட மதிப்பீடு 2001-2002 வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|
| **உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்** | | | |
| 1. வேளாண்மை-மனிதவள மேம்பாட்டுத் திட்டம் | 70.77 | 0.01 | 70.78 |
| 2. நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் | 3669.68 | 30370.91 | 34040.59 |
| 3. நீர்வளத் திட்டம் | 348.38 | 1170.97 | 1519.35 |
| 4. இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கும் திட்டம் | 2710.01 | 10290.00 | 13000.01 |
| 5. வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம் | 25.60 | 0.01 | 25.61 |
| 6. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-2 | 2000.00 | 17000.00 | 19000.00 |
| 7. தமிழ்நாடு சாலைத் தொகுப்புத் திட்டம் (தொழில் நுட்பம்) | 0.00 | 3075.17 | 3075.17 |
| **ஜப்பான் பன்னாட்டு வளர்ச்சி வங்கி** | | | |
| 8. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் | 1693.36 | 10845.60 | 12538.96 |
| **டென்மார்க் நாட்டு உதவிபெறும் திட்டங்கள்** | | | |
| 9. தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் | 851.16 | 0.00 | 851.16 |
| 10. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்-திருநெல்வேலி | 420.00 | 0.00 | 420.00 |
| 11. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்-இராமநாதபுரம் | 106.26 | 0.00 | 106.26 |
| 12. குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவுத் திட்டம் | 821.61 | 0.00 | 821.61 |
| 13. புதுக்கோட்டை கால்நடை வளர்ச்சித் திட்டம் | 290.39 | 0.00 | 290.39 |
| **சுவிட்சர்லாந்து நாட்டு உதவிபெறும் திட்டம்** | | | |
| 14. "பட்டு 2000" | 118.34 | 0.00 | 118.34 |
| மொத்தம் | 13125.56 | 72752.67 | 85878.23 |



2001 செப்டம்பர் 14]

## தமிழ்நாட்டில் வெளிநாட்டு நிதியுதவியுடன் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

(ரூபாய் கோடியில்)

| திட்டங்கள் | திட்ட மதிப்பீடு |
|---|---|
| **உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்** | |
| 1. வேளாண்மை-மனிதவள மேம்பாட்டுத் திட்டம் | 115.81 |
| 2. நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் | 807.49 |
| 3. நீர்வளத் திட்டம் | 51.15 |
| 4. இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கும் திட்டம் | 546.31 |
| 5. வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம் | 9.15 |
| 6. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-2 | 872.7 |
| 7. தமிழ்நாடு சாலைத் தொகுப்புத் திட்டம் (தொழில்நுட்பம்) | 30.6 |

[2001 செப்டம்பர் 14

(ரூபாய் கோடியில்)

| திட்டங்கள் | திட்ட மதிப்பீடு |
|---|---|
| **ஜப்பான் பன்னாட்டு வளர்ச்சி வங்கி** | |
| 8. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் | 499.2 |
| **டென்மார்க் நாட்டு உதவிபெறும் திட்டங்கள்** | |
| 9. தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் | 46.92 |
| 10. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்-திருநெல்வேலி | 41.72 |
| 11. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்-இராமநாதபுரம் | 14.05 |
| 12. குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவுத் திட்டம் | 56.24 |
| 13. புதுக்கோட்டை கால்நடை வளர்ச்சித் திட்டம் | 27.5 |
| **சுவிட்சர்லாந்து நாட்டு உதவிபெறும் திட்டம்** | |
| 14. "பட்டு 2000" | 2.05 |

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசு கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே, அரசுக்கு வரவு ரூ.27,644 கோடி என்றும், செலவு ரூ.28,471 கோடி என்றும், மொத்தப் பற்றாக்குறை ரூ.827 கோடி என்றும், புதிய வரிகள் ரூ.135.5 கோடி விதிக்கப்பட்ட பிறகு ஏற்படும் பற்றாக்குறை ரூ.691.5 கோடியாக இருக்கும் என்றும், இந்த வருவாய்க் கணக்கிலே இருக்கின்ற பற்றாக்குறையான ரூ.3,748 கோடியையும் மற்றும் மூலதனச் செலவுக்கான ரூ.2,354 கோடியையும் சேர்த்து ரூ. 6,102 கோடியை அரசானது உள்நாட்டுக் கடன், அதாவது, internal debt, மத்திய அரசுக் கடன், Central Government Loan மற்றும் பொதுக் கணக்கிலிருந்து accruals ஆகியவை மூலமாக மொத்தம் ரூ.6,611 கோடி பெறவிருக்கிறது. இருந்தாலும் இந்த மூன்று கடன்களை அதாவது Internal debts, Central Government Loans பொதுக் கணக்கிலிருந்து பெறுகின்ற நிதி, இவற்றை எந்த வட்டி விகிதத்தில் அரசு பெறவிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Externally Aided Projects என்று சொல்லக்கூடிய இந்தத் திட்டச் செலவுகளுக்கெல்லாம், மைய அரசிடமிருந்து வாங்குகிற நிதிக்கு 12.5% வட்டி விதிக்கப்படுகிறது.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு, மாநில அரசுகள் செலுத்த வேண்டிய கடன், பல மாநிலங்களுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று நம்முடைய அரசு செலுத்தவேண்டிய கடனைத் தள்ளுபடி செய்ய, நமது அரசு கோருமா, கடந்தகால ஆட்சியாளர்கள் கோரினார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்களைப் பொறுத்தவரைக்கும் அந்தந்தத் திட்டங்களுக்கேற்ப, திட்டங்களின் வெற்றி-தோல்விகளுக்கு ஏற்ப, அவ்வப்போது ஆய்ந்து மைய அரசு இது குறித்து முடிவு எடுக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரசு இப்பொழுது 12% வட்டிக்குப் பெறுகிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசின் கடன் சுமை 31-3-2001 வரை ரூ. 21,008 கோடியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள், பணிகள் இவற்றினுடைய மதிப்பில் அரசு செலுத்துகின்ற கடனானது 19.43%. கிட்டத்தட்ட 1/5 பங்கைக் கடனாகச் செலுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, இதுநாள் வரையில் வெளிநாட்டிலிருந்து கிடைக்கின்ற கடன் சுமார் 600 கோடியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இத்தகையதொரு இக்கட்டான வரிப்பளு மிகுந்த காலகட்டத்தில் I.D.A. Fund-ஐயும், I.B.R.T. Fund-ஐயும், O.E.C.F. Fund-ஐயும் K.F.W. Fund-ஐயும் இன்னும் இதுபோன்ற நிதிநிலைகளையெல்லாம் 2%-க்கும் ஏன் அதில் 1/2%-க்கும் 4%-க்கும் அரசுக்குக் கொடுப்பதற்கு மற்ற நாடுகளின் நிதி நிறுவனங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது, ஏன் 12%-க்கு அதாவது அதிகமான வட்டி பெற்று மக்களுடைய வரிச் சுமையை, ஏற்கெனவே 29 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருக்கிற இந்த நிலையில் அதிகரிக்க வேண்டும்? அதுமட்டுமல்ல. இந்த அரசு சிறப்பான திட்டங்களை அறிமுகம் செய்து இருக்கின்றது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.... (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஆக இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் இந்த நிதி நிறுவனங்களிலேயிருந்து நீங்கள் நிதியைப் பெற்றுச் செயல்படுத்தினால் மக்களுக்கும் கடன் சுமை குறையும், நாட்டிற்கும் கடன் சுமை குறையும் என்ற காரணத்தினால், ஏன் இந்த நிதி நிறுவனங்களிடமிருந்து நாம் நிதியைப் பெறக்கூடாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து நமக்கு grant ஆகவும் வருகிறது. 2 சதவிகிதம், 3 சதவிகிதம் வட்டிக்கும் இந்திய நாட்டிற்குப் பணம் வருகிறது. ஆனால், மைய அரசு கடைப்பிடித்து வருகிற கொள்கைப்படி, அது grant ஆக வந்தாலும்கூட, நமக்குத் தருகின்றபோது அதில் கிட்டத்தட்ட 70 சதவிகிதத்தைக் கடனாகத்தான் தருகிறார்கள். 2 சதவிகிதம் வட்டிக்கு மைய அரசு வாங்கினாலும்கூட, அவர்கள் நமக்குத் தருகின்றபோது 12.5 சதவிகித வட்டிக்குத்தான் தருகிறார்கள். இதைக் குறைக்க வேண்டும் என்றுதான் மைய அரசோடு நாங்கள் வாதிட்டுக்கொண்டு இருக்கிறோம், வலியுறுத்திக்கொண்டு வருகிறோம். 3 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று குறைந்த வட்டிககு மைய அரசு மாநில அரசுக்குத் தர வேண்டும். அதுவும் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து Zero or one or two percent interest-ஒரு சதவிகிதம், 2 சதவிகிதம் வட்டிக்கு வாங்கி மாநில அரசுகளுக்குத் தருகின்றபோது, 12.5 சதவிகிதம் என்று தருவது தகுந்ததல்ல, நல்ல முறையல்ல என்று மைய அரசை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தற்போதுகூட, பல திட்டங்களை ஈடேற்றுவதற்காக-மாநில வருவாயும் குறைவு, மைய ஒதுக்கீடும் குறைவு. இந்த நிலையிலே வெளிநாட்டு உதவி தேவை என்பதற்காக உலக வங்கி மூலமாக Road Sector-க்கு ரூ.1,770 கோடி பணத்தைப் பெறுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதைப்போலவே விவசாயத்திற்கு வேண்டிய அந்த நிலத்தினுடைய தன்மையை ஆய்வதற்கு ரூ.152 கோடி நெதர்லேண்ட் நாட்டிலிருந்து குறைந்த வட்டியில் தருகிறார்கள். ஆனால், நமக்கு வருகின்றபோது, வட்டி அதிகமாகிவிடுகிறது. உலக வங்கியிலிருந்து சென்னை நகரத்தினுடைய சுகாதாரத்தை மேம்படுத்த ரூ.810 கோடி கேட்டிருக்கிறோம். அதைப்போலவே சுகாதாரத்தை, தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக பட்டிதொட்டிகளில் எல்லாம் மேம்படுத்துவதற்கு ரூ.660





கோடி கேட்டிருக்கிறோம். கிராமப்புற பெண்கள் மேம்பாட்டிற்காக, மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.1,980 கோடி உலக வங்கியிடமிருந்து கேட்டிருக்கிறோம். இதுபோன்று பல்வேறு திட்டங்கள் Sanitation—கிராமப்புறத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியிலே அவர்களுக்குத் தண்ணீர் வசதியோடுகூடிய கழிப்பறை வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தை வகுத்து—இப்படியெல்லாம் திட்டங்களை வகுத்து—வெளிநாட்டு உதவிக்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். வட்டி என்று வருகிறபோது 12.5 சதவிகிதம் என்று சொல்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து தனியார் நிறுவனங்கள் 2 சதவிகித வட்டிக்குத் தருகிறார்கள். அந்த வட்டிக்கே எங்களுக்குத் தர வேண்டும் என்றுதான் மைய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பன்னாட்டு நிறுவனங்கள் எவை எவை நம்முடைய அரசுக்கு நிதியுதவி அளித்துக் கொண்டிருக்கின்றன, நாம் மைய அரசு மூலமாகத்தான் அதைப் பெற வேண்டுமா, தனியார் நிறுவனங்கள் ஏற்கெனவே பல வெளி நாடுகளில் இருக்கின்றன, அவர்களிடமிருந்து நேரடியாக நிதியுதவி பெறுவதற்கு அரசு முயலுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டு நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஜப்பான் நாடு, டென்மார்க் நாடு, சுவிட்சர்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகளிலிருந்து நிதி வருகிறது. இன்னும் நிதியை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி நாடுகளிலே வாழ்கிற NRI, Non-Resident Indian பொறுத்தவரைக்கும், அவர்கள் மூலம் வருகிற நிதியை அதிகப்படுத்துவதற்கு அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி மற்றும் ஜி.10 நாடுகள் மற்றும் Asian Development Bank போன்ற பொருளாதாரத்திலே வலிமையாக உள்ள அமைப்புகளிலிருந்து ஆண்டுதோறும், இந்த நிதியாண்டில் எவ்வளவு நிதி நமக்குக் கிடைக்கிறது? மற்றும் பல்வேறு N.R.I. நிறுவனங்களும், அதே நேரத்தில் வெளி நாடுகளிலே வாழ்கின்ற இந்தியத் தொழிலதிபர்களும் நேரடியாக, நம் இந்தியாவிலிருக்கின்ற பல்வேறு தொழில் அதிபர்களுக்கு உதாரணமாக டாடா, பிர்லா, அம்பானி போன்ற மிகப் பெரிய தொழில் அதிபர்களுக்கு எல்லாம் குறைந்த வட்டியில், 4 சதவிகித வட்டியில் பணம் தருகிறார்கள். அதுபோன்று நேரடியாக தமிழக அரசு அவர்களிடமிருந்து நிதி ஆதாரத்தைத் திரட்டுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பகல் 10-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய வினாவும் அதுதான். வெளிநாடுகளிலிருந்து தனியார் அமைப்புகள் மூலமாக எவ்வளவு நிதி ஆதாரம் அதிகம் திரட்ட முடியுமோ அவ்வளவு நிதியைத் திரட்டுவதற்கு, குறைந்த வட்டியிலே அதைப் பெறுவதற்கு, அதன் மூலமாக ஆக்கபூர்வமான திட்டங்களை ஈடேற்றுவதற்கு அரசு முழுமூச்சாக நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மூலதனச் செலவுகளுக்காகப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற அந்த நிதி உதவி என்பது மத்திய அரசாங்கத்தின் மூலமாகப் பெறுகின்ற நிதியா, அல்லது நேரடியாக மாநில அரசே பெறக்கூடிய நிதியா என்பதையும், அடுத்ததாகப் புதிதாக அந்த நிதியை நாம் வாங்கிக் கொண்டே இருக்கிறபோது, debt servicing என்று சொல்வார்கள்—கடன் சேவை என்று அதைத் திரும்பச் செலுத்துவதற்கு, மக்கள் பாதிக்கப்படாத அளவில் வருவாய்ப் பெருக்கத்திற்கான திட்டம் அரசு ஏதேனும் இந்த அரசு வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து தனியார் மூலமாக எந்தப் பணம் வந்தாலும், அல்லது financial institution மூலம் வெளிநாட்டில் இருக்கிற





நிதி நிறுவனங்கள் அல்லது தனி நபர்கள் மூலம் நேரடியாக நாம் தொடர்பு கொண்டு வாங்கினாலும்கூட மைய அரசினுடைய அனுமதி பெற்று, மைய அரசு மூலமாகத்தான் தமிழகத்திற்கு வர வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் Bilateral Negotiation என்ற முறையை மேற்கொண்டு, நாம் 2 சதவிகிதம் என்ற ஒப்பந்தத்திற்கு வந்தாலும்கூட மைய அரசு மூலம் வருகிறபோது, அதை 30 சதவிகிதம் மானியமாகவும் மீதி 70 சதவிகிதம் கடனாகவும் 12.5 சதவிகிதம் வட்டிக்கு—நமக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் நடைமுறையில் இருந்து வருகிற ஒரு நிலை. இதை மாற்றுவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் தற்போது மேற்கொண்டு இருக்கிறது. இப்படி நாம் கடனை அதிகமாக வாங்குகிறபோது திருப்பிக் கட்டுவதற்கு resources mobilisation என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் கூறினார்கள். Resources mobilisation இரண்டு விதத்திலே வருகிறது. பிரதானமாக இருப்பது வரிவசூல்தான்; வரியும் போடக்கூடாது வருமானம் பெறுவதற்கு வேறு வழியே இல்லை என்ற நிலையிலே வரி போடாமல் வருமானத்தை நாமாக பெருக்க முடியாது என்ற நிலை இருக்கிறது. அதற்குத்தான் நாம் சொல்கிறோம். ஏற்கெனவே தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் அதிகப்படியான வரிச் சுமையை நாம் மக்களுக்குப் போட்டிருக்கிறோம் பன்னெடுங்காலமாக. ஆனால் ஒட்டுமொத்தமாக மைய அரசு மாநிலங்களிலிருந்து பெறுகின்ற அந்த வருவாயிலிருந்து வெறுமனே 29.5 சதவிகிதத்தைத்தான் தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறது. தமிழகத்திற்கு அவர்கள் தருகின்ற பங்கு வெறுமனே 5.385 சதவிகிதம் மட்டுமே. மாநிலங்களிலிருந்து பெறக்கூடிய பணம் 100 ரூபாய் என்றால், ஏற்கெனவே நான் சொன்னதைப்போல 5.385 ரூபாய் மட்டும்தான் நமக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். That is why we have been insisting for increased financial power to the provincial Governments. மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதியாதாரத்தைத் தரவேண்டுமென்ற அண்ணாவின் கொள்கையை சர்க்காரியா கமிஷன் மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிற அந்த அறிவுரையின் அடிப்படையில் தரவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் நம்மைப் போன்று பொருளாதாரத்திலே நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிற நாடுகளைச் சுரண்டுகின்றன என்பது யதார்த்தமான உண்மை. இதிலே

[2001 செப்டம்பர் 14

பலபேர்களுக்குக்கூட உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட நிதி நிறுவனங்கள், குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளுக்கு இந்த நிதியை வழங்குகிறபோது, நம்மை ஆண்டு கொண்டிருக்கிற மைய அரசாங்கமே நமக்கு வரியை விதிக்கிற அந்த நிலையை மாற்றுவதற்கான முயற்சியை எடுப்பது குறித்து தொடர்ந்து பேசுகிறோம் என்று சொன்னாலும்கூட, இதை ஒரு கொள்கை நிலையாக எடுத்து அறிவித்து மாறுதல் செய்ய வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் நிதியை 2 சதவிகிதத்திற்கு வழங்குகின்றன. அதை 12.5 சதவிகிதமாக நமக்கு வழங்குவதற்கு இடையிலே ஒரு தரகர் வேலையை மைய அரசாங்கம் பார்க்க வேண்டியது இல்லை. ஆகவே தரகு வேலை பார்க்கிறவர்கள் இதை நிறுத்தி உரிய முறையிலே நமக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து காடு வளர்ப்புத் திட்டத்திற்கான முயற்சியை எடுத்து நிதியைப் பெறுவதற்கான காரியங்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலேயும் அதைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் இதற்குப் பதில் சொல்லுங்கள், போதும்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டு நிறுவனங்கள் பாரதத்தை சுரண்டியது அந்தக் காலமாக இருக்கலாம். ஆனால், தற்போது மைய அரசு மாநிலங்களைச் சுரண்டுவதுதான் இப்போதைய நடைமுறையாக இருக்கிறது. தற்போது பன்னாட்டு நிறுவனங்கள் பல Grant ஆகவும் சல்லிக்காசுகூட வட்டியில்லாமலும் கொடுக்கிறார்கள். இனாமாகவும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களைத் தருகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்கள் அப்படி இனாமாகத் தருகின்ற பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றபோது 30 சதவிகிதம் மானியமாகவும் மீதம் 70 சதவிகிதம் கடனாக 12.5 சதவிகிதம் வட்டி வாங்குகின்ற சுரண்டல் மனப்பான்மையை மைய அரசு மேற்கொண்டிருப்பது தவறு என்று தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மைய அரசை வலியுறுத்தி வருகிறார்கள்.



2001 செப்டம்பர் 14]

அதைப்போலவே ஜப்பான் நாட்டிடமிருந்து காடு வளர்ச்சித் திட்டத்திற்காக, இரண்டாவது கட்டமான நிதியினைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிதி கிட்டுகின்ற நிலையிலே இருக்கின்றது என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு சிறப்பான பதிலைத் தந்தார்கள். இனாமாக வரும் பணத்தையே மத்திய அரசு மாநிலங்களுக்கு 12.5 சதவிகிதம் வட்டிக்குக் கொடுக்கும்போது அந்த வட்டிவிகிதம் அதிகமாக இருக்கிறது. ஆக, எந்த முயற்சி எடுத்தாலும்கூட, சட்டமன்றத்திலே நாம் ஒரு தீர்மானமாக நிறைவேற்றியாவது அதை அனுப்பி வைத்தால், அப்போதாவது மத்திய அரசின் காதிலே விழுமா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்கள் எல்லாம் ஒருங்கிணைந்து மைய அரசோடு இது குறித்து வாதிட்டு, போர் தொடுத்தால்தான் மைய அரசு செவிசாய்க்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே பன்னாட்டு நிறுவனங்கள் நமக்கு இனாமாகப் பணம் தருவதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே டேனிடா இப்போது Health Care அடிப்படையிலேயும், Child Welfare அடிப்படையிலேயும் நிதி கொடுத்துக்கொண்டிருக்கிறது; காடு வளர்ப்புத் திட்டத்திற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நம்முடைய மத்திய அரசுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு தொகை வருகிறது, அதன் மூலமாக நமக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். நம் நாட்டினுடைய infrastructure-ஐ develop செய்வதற்கு நாம் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுகிறோம். அதன் மூலமாக resources-ஐப் பெருக்குவதற்கு வழியில்லை, வரி விதிப்பைத் தவிர வேறு வழியில்லை என்பதை இங்கே அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்படி மூலதனச் செலவுக்காக பெறக்கூடிய நிதி உதவியை நாம் உற்பத்தித்

திறனைப் பெருக்குவதற்காகச் செலவிடுவோம் என்று சொன்னால் அப்படிச் செய்யப்படும் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு, இந்த நிதியைத் திருப்பிச் செலுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுமா, இல்லையா என்பதையும், அதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நல்ல ஆலோசனையைத் தந்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக Economic prosperity of a State or a Country depends on its concentration in developmental activities என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து. அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. அந்த முறையில்தான் தற்போது, வரும் 5 ஆண்டு காலத்திற்கான திட்டங்களை இந்த அரசு தீட்டி வருகிறது. The total gross income of the State, ஒட்டுமொத்த மாநில வருமானத்தைப் பெருக்குகின்ற அளவில் நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் 80 சதவிகித மக்கள் வாழ்கின்ற கிராமப்புறத்தில் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் எந்தெந்த அடிப்படையில் பொருளாதாரத்தை கிராமப்புறத்தில் உயர்த்த வேண்டும் என்ற திட்டங்களை வகுத்திருக்கிறோம். கிராமப்புறத்தில் பொருளாதாரம் வளர வேண்டுமென்றால், ஒன்று, அடிப்படை வசதியான தண்ணீர் வசதி தேவை. அடுத்து Technological Development in agro-cultivation தேவை. பயிர் உற்பத்தியை High Productivity and High Production என்ற அடிப்படையில் பெருக்க வேண்டும். உற்பத்தித் திறனையும் பெருக்க வேண்டும். அதற்கான உரம், அடுத்தது, அதற்கான பூச்சி மருந்து போன்றவற்றை எல்லாம் கூட போட்டு, நவீன முறையில் உற்பத்தியைப் பெருக்க, உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்ற முறையிலே நாங்கள் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அத்தோடு மட்டுமல்லாமல், எந்தவகைய கிராமப்புற பயிரினங்களை அவர்கள் மேற்கொண்டாலும் நட்டமின்றி உழவர்களுக்கு வருவாய் கிட்ட வேண்டும் என்ற அணுகுமுறையையும் அரசு திட்டமாகத் தீட்டியிருக்கிறது. அப்படி அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒருவர் தக்காளி போட்டால், பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் தக்காளியையே போடுவதுபோல் அல்லாமல், computer மூலமாக, கணினி மூலமாக, regulate செய்து, இந்த தாலுகாவில் இந்த இந்தப் பகுதியில் இந்தப் பயிரை இந்தக் காலத்தே பயிரிடச் செய்ய வேண்டுமென்று தாய்லாந்து நாட்டில் இருப்பதைப்போன்ற நல்ல முறையை, திட்டத்தைக் கொண்டுவரவும் ஒர





ஆக்கபூர்வமான திட்டத்தைக் கொண்டுவந்து உழவர்களுக்கு உற்பத்திச் செலவுக்கு மேல் 5 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதமேனும் இலாபம் கிட்டக்கூடிய அளவுக்கு நிலைமையைச் சரி செய்தால், கிராமப்புறத்தின் பொருளாதாரம் உய்வு நிலையை அடைந்து விடும். கிராமப்புற பொருளாதாரம் உய்வுநிலை அடைகிறபோது ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருமானப் பெருக்கு ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்றும் முறையில்தான் இந்த அரசு செயல்திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இப்போது மத்திய அரசாங்கம், மானியமாக வருகிற பணத்துக்கு, நம்மிடம் 12 சதவிகிதம் வட்டி வாங்குவதாகச் சொன்னார்கள். அது இப்போது மட்டும்தானா? இதற்கு முன்னாலேயுமா? இந்த அரசாங்கம் மட்டுமா, இல்லை எத்தனை ஆண்டுகாலத்துக்கு முன்பாக இருந்து இப்படி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவைக்குத் தந்திருக்கிற அந்த இணைப்புப் பட்டியலில் கூறப்பட்டிருக்கிற அனைத்துத் திட்டங்களும்—1991-92 ஆம் ஆண்டிலே—அதாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்திலே மேற்கொள்ளப்பட்டு, மைய அரசுக்குத் தந்து, மாநில அரசுக்குக் கொண்டு வந்த திட்டங்கள். கடந்த ஐந்தாண்டுக்கால ஆட்சியில் ஒரே ஒரு திட்டம்தான் வந்திருக்கிறது. ஆனால் அனைத்துத் திட்டங்களுக்கும் மைய அரசு அது தி.மு.க. ஆட்சியில் வந்த திட்டமாக இருந்தாலும் சரி, அண்ணா தி.மு.க. ஆட்சியில், புரட்சித் தலைவி ஆட்சிக்காலத்தில் வந்த திட்டமாக இருந்தாலும் சரி, மானியமாக வருவதற்கு அந்த 12 சதவிகித வட்டி என்பதை—மைய அரசு மாநிலங்களுக்கு உதவாத ஒரு மன நிலையை மேற்கொண்டிருக்கிற காரணத்தால்—தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. மு. அப்பாவு. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

91—

## நியாயவிலைக் கிளைக் கடை

***607—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, தலைவன்விளை கிராமத்திற்கு நியாயவிலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைவன்விளை, புதியிருப்புவிளை, பசுவழி ஆகிய மூன்று கிராமங்களையும் இணைத்து ஒரு புதிய கிளை நியாய விலைக் கடை கேட்டதற்கு, அமைப்பதற்கில்லை என்ற பதிலைச் சொல்லி அமர்ந்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள். கிராமப்புறத்தில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு அத்தியாவசியப் பண்டங்களை வாங்கச் செல்கின்ற கிராம மக்கள் நாள் ஒன்றுக்கு ஒருமுறை அந்தப் பொருட்களைப் பெற வேண்டுமென்றால் 2 கிலோ மீட்டர், 3 கிலோமீட்டர், 4 கிலோ மீட்டர் தூரம் செல்கின்றார்கள். அரசு 200 குடும்ப அட்டைகளும், 2 கிலோமீட்டர் தூரமும் இருந்தால் அங்கே ஒரு கிளை நியாய விலைக் கடை அமைக்கலாம் என்றும் இவற்றில் ஏதாவது ஒன்று இல்லாத நேரத்தில் அரசு விதிகளைத் தளர்த்தி சிறப்பு உத்தரவாக அந்தப் பகுதியிலும் கிளைக் கடை திறப்பதற்கு அனுமதி அளிக்கலாம் என்றும் விதி இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த தலைவன்விளை, அதைத் தொட்டிருக்கிற புதியிருப்புவிளை, பசுவழி ஆகிய மூன்று கிராமங்களையும் இணைத்து கிளை நியாய விலைக் கடை அமைத்துத் தருவீர்களா என்று கேட்டுக்





கொள்கிறேன். இதுபோன்று அமைத்துத் தருவதால் அரசுக்கு எந்தவிதமான செலவும் கிடையாது. காரணம் எங்கு கிளைக் கடை ஆரம்பிக்கப்பட உள்ளதோ அந்தக் கிளைக் கடை அமைப்பதற்கு வாடகை இல்லாத கட்டடமும், தராசும் அவர்களே கொடுக்கின்றார்கள். ஆகவே அந்த அடிப்படையில் இந்தக் கிளைக் கடையை அமைத்துத் தர கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புஷ்பவனம், குமிழம்பாடி, அழகநேரி, அடங்கார்குளம், பிள்ளையார் குடியிருப்பு, புதியம்புத்தூர், பெரியகுளம், கொக்கநேரி, நக்கநேரி, பெத்தரெங்கபுரம், அரசர்குளம், கொத்தங்குளம், காடுதுலா, கரைசுற்றுப்புதூர், ரம்மதபுரம், பார்க்கனேரி, இளையநயினார்குளம், பெருங்குளம், வடுகம்மன்பட்டி ஆகிய கிராமங்களிலும் இந்தக் கிளை நியாய விலைக் கடைகளை விரைவிலேயே அமைத்துத் தருவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதுமொத்தான்மொழி ஊராட்சியிலே இருக்கிற தலைவன்விளை கிராமத்திற்கு நியாயவிலைக் கிளைக் கடை அமைத்துத் தரப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே முதுமொத்தான்மொழி கிராமத்திலேயுள்ள நியாய விலைக் கடையிலே 441 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. உறுப்பினர் கேட்டிருக்கிற இந்த தலைவன்விளை பகுதிக்கு 105 குடும்ப அட்டைகள்தான் இருக்கின்றன. ஆகவே, ஏற்கெனவே வகுத்திருக்கிற விதிகளின்படி இது வராததாலே நியாய விலைக் கிளைக் கடை அமைக்க முடியாத நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மிகப்பெரிய பட்டியலைச் சொல்லி, என் தொகுதியிலே இருக்கிற அந்த இடங்களுக்கெல்லாம் நியாய விலைக் கிளைக் கடை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அன்பாகவும் வேண்டுகோளாகவும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றிலே எது எது நியாயமாக இருக்கிறதோ அவற்றையெல்லாம் கோரிக்கையாக நீங்கள் கொடுத்தீர்கள் என்று சொன்னால் அவற்றிலேயிருக்கிற நியாயத்தின் அடிப்படையிலே இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனை நான் அன்போடு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செ. சிவசாமி.

[2001 செப்டம்பர் 14

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் கேட்காமலேயே தமிழகத்தில் எங்கெங்கெல்லாம் அதிகப்படியான ரேஷன் கார்டுகள் இருக்கின்றன என்பதனைக் கணக்கில் எடுத்து, பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு அரசு தானாகவே பகுதி நேரக் கடைகளை அமைக்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகம் முழுவதும் 27 ஆயிரம் நியாய விலைக் கடைகள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல நிதிநிலைக்கேற்ப இந்த அரசு அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்கள் குறிப்பாக அரிசி வழங்கப்படுகிறபோது அதனுடைய எடை மிகக் குறைவாக இருக்கிறது. இதிலே மிக முக்கியமாக நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால் 20 கிலோ ரேஷன் அரிசி வழங்குகிறபோது அதை 20 கிலோ படி எடைக்கல்லாகக் கொடுத்து வழங்கினால் ஒருவேளை 500 கிராம்தான் குறையும். ஆனால் ரேஷன் கடைகளில் அப்படிக் கொடுப்பதில்லை. மாறாக 5,5,5 கிலோக்களாக நிறுக்கிறார்கள். நான்கு முறை நிறுக்கும்போது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நிறுவைக்கும் 500 கிராம் குறைகின்ற ஒரு சூழ்நிலை. அப்படி ரேஷன் கடைகளில் கொடுக்கும்போது 2 கிலோ அரிசி குறைகின்ற ஒரு சூழ்நிலை. எனவே 10 கிலோ வாங்கினாலும், 20 கிலோ வாங்கினாலும் ஒரே நிறுவையாக எடைக்கல்லைப் போட்டு நிறுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நியாயவிலைக் கடைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த எடைக் கற்கள் வெவ்வேறாக இருந்தாலும் 20 கிலோவிற்கு உரிய அந்த அளவு எடையை வைத்ததற்குப் பின்னாலேதான் அரிசி வழங்கப்படுகிறது. ஆனால் உறுப்பினர்



2001 செப்டம்பர் 14]

சொல்லியிருக்கிற யோசனையை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும். 20 கிலோ எடையுள்ள—ஒரே கல்லாகக் கொடுப்பதற்கு,—அளவைக் கற்களைக் கொடுப்பதற்கு இந்த அரசு யோசிக்கும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்குகிற அமுதம் அங்காடிகளைத் தொடங்குகிறபோது குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் பகுதி நேரமாகத் தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சுய நிதிக் குழுக்களிலுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிற வகையிலே 100 குடும்ப கார்டுகள் இருக்கின்ற இடத்தில்—சுய நிதிக் குழுக்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்து அவர்கள் வாரா வாரம் விற்று அதற்கான பணத்தைச் செலுத்துகிற வகையிலே 100 கார்டுகள் உள்ள இடங்களில்—பகுதி நேரக் கடைகளைத் தொடங்குவதற்கு அரசிடம் ஏற்கெனவே திட்டம் உள்ளதா? அதைப் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாம் நடத்துகிற அத்தனை கடைகளையும் கூட்டுறவு அங்காடிகள் மூலமாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத நிலையில்—அங்கெல்லாம் தனியாருக்குக் கொடுப்பதைப் போல கொடுக்காமல்—இந்த மாநிலத்திலே கூட்டுறவு மூலம் நடத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது ஒரு கொள்கை முடிவு. அதை இந்த அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவதிலே கடந்த முறை பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நாம் தொகுதிக்குள்ளே சென்று பார்க்கின்ற நேரத்திலே தெரிந்துகொள்ள முடிந்தது. முன்பெல்லாம் அங்கங்கே உள்ள தாலுகா அளவிலே குடும்ப அட்டைகள் எல்லாம் தயார் செய்து கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் கடந்த முறை மாநில அளவிலே அந்தக் குடும்ப அட்டைகளை 3 வண்ண நிறத்திலே

வழங்குவதாகச் சொல்லி பல பேருக்கு அந்தக் குடும்ப அட்டைகள் சென்றடையவில்லை என்கிற நிலை இருக்கிறது. எந்தக் கிராமத்திற்குப் போனாலும் எங்களுக்குக் குடும்ப அட்டை இல்லை என்று சொல்கிறார்கள். அது அரசியல் ரீதியாகக்கூட புறக்கணிக்கப்பட்டிருக்குமோ என்கின்ற ஐயப்பாடுகள் எல்லாம் எழுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் இந்த அரசு அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். உண்மையிலேயே பழைய அட்டை வைத்திருந்தவர்களுக்கேகூட வழங்கப்படவில்லை. அவர்கள் அந்தப் பழைய அட்டையை இன்னும் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள், புது அட்டை கிடைக்கவில்லை என்கின்ற காரணத்தினால். இதனால் அவர்களுக்குக் குடிமைப் பொருட்கள் வாங்குகிற நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதை அரசு கவனத்தில் கொண்டு மீண்டும் இந்த அட்டைகளை வழங்குகிற நிலையை ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை வழங்குவதிலே ஏற்பட்ட குளறுபடிகள் பற்றி ஏற்கெனவே மாமன்ற உறுப்பினர்களோடு பெரிய அளவிலே விவாதித்திருக்கிறோம். அதிலே மிகப் பெரிய தவறுகள் எல்லாம் நடந்திருக்கின்றன. கடந்த ஆட்சிக்காலத்திலே நடந்தன என்பதைப் பற்றி எல்லாம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, குடும்ப அட்டைகள் வழங்குகிறபோது தீவிரமாகக் கண்காணித்து எந்த ஒரு தனி நபரும் விட்டுப்போகாமல், எந்த அரசியல் கட்சி என்று பார்க்காமல், அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய, புரட்சித் தலைவி அரசினுடைய தலையாய கொள்கை ஆகும். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் உணவுக் கொள்கையைப் பரிசீலிப்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றினை முதலமைச்சர் அம்மா அவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 10-30*

இதைத் தீவிரமாக விசாரித்து அந்தக் குழு கொடுக்கிற பரிந்துரைகளின் அடிப்படையிலே அரசு தக்க முடிவுகளை எடுக்கும் என்கிற அதே நேரத்திலே 2002 ஆம் ஆண்டில் இந்தக் குடும்ப அட்டைகளைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டிய காலகட்டம் இருக்கிற காரணத்தால் அப்பொழுது இதைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து உறுப்பினர்கள்



சொல்லியிருக்கிற ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முன்பு கலர் அட்டைகள் கொடுத்ததிலே பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன என்று இங்கே அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையை எடுத்துவிட்டு அனைவருக்கும் அவர்கள் ஆட்சியிலே முன்பு இருந்ததைப்போல கார்டுகள் வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் முதல் கேள்விக்கே விளக்கமான பதிலைச் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்ததற்குப் பின்னாலே, 2002-லே,—அட்டைகளில் ஏற்பட்டிருக்கிற குளறுபடிகளையெல்லாம் தீர்க்கின்ற வகையிலே—விவரமான ஓர் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிற காரணத்தாலே அப்போது இதைப் பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ரேஷன் கடைகளில் நல்ல அரிசி வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ரேஷன் கடைகளில் பணிபுரிபவர்களுக்குப் போதிய சம்பளம் இல்லாத காரணத்தால் பல்வேறு வகைகளில் ஊழல் நடப்பதற்கு அதுவே ஒரு காரணமாக இருக்கிறது. அந்தச் சம்பளப் பற்றாக்குறையின் காரணமாகத்தான் ரேஷன் கடைகளில் பல தில்லுமுல்லுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் குறையை நீக்கிவிட்டால், அவர்களுக்கு ஒரு நிர்ணயமான சம்பளத்தைக் கொடுத்து, பதவியை நிர்ணயம் செய்துவிட்டால், நிச்சயமாக ரேஷன் கடைகளில் ஊழல்கள் நடப்பதை நாம் தவிர்க்க முடியும். அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற இந்த ஆலோசனையையும் சட்டமன்ற உறுப்பினர்கள் குழு ஆராயும்; அரசுக்கு

அறிக்கையை அளிக்கும். அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**92—**

**கால்நடை மருத்துவமனை**

***2263—திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதியில் கால்நடை மருத்துவமனைகள் இல்லாத இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பச்சைமால், இதை நேரடியாக அவரிடம் கேட்டுவிட வேண்டியதுதானே?

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதியில் கால்நடை மருத்துவமனைகள் இல்லாத இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகளை அமைக்கின்ற எண்ணம் உண்டா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதி, குளச்சல் வருவாய்க் கிராமங்களில் குளச்சல் கால்நடை மருந்தகமும், தலைக்குளம் பகுதியில் திங்கள்சந்தை கால்நடை மருந்தகமும், குறுந்தங்கோடு கிராமத்தில் குறுந்தங்கோடு கால்நடை மருந்தகமும் இருக்கின்றன. மேலும் குறுந்தங்கோடு மற்றும் திங்கள்சந்தை கால்நடை மருந்தகங்களின்கீழ் முறையே மணவாளக்குறிச்சி, வெள்ளிச்சந்தை மற்றும் பரசேரி கிழக்கரை கால்நடை மருந்தகக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மீனவ கிராமங்களில் மற்றும் கடற்கரை கிராமங்களில் கால்நடைகள்





இல்லாததால் மருந்தகம் தேவையில்லை. குளச்சல் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், மூன்று முதல் எட்டு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**93—**

**புதிய பேருந்துகள்**

***45—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் பெரும்பான்மையான அரசுப் பேருந்துகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதடைந்துள்ள பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் 370 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதில் 22 பேருந்துகள் பழுதடைந்த பேருந்துகள். ஏற்கெனவே நீலகிரி மாவட்டத்தில் ஓடுகின்ற பேருந்துகள் அனைத்தும் சரியான முறையில் கடந்த கால ஆட்சியில் இயக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாகவே இருக்கிறது. அவற்றையெல்லாம் சீரமைக்கின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, குன்னூர் பகுதிகளுக்கு தினமும் 10 ஆயிரம் பேர் சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். பஸ்களிலே பயணம் செய்கின்றபோது பஸ்கள் ஆங்காங்கே நின்றுவிடுகின்றன. அடுத்த பஸ் வருவதற்கு ஏறத்தாழ அரை நாள் கூட ஆகிவிடுகிறது. தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல

முடியாமல் போய்விடுகிறது. பள்ளி மாணவ மாணவிகள்கூடப் பள்ளிகளுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மாணவிகளின் சீருடைகள்கூட நனைந்துவிடுகின்றன. அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே 1,550 புதிய பஸ்கள் வாங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் 200 பஸ்களை நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் 20 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. மொத்தமாக வாங்கப்படுகின்ற பேருந்துகள் 1,550. அதனுடைய விகிதாச்சாரத்தினுடைய அடிப்படையில், நீலகிரி மாவட்டத்திற்கு பேருந்துகள் ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகம் என்று நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்கும்போது, மாண்புமிகு தலைவர் அவர்களே, 362 பேருந்துகள் இருந்தன. தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் அதை எடுக்கும்போது 362-ஐயும் கொடுத்தோம். இப்போது பார்த்தால் 300-க்கும் குறைவாகத்தான் பேருந்துகள் ஓடுகின்றன. அதன் காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல பேருந்துகள் ஓடுவதில்லை. புதிதாக வரும் பேருந்துகளுக்கு தமிழ்நாடு பொள்ளாச்சி இன்ஜினியரிங் கார்ப்பரேசனிலே body building செய்கிறார்கள். கோயம்புத்தூர் கோட்டத்திற்கு வரும்போது, எங்களுக்குக் கடந்த கால அரசில் பழைய பேருந்துகளுக்கு எல்லாம் வெறும் பெயின்ட்களை பூசிவிட்டு புதுப் பேருந்துகளை எல்லாம் தந்ததாகக் கூறியதை நாங்கள் அறிகிறோம். தயவு செய்து நீலகிரிக்கு வரும் பேருந்துகளை, பொள்ளாச்சியிலிருந்து நேராக எங்களுக்கு உதகமண்டலத்திற்குத் தரவேண்டும், குன்னூருக்குத் தரவேண்டும், கோத்தகிரிக்குத் தரவேண்டும், கூடலூருக்கும் தரவேண்டும். கோயம்புத்தூர் கோட்டத்திற்கு வராமல் நேராக நீலகிரிக்கு எங்களுக்குத் தர வேண்டுமென்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரிலிருந்து, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஈரோடு பகுதிகளுக்குப் போதுமான பஸ்கள் இல்லை. அதுவும் இரவு நேரத்தில் 10 மணிக்கு மேலே அங்கே பஸ்கள் ஓடுவதில்லை. போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தால், தனியார் மேக்சி வேன் சொந்தக்காரர்கள் குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்வதற்கு நூறு ரூபாயும், கோயம்புத்தூர் செல்வதற்கு 150 ரூபாயும் வசூல் செய்கிறார்கள். எனவே, அரசுக்கு நிதிப் பற்றாக்குறை இருந்தால், மினி பஸ்களை விடுவதற்குக் கூடுதலாக பர்மிட் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதுபோல, மேக்சி கேப் தமிழ்நாடு முழுவதும் இன்றையதினம் டிக்கெட் போட்டு அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை கோயம்புத்தூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டு வருகிறது. வால்பாறை பகுதியிலேகூட, மேக்சி கேப் அதிகமாக அடிப்பதாக மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் அன்றைக்கே அவையிலே குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, நடவடிக்கை எடுத்ததன் பேரில், வால்பாறை கிளையில் மட்டும் நாள் ஒன்றுக்கு இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் இன்றையதினம் வசூல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இரவு நேரப் பேருந்துகளுக்கு வசதி செய்ய அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**94—**

## கூடுதல் பேருந்து

***3072—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

7—

## காற்றாலை மின் உற்பத்தி

**•9786—திருமதி எஸ். மகேஸ்வரி:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரபுசாரா எரிசக்தியில் முதன்மை வகிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தியை நசிவிலிருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991-96 ஆம் ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த எங்கள் அன்னை புரட்சித் தலைவியின் அரசு எடுத்த தெளிவான கொள்கைகள் மற்றும் வழங்கிய வசதிகளின் காரணங்களால், காற்று மூலம் உற்பத்தி செய்யும் திறனில், தமிழ்நாடு, நாட்டிலேயே மிக அதிகபட்ச இலக்கை எட்டியது. தற்பொழுது இத்திறன் 827 மெகாவாட் உள்ளது. இது தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புத் திறனில் 10 சதவிகிதத்திற்குக் கூடுதலாகவே உள்ளது. இது நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீட்டிற்கு அதிகமாகவே உள்ளது. ஆகவே, காற்று சக்தியைப் பொறுத்தவரை தமிழ்நாடு முதல் நிலையே வகிக்கிறது. இதனை அதிகப்படுத்தி, முன்னர் 1991-96 ஆண்டுகளில் இருந்த முதல் நிலையிலேயே தொடர்ந்து தமிழ்நாடு இருப்பதற்கு ஏதுவாக புதிய கொள்கைகளை வரையறுக்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Non-conventional energy என்று சொல்லப்படுகின்ற மரபுசாரா எரிசக்திக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமது கடந்த ஆட்சிக் காலத்திலே போதிய ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்த காரணத்தினால், ஏற்கெனவே சற்றேறத்தாழ 500 மெகாவாட் என்று மின் உற்பத்தியை Wind energy என்று சொல்லப்படுகின்ற காற்றாலையின் மூலம் எட்ட முடிந்தது. ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் காற்றாலை மின் உற்பத்தியை எவ்வளவு தூரம் ஒடுக்க முடியுமோ, முடக்க முடியுமோ அவ்வளவு தூரம் நசுக்கி, நலிவுறச் செய்து, அழிவுப் பாதையிலே செலுத்தி இருக்கின்றார்கள். ஆகவே கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் பொருட்செலவிலே காற்றாலையை நிறுவியவர்கள் எல்லாம் இன்றைக்கு அவர்களுடைய கைகள் கட்டப்பட்ட





நிலையிலே, வழி தெரியாமல், வகை புரியாமல், விழி பிதுங்கி நிற்கின்றார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இந்தக் காற்றாலை மின் உற்பத்திக்குச் செய்த மாபாதகத்தைப் பற்றி மரபுசாரா எரிசக்தித் துறையின் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்கள்கூட பத்திரிகையிலே விரிவாகவும், விளக்கமாகவும் செய்திகள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட அவர்கள் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்கள் சொல்லிக் கொள்வதெல்லாம், எங்களுக்கு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே எந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தனவோ, எந்தச் சலுகைகளைக் கடந்த ஆட்சியாளர்கள் எங்களிடமிருந்து வலுக்கட்டாயமாகவும், வஞ்சகமாகவும் பறித்துக்கொண்டார்களோ, அந்தச் சலுகைகளை மீண்டும் இந்த அரசு மீட்டுத் தருமா, எங்களை மீள வைக்குமா என்பதுதான். ஆகவே தங்கள் வாயிலாக மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அரசாங்கம் bio-friendly, eco-friendly and green energy என்று சொல்லப்படுகின்ற இந்தக் காற்றாலை மின் உற்பத்தியைக் காப்பாற்ற என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது? கடந்த ஆட்சியாளர்களால் அவர்கள் இழந்து நிற்கும் அந்தச் சலுகைகளை எல்லாம் மீண்டும் இந்த அரசு ஈட்டித் தருமா, மீட்டுத் தருமா என்பதுதான் என்னுடைய வினா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், கடந்த காலங்களில் முந்தைய ஆட்சியில் காற்றாலை மின் உற்பத்தித் தொழில் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, மிகவும் பின்னோக்கிப் போய் இருக்கின்றது என்ற சூழ்நிலையை, உண்மையான நிலைமையை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினார்கள். அதையேதான் மத்தியிலே மரபு சாரா எரிசக்தித் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள்கூட, வேலூரில் தோல் கழிவுநீர் மூலம் தயாரிக்கப்படுகின்ற மின்சாரம் குறித்த நிகழ்ச்சியிலே உரையாற்றும்போதும்கூட, கடந்த இரு ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் பேசியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கின்ற ஒரு வருத்தமான விஷயத்தைப் பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள்கூட இது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-45

அதுமட்டுமல்ல. கடந்த காலங்களிலே, கடந்த கால அரசு உரிய நேரங்களிலே நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக, கிட்டத்தட்ட 90 மெகாவாட் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க வேண்டிய ஒரு நிலையம் மஹாராஷ்டிரா மாநிலத்திற்குச் சென்றிருக்கிறது என்று 25-2-2001 அன்று ஒரு பேட்டியிலே மத்தியிலே அங்கம் வகிக்கின்ற மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய அன்னை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே—முன்பு இந்த அமைச்சகத்திற்குக்கூட மின் துறை அமைச்சகம் என்றுதான் பெயர் இருந்தது—மரபுசாரா எரிசக்தித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காகவே இன்றைக்கு மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தித் துறை என்றுதான் இந்த அமைச்சகத்தின் பெயர் மாற்றப்பட்டு அழைக்கப்படுகின்றதேயொழிய, மின் துறை என்று அழைக்கப்படுவதில்லை. எனவே. நம்முடைய போற்றுதலுக்குரிய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்ததன் காரணமாக, மொத்தம் கிட்டத்தட்ட 827 மெகாவாட் மின்சாரம் இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு காற்றாலை மூலமாகக் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஏறக்குறைய உயிரியல் சக்தி என்று சொல்லக்கூடிய Bio-mass மூலமாக 154 மெகாவாட்டும், சூரிய சக்தியின் மூலமாக 165 கிலோவாட்டும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக. 571 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. தி.மு.க. ஆட்சியிலே ஏறக்குறைய 256 மெகாவாட் மின்சாரம் கிடைக்கப்பெற்றது. எனவே ஒட்டுமொத்தமாக இந்திய அளவிலே ஒப்பிடும்போது, 61 சதவீதம் காற்றாலைகள் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்றன. மேற்கொண்டும் காற்றாலைகள் நிறுவி தமிழ்நாட்டிலே அந்த மின்சக்தியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவேதான் இன்றைக்கிருக்கின்ற பொருளாதாரச் சூழ்நிலையையும், நம்முடைய மின்சார வாரியத்திலே இருக்கின்ற பொருளாதாரச் சூழ்நிலையையும், மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு மட்டும் ஒன்பதரை கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு இழப்பீடு. ஒரு யூனிட் மின்சாரத்திற்கு மின்சார வாரியத்திற்கு நஷ்டம், விநியோகிப்பதன் மூலம், 95 காசுகள். மாதம் ஏறக்குறைய 250 கோடி ரூபாய் ரொக்கப் பற்றாக்குறை. ஏறக்குறைய 4,938 கோடி ரூபாய் ஒவ்வோராண்டும். முந்தைய ஆட்சியாளர்கள் தங்களுடைய நிர்வாகச் சீர்கேட்டினால், இந்த ஆண்டு நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டதோடு மட்டுமல்லாமல் பெருத்த கடனையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். 1,988 கோடி ரூபாய். N.L.C. Power Grid Corporation, N.P.T.C., Coal India Limited ஆகிய அத்தனை நிறுவனங்களுக்கும் சேர்த்து ஏறக்குறைய 1,988 கோடி ரூபாய் கடனைத் தரவேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக, இப்படிப்பட்ட நிலையிலேயும்கூட, அந்தத் தொழில் நசிந்து விடக்கூடாது என்பதற்காக நம்முடைய அம்மா புரட்சித் தலைவி அவர்கள் 11-7-2001 அன்று நடந்த ஆய்வுக் கூட்டத்தில் காற்றாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்திற்கு, அந்தத் தொழிலுக்கு ஒரு புத்துணர்ச்சி அளிக்கும் வகையிலும், அந்தக் காற்றாலைத் தொழில் நசிந்து போகாமல் பாதுகாக்கவும் ஒரு புதிய கொள்கையை வகுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நாளையதினம் மின்சார வாரியத்தின் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. அந்த வாரியக் கூட்டத்திலே ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டு, அந்தத் தொழில் நசியாமல் முழுப் பாதுகாப்பு அளித்து அந்தத் தொழிலை வாழ வைத்து, வளர வைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரபுசாரா மின்சக்தி உற்பத்தி என்கிற வகையில் மதுரையில் அவணியாபுரம் பகுதியில் குப்பையிலிருந்து மின்சாரம் எடுப்பது என்பதும், மதுரையிலிருந்து தேனி செல்லும் வழியில் ஆண்டிப்பட்டி கணவாய் பகுதியில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட்டால்தான் அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

[2001 செப்டம்பர் 14

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது. குறிப்பாக என்னுடைய இராதாபுரம் தொகுதியிலும், தோவாளைப் பகுதியிலும்தான் மிக அதிகமாக இந்த மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால், கடந்த கால ஆட்சியில் reactive power *10* காசாக இருந்ததை *90* காசாகவும், Banking system-ஐ மாற்றி அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய subsidy-ஐயும் கொடுக்காத காரணத்தினால் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற தொழிலுக்குத் தொழிலதிபர்கள் வரத் தவறிவிட்டார்கள். பிற மாநிலங்களில் third party sale, *3*-வது நபருக்கு மின்சாரத்தை விற்கின்ற உரிமையும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் பிற மாநிலங்கள் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்கின்றவர்களை encourage செய்கின்றன. தமிழக அரசில் நம்முடைய மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள் *1991-96*-ல் முதல்வராக இருந்தபோதுதான் மிக அதிகமாகக் காற்றாலைகள் எங்களுடைய பகுதியிலே வந்தன. மீண்டும் அந்தத் தொழில் வளர்வதற்காக அந்தத் தொழிலதிபர்களுக்கு, ஒரு ரூபாய் கூட நாம் கொடுக்க வேண்டாம். அத்தனை செலவுகளையும் அவர்களே செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதால் இதுதான் மிகவும்—அரசுக்கு ஒரு ரூபாய் கூட இழப்பில்லாமல் மிக—அதிகமான மின் உற்பத்தியைச் செய்யக்கூடிய ஒரு பணி. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்கூட தமிழகத்தில் *5,000* மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை கயத்தாறிலே நடந்த நிகழ்ச்சியிலே கூறியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

*முற்பகல் 10-50*

**திரு. மு. அப்பாவு:** *1991-96*-ல் நடைபெற்றது போன்று, இன்றைய முதல்வர் அவர்கள் அந்தத் தொழிலை ஊக்குவிப்பார்களா என்று கேட்பதோடு அவர்களுக்கு....

**ாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்பதோடு என்பதுடன் முடித்துக்கொள்ளுங்கள், அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை hird party sales அதாவது மூன்றாவது party-க்கு விற்பது பற்றி நம்முடைய றுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இலவசமாக மின்சாரம்



2001 செப்டம்பர் 14]

வழங்குவதன் மூலம் எந்த அளவிற்கு ஒரு சிரமத்தை நம்முடைய மின்சார வாரியம் எதிர்கொண்டிருக்கிறது என்பதெல்லாம் நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே *5,000* தொழிலதிபர்கள் தமிழ்நாட்டிலே கொடுக்கின்ற வருவாயைக் கொண்டுதான் இன்றைக்கு மின்சார வாரியத்தின் *1* இலட்சம் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகின்ற நிலைமை. எனவே, காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற அந்த மின்சாரத்தை third party sales மூன்றாவது party-க்கு தொழிற்சாலைகளுக்கு அவர்கள் விநியோகிக்கலாம் என்கிற உத்தரவு வழங்குகிறபோது மின்சார வாரியத்தினுடைய நலன் முழுமையாகப் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை. ஆனால், அவர்களுக்கு ஒரு யோசனை. மத்தியிலே Power Trading Corporation என்று ஒன்று இருக்கிறது. P.T.C. என்று சொல்வார்கள். எனவே அந்த Power Trading Corporation அமைப்புடன் அவர்கள் ஓர் உடன்பாடு வைத்துக் கொண்டு, நம்முடைய தமிழ்நாட்டிற்கு வெளியே கேரளாவிற்கு மின்சாரம் கொடுக்கலாம், கர்நாடகாவிற்கு மின்சாரம் கொடுக்கலாம், ஆந்திராவிற்கு மின்சாரம் கொடுக்கலாம். இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் grid connection இருக்கின்ற காரணத்தினால், எங்கு வேண்டுமானாலும் மின்சாரத்தை அனுப்புகின்ற ஒரு நிலைமையிருக்கிற காரணத்தினால், நம்முடைய உறுப்பினர், காற்றாலை நிறுவுகிற அந்தத் தொழிலதிபர்களுக்குச் சொல்லி P.T.C. யுடன் ஒரு tie-up செய்து கொண்டு அவர்கள் வெளி மாநிலங்களுக்கு மின்சாரத்தை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், எங்களுக்கு எந்தவித ஆட்சபேணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதைகுழியில் விழுந்து கிடக்கின்ற காற்றாலைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்படும் என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் சொன்னார். அதற்கு மிக்க நன்றி. ஆனால், புதிய காற்றாலைகள் நிறுவுவதற்கு மின்சார வாரியம் N.O.C. அளிக்க மறுத்து வருவதோடு. அவர்கள் power purchase price என்பதனை யூனிட்டிற்கு ரூ.*2.25* காசு என்னும் வகையிலே ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்திலே கையொப்பம் இட்டால்தான் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்ற நிலை இருந்து வருகிறது. ஆகவே price parity வரவேண்டும் என்பதற்காக, இதர காற்றாலைகளைப் போல இவர்களுக்கு ரூ.*2.70* காசு என்னும் அடிப்படையிலே price வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு அது நிலுவையிலே இருந்து வருகிறது. இந்த நிலையிலே, இதர காற்றாலைகளுக்கும் ரூ.*2.25* என்ற

குறைத்து வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணமா அல்லது வேறு ஏதேனும் பின்னணி இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள முற்படுவதோடு, M.N.E.S. Guidelines-படி 1-12-2001...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேஸ்வரி கேள்வியோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமாகப் பார்த்தால் உடன்பாட்டின்படி ரூ.2.70 பைசா ஒரு யூனிட்டுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால், அவர்களே சொல்லிவிட்டார்கள், மின்சார வாரியத்தில் இன்றைக்குப் பெருத்த நிதிப் பற்றாக்குறை இருக்கிற சூழ்நிலையிலே அதுபோன்று வழங்கப்படாது என்று. இருக்கின்ற நிலை நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்காகத்தான் ஓர் உடன்பாடு. இன்றைக்கு ரூ.2.25 காசு வாங்கிக்கொள்ளுங்கள். நிதி நிலைமை சீரான பின்பு ரூ.2.70 தருவோம் என்று அவர்களுக்கெல்லாம் சொல்லப்பட்டது. எனவே, நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, இப்பொழுது ரூ.2.25 காசுக்கு வாங்கிக் கொள்ளுங்கள், Balance amount நிதி நிலைமை சீரான பின்பு நிச்சயமாக உங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த Wheeling பண்ணுகிற charges அதிகமான அளவிற்கு, ஏற்றாத அளவிற்கு—இது மக்களுடைய அரசு, மக்களுக்காகத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டம் போடுவார்கள். எனவே, கொள்கைகள் வெளி வந்த பிறகு அதிலே ஏதாவது ஒரு மாற்றம் தேவைப்பட்டாலும்கூட—நம்முடைய அம்மா அவர்கள் உங்களுக்கு ஏற்ற வகையிலே நிச்சயமாகச் செய்து கொடுப்பார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே வந்து சொன்னபோது எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்குக் கடந்த காலத்திலே 'செவிடன் காதிலே ஊதிய சங்கு' போல ஏறக்குறைய கேட்பாரற்றுக் கிடந்த நிலைமை. ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு எடுத்து வந்த உடனேயே, காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் காற்றாலை தயாரிப்பாளர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினார்கள்; செயலாளரோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள்; மின்சார வாரியத்தினுடைய தலைவரோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். எனவே, அந்தப் பேச்சுவார்த்தையினுடைய கருத்தையெல்லாம் கவனத்திலே கொண்டுதான் கொள்கைகள் தயாரிக்கப்பட்டன. அதிலே ஏதாவது



இருந்தாலும்கூட அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு எடுத்து வந்தால், நிச்சயமாக உங்களுக்கு ஏற்ற வகையிலே அதைச் செய்து கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் இடங்கள், தமிழகத்திலே அதற்குத் தகுதியான இடங்கள் எவை எவை என்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றனவா? அப்படி அடையாளம் காணப்பட்டிருந்தால், அந்த இடங்கள் எவை எவை என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Centre for Wind Energy Technology சென்னையிலே இருக்கின்றது. சென்னையில் இருக்கின்ற அந்த Centre for Wind Energy Technology நிலையத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் சென்று, அவருக்குத் தேவையான இதுபோன்ற தகவல்களைக் கேட்டு, எந்தெந்த இடங்களில் எல்லாம் போட முடியுமோ அந்தந்த இடங்களில் போட்டால் அரசு ஊக்குவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் காற்றாலைகளை ஏற்படுத்த அரசே முன்வந்து, இடமெல்லாம் ஏற்பாடு செய்து, இராமர் பாதம் என்கிற இடத்தில் காற்று அதிகமாக வருகிறது என்று கண்டுபிடித்து, அங்கே ஒரு காற்றாடி, அதாவது Wind Mill போடுவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் 10 ஆண்டுகளுக்கு முன்பு செய்து கொண்டிருந்தார்கள். அங்கேயுள்ள நிலங்களை எல்லாம் மிக அதிகப்படியான விலைக்குக்கூட பலர் வாங்கி விட்டார்கள். நம்முடைய மின்வாரியம்கூட மிகப் பெரிய ஒரு போர்டு தங்கச்சிமடம் பக்கத்தில் போட்டிருந்தார்கள். அங்கே ஒரு போர்டு போட்டு, இங்கே காற்றாலைத் தொழிற்சாலை வர இருக்கிறது என்று அறிவித்திருந்தார்கள். இப்போது அந்த போர்டையும் காணவில்லை. அந்தத் தொழிற்சாலை வருவதற்கான அறிகுறியும் காணோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அந்த இடத்தில் காற்றாலை பிளேடு சுற்ற வேண்டிய அளவிற்குக் காற்று உள்ளதா என்பதை ஆய்ந்தறிவதற்கு, Centre for Wind Energy Technology-க்கு உறுப்பினருடைய கோரிக்கை அனுப்பப்படும். அந்த இடத்திலே காற்றாலை போடக்கூடிய அளவிற்கு சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதை அவர்கள் ஆய்ந்து சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் காற்றாலை போடுகின்ற enterpreneur, அதாவது தொழில் முனைவோரை, அவர்கள் ஊக்கப்படுத்துகின்ற வகையிலே சொன்னால் அவர்கள் போடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமாநிலத்திலிருந்து காற்றாலை அமைப்பதற்காக இங்கே அரசிடத்திலே பேச்சுவார்த்தை நடத்த வந்த 650 தொழில் முனைவோர்களிடத்திலே அரசு சரியான முறையிலே பேச்சுவார்த்தை நடத்தாமல் Power Purchase Agreement போடுவதற்குத் தயாராக இல்லாத நிலையில் அவர்கள் திரும்பிப் போய்விட்டதினாலே தமிழ்நாட்டிற்கு பெரிய பாதிப்பு என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றனவே, அது உண்மையா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கெனவே பதில் சொன்னதுபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்—வேலூரிலே நடைபெற்ற ஒரு விழாவைப் பற்றி பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அதைத்தான் உறுப்பினர்—குறிப்பிடுகின்றார்கள். அந்த விவரம் இந்த 3 மாதங்களில் என்னுடைய தகவலுக்கு வரவில்லை. எனவே, அது உண்மையா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலைகள் மூலமாக மின் உற்பத்தி செய்வதிலே தொழிலாளர்களுக்கு இன்றியமையாத ஒரு பங்குண்டு என்பதை அரசும் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். ஆனால் தகுதியுள்ள பல தொழிலாளர்கள் 10 ஆண்டு காலம் வேலை செய்ததற்குப் பிறகும், அவர்கள் 5 ஆண்டு காலம் தொடர்ச்சியாக போனஸ் பெற்றதற்குப் பிறகும், பல தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும்,





அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களையே நேரில் சந்தித்து மனுக்கள் கொடுத்ததற்குப் பிறகும் இன்னும் அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் தெரிகிறது. அவர்களுடைய நிலையை அனுதாபத்தோடு பரிசீலித்து அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காலித் கமிஷன் என்று ஒன்று உள்ளது. அதனுடைய அறிக்கையின்படி தினக்கூலிகளாகப் பணிபுரிந்தவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். பல இடங்களிலே அவர்கள் இன்னும் தினக்கூலி அடிப்படையிலே பணி புரிவதாக அரசினுடைய கவனத்திற்கு எடுத்து வரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நிதிநிலைமை சீராக இல்லாத சூழ்நிலையுள்ளது. நிதி நிலைமை சீராக ஆகும் பட்சத்தில் அவர்களுடைய கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரபுசாரா எரிசக்தி மூலம், காற்றாலை மூலம் நம்முடைய தமிழ்நாட்டிற்கு எவ்வளவு மின்சாரம் கிடைக்கிறது? அதேபோல கரும்புச் சக்கை, சாணம் மற்றும் குப்பைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

குறுகிய கால வினா எண் 8, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**8—**

**மனை ஒதுக்கீடு**

***14682—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 14

(அ) 1996 ஆம் ஆண்டு முதல் 2001 மே மாதம் வரை சென்னை பெசன்ட் நகரில் எவ்வளவு மனைகள் வீட்டு வசதி வாரியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டன?

(ஆ) யார், யாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன?

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 17 நபர்களுக்கு வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விவரம்:—

1998 ஆம் ஆண்டு பெசன்ட் நகரிலே 17 வீட்டுமனைகள்—மன்னிக்கவும்—மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற அனைத்து மனைகளுமே அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டின் கீழே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எந்தவிதமான அரசாணையும் இல்லாமல், கடந்த கால ஆட்சியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீட்டு வசதித் துறை அமைச்சர், தங்கள் அலுவலகத்தில் கொடுத்திருக்கிற அந்த விடையை மட்டும் சொன்னால் போதும். நீங்கள் அனுப்பியிருக்கிற அந்த விடையை மட்டும் வாசித்தால் போதும்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** யார் யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் பொன்மணி வைரமுத்து, விஸ்வநாதன், ராமச்சந்திரன், பாலசுப்பிரமணியம், திருமதி கண்ணம்மாள், ராகவன், ஆனந்தகுமார், கபிலன், சந்திரசேகர், ராஜாமணி தங்கபாண்டியன், நிர்மலா பெரியசாமி, அழகு மாணிக்கம், பொன்னுசாமி, ஆனந்த், மகாலிங்கம், ரவிச்சந்திரன், கோபால் போன்றவர்களுக்கு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் கடந்த கால ஆட்சியில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெசன்ட் நகரில் வீட்டு வசதி வாரியத்தால் அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில் மார்க்கெட் விலை ரூபாய் 18 இலட்சம் என்று இருந்தபோதும்,



2001 செப்டம்பர் 14]

அப்பகுதி வாரிய அலுவலகம் அதன் மதிப்பைக் குறைத்து ரூபாய் 18 இலட்சம் என்று நிர்ணயித்து இருக்கிறது. வீட்டு வசதி வாரியமோ அதை அடிமாட்டு விலைக்கு, ரூபாய் ஐந்து இலட்சத்து 88 ஆயிரம் என்று, நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதுமட்டுமல்ல. ஏற்கெனவே வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கே மீண்டும் ஒதுக்கீடு தரப்பட்டிருப்பதாகத் தகவல் தெரிய வருகிறது. ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், அப்படி ஏதாவது ஒதுக்கீடு பெற்றவர்களுக்கே மீண்டும் ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெசன்ட் நகர் பகுதியில் நிலத்தினுடைய Guideline value ஒரு கிரவுண்டுக்கு 48,16,800 ரூபாய் ஆகும். இப்படி 48,16,800 ரூபாய் என்ற அந்த Guideline value மதிப்பிலான இடத்தை கடந்த கால ஆட்சியிலே 8,88,000 ரூபாய்க்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நம்முடைய வாரியத்திலே ஒதுக்கீடு கேட்கிறவர்களுக்குச் சொந்தமாக வீடுகள் இருக்கக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு அதை அறிவிக்கிறேன் 1979 ஆம் ஆண்டு அரசாணை எண் 2063-ன்படி, வீடு மற்றும் மனைகள் ஒதுக்கீட்டுக்காக விண்ணப்பிப்பவர்களின், மனைவிக்கோ, கணவர் மற்றும் அவர்களுடைய மைனர் குழந்தைகளுக்கோ மாநகராட்சி, A Grade, நகராட்சி, Special Grade, நகராட்சி மற்றும் இந்தியாவினுடைய மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற தலைநகரங்களிலே சொந்தமாக வீடுகள் இருக்கக்கூடாது என்று அரசாணை இருக்கிறது. இந்த அரசாணையை மீறி, பொன்மணி வைரமுத்து என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பொன்மணி வைரமுத்துவிற்கு சென்னை மாநகராட்சியிலே, வீட்டு எண் 15, 4-வது குறுக்குச் சாலை, டிரஸ்ட்புரம், சென்னையிலே, சொந்தமாக ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டிற்குண்டான ஆதாரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. 17-11-1995-ல் அவர் குடியிருக்கிற அந்த வீட்டிற்குக் கூடுதல் தளங்களைக் கட்ட வேண்டுமென்பதற்காக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு, வரைபட ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற விண்ணப்பம் இன்னும் நிலுவையிலே இருக்கிறது. தள்ளுபடி செய்யப்பட்டு தற்சமயம் புது Regularisation Scheme-லே 2000-லே அவர் மனு செய்திருக்கிறார். ஆக இப்படி வீடுகள் இருப்பவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள். கடந்த 2 நாட்களுக்கு முன்னாலே, முன்னாள் முதலமைச்சர்....

[2001 செப்டம்பர் 14

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் மட்டும் சொல்லி முடித்தால் போதும்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர், வைரமுத்து அவர்களுடைய நூல் வெளியீட்டு விழாவிலே பேசுகின்றபோது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்களே, பதிலை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** பதிலுக்குத்தான் நான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம், வேண்டாம்; கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. நீங்கள் விளக்கம் மட்டும் சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** இப்படி வீடுகள் இருப்பவர்களுக்கு மொத்தமாக 17 மனைகளை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கீடு செய்ததன் மூலமாக, 10 கோடியே 2 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கடந்த கால ஆட்சியிலே இப்படிப்பட்ட பல்வேறு முறைகேடுகளையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்குரிய பதில் மட்டும் போதும். மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக இன்னொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லத்தீப் அவர்களே, நீங்கள் உட்காருங்கள், திரு. சேகர்பாபு அவர்கள் இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறார்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏற்கெனவே, அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில், பெற்றிருக்கிற ஒதுக்கீடுதாரர்களுக்கு மீண்டும் வீட்டுமனைகள் சட்ட விரோதமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாலும், வாரியத்திற்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாலும், அந்த ஒதுக்கீடுகள் இரத்து செய்யப்படுமா? சட்ட விரோதமாக அரசு மனைகளை ஒதுக்கீடு செய்தவர்கள் மீது, மாண்புமிகு மனித புனிதவதி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நடைபெற்றிருக்கின்ற முறைகேடுகளை எல்லாம், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று, சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்யப்பெற்றவர்களில் 17 பேர்களின் பெயர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மனைகளை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று, எத்தனை பேர் மனு செய்தார்கள். அந்த மொத்த நபர்களிலே, 17 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதனுடைய அடிப்படை என்ன? இந்த பெசன்ட் நகர்ப் பகுதியிலே நடந்திருக்கிற, இந்த முறைகேட்டை அரசு கவனத்தில்கொண்டு, வேறு இடங்களில் இத்தகைய முறைகேடுகள் நடந்துள்ளனவா என்பதை ஆய்வு செய்யுமா? அல்லது ஆய்வு செய்திருக்கிறதா? முறைகேடுகள் என்ற அடிப்படையிலே, ஒருசிலருடைய பெயர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த ஒதுக்கீட்டை இரத்து செய்வதற்கும், மற்ற ஒதுக்கீடுகளை மறு ஆய்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு உரிய முறையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீட்டைச் செய்கிறபோது, முறையாக விளம்பரம் செய்யாமல், தங்களுக்கு வேண்டியவர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்களைப் பெற்று அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டின் அடிப்படையின்கீழே ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆகையினாலே முறையாக, இன்னும் இதுபோன்று பல்வேறு இடங்களிலே எந்த அளவிற்கு முறையாக விண்ணப்பங்கள் பெறப்பட்டும், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாமல் இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, நடவடிக்கை எடுக்க இவ்வரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 14

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதித் துறையின் மூலமாக **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. குற்றச்சாட்டு கூடாது. மாண்புமிகு உறுப்பினர் மணி. (கூச்சல்-குழப்பம்) முடியாது, முடியாது. (கூச்சல்-குழப்பம்) கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். முடியாது. (கூச்சல்-குழப்பம்).

## (இ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (நான்காம் பட்டியல்)*

### பெண் உதவி ஆய்வாளர்கள்

1—

**வினா 141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் வரை எவ்வளவு பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்?

(ஆ) இன்னும் எவ்வளவு பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் பயிற்சியில் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் வரை 127 பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) 2001 ஆம் ஆண்டு மே மாதம் 86 பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் பயிற்சியில் உள்ளார்கள். அவர்கள் வெற்றிகரமாகப் பயிற்சி முடித்தபின் பணியில் சேர்க்கப்படுவார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2001 செப்டம்பர் 14]

2—

### தண்டனை

**வினா 4784—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளாகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) கடந்த 10 ஆண்டுகளில் (1991-2000) தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மொத்தம் 75 பேர்.

(ஆ) அதில் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் மொத்தம் 2 பேர்.

3—

### கருணை மனு

**வினா 4786—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 10 ஆண்டுகளில் தூக்குத் தண்டனை பெற்று, ஜனாதிபதிக்குக் கருணை மனு போட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் விடுதலை அல்லது தண்டனைக் குறைப்புப் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) கடந்த 10 ஆண்டுகளில் (1991-2000) தூக்குத்தண்டனை பெற்று, ஜனாதிபதிக்கு கருணை மனு போட்டவர்கள் [illegible] ர்.

[2001 செப்டம்பர் 14

(ஆ) அதில் விடுதலை அடைந்தவர் யாரும் இல்லை. ஒருவர் மட்டும் தண்டனைக் குறைப்பு பெற்றுள்ளார். அவரது தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

4—

**புதிய நூலகங்கள்**

**வினா 303—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எவ்வளவு புதிய நூலகங்களை அரசு திறந்துள்ளது?

(ஆ) அவற்றிற்கு எவ்வளவு மதிப்புள்ள புத்தகங்களை அரசு வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் கிளை நூலகங்கள் - 10, ஊர்ப்புற நூலகங்கள்-42 மற்றும் பகுதிநேர நூலகங்கள் 19. ஆக மொத்தம் 71 நூலகங்கள் அரசால் திறக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நூலகங்களுக்கு ரூ.22,80,300/- மதிப்புள்ள நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

5—

**உயர்நிலைப் பள்ளிகள்**

**வினா 312—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எத்தனை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் 2001-2002-ல் எத்தனை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும்?



2001 செப்டம்பர் 14]

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001-ம் ஆண்டு சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளியாகச் செயல்படவும், ஆக மொத்தம் மூன்று கருத்துருக்கள் பெறப்பட்டன.

(ஆ) அவைகளில் 2000-2001-ம் ஆண்டில் இரண்டு பள்ளிகளும், 2001-2002-ல் ஒரு பள்ளியும், ஆக மூன்று பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட்டு விட்டன.

6—

**கழிப்பறைகள்**

**வினா 1320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடப் பற்றாக்குறை உள்ளதால் மேலும் சில கழிப்பறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை வசதி கட்டடங்களைக் கட்டிக்கொடுக்கக் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மூலம் கடனுதவி பெற்று செயலாக்கும் திட்டத்தில் இப்பள்ளி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கடனுதவி பெறப்படின் இத்திட்டம் செயலாக்கப்படும்.

7—

**கோயில் வருவாய்**

**வினா 337—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 14

சென்னையில் உள்ள வடபழனி கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் வசூலான தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 2001-ம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் கீழ்க்காணும் தொகை வசூலாகியுள்ளது:

| | | | ரூ. பை. |
|---|---|---|---|
| | உண்டியல் மூலம் வரவு | | |
| 1. | ஜனவரி 2001 | .. | 9,50,496.50 |
| 2. | பிப்ரவரி 2001 | .. | .. |
| 3. | மார்ச் 2001 | .. | 7,94,742.10 |
| 4. | ஏப்ரல் 2001 | .. | — |
| | மொத்தம் | | **17,45,238.60** |
| | சிறப்புக் கட்டணம் மூலம் வசூல் | | |
| 1. | ஜனவரி 2001 | .. | 3,42,800.00 |
| 2. | பிப்ரவரி 2001. | | 1,28,535.00 |
| 3. | மார்ச் 2001 | .. | 1,11,315.00 |
| 4. | ஏப்ரல் 2001 | .. | 1,16,270.00 |
| | மொத்தம் | | **ரூ. 6,98,920.00** |

திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை உண்டியல் மற்றும் சிறப்புக் கட்டணம் மூலம் ரூ.24,44,158.60 வசூலாகியுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



2001 செப்டம்பர் 14]

8—

**மாணவர்கள் விவரம்**

**வினா 366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் நடத்தப்பட்டுவரும் காது கேளாதோர் வாய் பேசாதோர் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 14-2-1972 முதல் நடத்தப்பட்டு வரும் காது கேளாதோர் வாய் பேசாதோர் பள்ளியில் 42 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

(ஆ) மேற்படி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், எழுது பொருட்கள், உணவு, சீருடை, தங்குமிடம் மற்றும் மருத்துவம் ஆகிய அனைத்தும் திருக்கோயில் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளியில் ஆறு ஆசிரியைகளும், காப்பாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு ஊதியம் திருக்கோயில் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் காது கேளாதோர் பள்ளியில் மாணவர்களுக்கு 1 முதல் 5 வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுச் செலவாக ரூ.600/- வீதம் 42 மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.25,200/- வீதம் 2000-2001-ஆம் கல்வியாண்டில் ரூ.3,02,400/- செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சீருடைக்கு ரூ.9,053/-ம் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இங்கு பணிபுரியும் ஆசிரியைகள் மற்றும் காப்பாளர் ஆகியவர்களுக்கு ஊதியமாக இந்த ஆண்டில் ரூ.6,15,012/- செலவிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 14

9—

## பிறந்த குழந்தைகள் விவரம்

**வினா 2398—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகள் எத்தனை?

(ஆ) அதில் பெண் குழந்தைகள் எத்தனை? ஆண் குழந்தைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் 811 குழந்தைகள் பிறந்துள்ளன.

(ஆ) அவற்றில் ஆண் குழந்தைகள் 410, பெண் குழந்தைகள் 401.

10—

## கிணறுகள்

**வினா 105—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியைச் சேர்ந்த கிராமப் பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் நீர் ஆதாரம் இல்லாதவை எத்தனை?

(இ) அவைகளுக்கு மாற்று ஏற்பாடு செய்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில்,



2001 செப்டம்பர் 14]

| | | |
|---|---|---|
| 1. | மொத்தம் உள்ள குடியிருப்புகள் | 56 |
| 2. | மின்விசை இறைப்பான் திட்டங்கள் | 21 |
| 3. | கையிறைப்பான்கள் | 105 |

(ஆ) ஆறு குடியிருப்புகளில் நீராதாரம் குறைவாக உள்ளது. இந்த ஆறு குடியிருப்புகளிலும் மக்கட்தொகை அடிப்படையில் கணக்கிடும் பொழுது கைப்பம்புகளிலிருந்து கிடைக்கும் நீரின் அளவு போதுமானதாக இல்லை.

(இ) மேற்கண்ட நீராதாரம் இல்லாத பகுதிகளுக்கு மேலும் குழாய் கிணறுகள் அமைக்க தொழில் நுட்ப ரீதியாக சாத்தியக் கூறு இல்லாததால், மாற்று ஏற்பாடாக இடங்கணசாலை பேரூராட்சி முழுவதும் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் முழுமையாக காவேரி ஆற்றுக் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

11—

## குடிநீர்

**வினா 377—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2000-2001-ல் இராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எத்தனை ஊர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) 2001-2002-ல் விடுபட்ட கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் 2000-2001-ல் இராஜீவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பொதுமக்களின் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன:

[2001 செப்டம்பர் 14

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் | பஞ்சாயத்து | குடியிருப்பு | மக்கட்தொகை |
|---|---|---|---|---|
| 1. | எடப்பாடி | இருப்பாளி | இருப்பாளி | 900 |
| 2. | ” | ” | அக்கரைப்பட்டி | 275 |
| 3. | ” | ” | மலர்காட்டான் தெரு | 310 |
| 4. | ” | ” | பெருமாள்கோயில்காடு | 250 |
| 5. | ” | ” | கவுண்டர் தெரு | 315 |
| 6. | | ” | கருங்கரடு | 183 |
| | | | மொத்தம் .. | 2233 |

(ஆ) காவிரி ஆற்றை நீராதாரமாகக்கொண்டு தற்போது செயலாக்கத்தில் உள்ள இருப்பாளி மற்றும் 236 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் எடப்பாடி தொகுதியில் உள்ள 100 குடியிருப்புகள் பயன்பெற உள்ளன. மேலும் இது தவிர இருப்பாளி மற்றும் 236 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வழியோர மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட கீழ்க்கண்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க ரூ.1136.62 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

1. மகுடஞ்சாவடி ஒன்றியம் 175 கிராம குடியிருப்புகள்
2. எடப்பாடி 97 கிராம குடியிருப்புகள்
3. கொங்கணாபுரம் 107 கிராம குடியிருப்புகள்.

ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

**12—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 883—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 செப்டம்பர் 14]

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள ஏழை எளிய மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு மத்திய அரசால் நிர்ணயம் செய்து அனுப்பப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கிராமப்புற ஏழை மக்களுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதே போன்று பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊரகக் குடியிருப்புப் பகுதியின்கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2001-2002-ம் நிதி ஆண்டுக்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.63.17 கோடி செலவில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 30,869 வீடுகளும், பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.22.22 கோடி செலவில் 6,895 வீடுகளும் கட்டித்தரப்படும்.

**13—**

## வேலைவாய்ப்பு பதிவு

**வினா 4016—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு மையத்தில் பதிவு செய்துகொள்வதற்கான தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதா என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொள்வதற்கான கல்வித் தகுதிகள், வயது வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் முதல் முதுநிலைப்பட்டம் அதற்கு மேலே தகுதியுடையோர் கூட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம்.

14—

## கடன் உதவி

**வினா 133—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 2000-2001-ஆம் ஆண்டு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் எத்தனை பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது? தொகை எவ்வளவு?

(ஆ) அதை விரிவுபடுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001-ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்தில் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 31-5-2001 வரை 520 நபர்களுக்கு ரூ.276.42 இலட்சங்கள் கடனாக வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் திட்ட மதிப்பீட்டில் 15% அல்லது ரூ.7,500/- இதில் எது மிகுதியாக உள்ளதோ, அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட 520 நபர்களுக்கு மானியமாக ரூ.32,07,600/- வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு கடன் வழங்கும் காலத்தை 31-10-2001 ஆகக் குறிப்பிட்டுள்ளது. எனவே, கடன் வழங்கப்பட்டோரின் எண்ணிக்கையும் தொகையும், மேலும் உயரும்.

(ஆ) 2001-2002-ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு 800 நபர்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டும் என இலக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் கடன் பெற்று பயனடைவோர் எண்ணிக்கை உயரும். இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்/ மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

15—

## பதிவுக் கட்டணம்

**வினா 817—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வீட்டு மனைகளை விற்றல், வாங்கல் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தற்போதுள்ள பத்திரப்பதிவுக் கட்டணத்தை 13 சதவிகிதத்தில் இருந்து குறைக்கவும், வரன்முறையற்ற நிபந்தனைகளை நீக்கி எளிமைப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

விற்பனை ஆவணங்களுக்குப் பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிப் பகுதிகளுக்கு 13 சதவிகிதமும் ஏனைய பகுதிகளுக்கும் 12 சதவிகிதமும் முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது. இதனைக் குறைக்கும் கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மற்றும் நடுத்தர மக்களுக்கும் பயன்படும் வகையில் அரசாணை (நிலை) எண் 220, வணிக வரித் துறை, நாள் 27-7-1998-ல் ரூ.3000/- வரை மதிப்புள்ள கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பதிவு நடைமுறையை எளிமைப்படுத்த கணினிமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

16—

## கட்டட வசதி

**வினா 2412—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் ஒரே வளாகத்தில் வட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் குடியிருப்பு, தீயணைப்பு நிலையம் மற்றும் துணைக் கருவூலம், கிளை சிறைச்சாலை, நீதிமன்றங்கள், நீதிபதிகள் குடியிருப்பு மற்றும் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அரசு அலுவலகங்கள் அமையுமாறு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தி நீண்ட காலமாகப் பயன்படுத்தாமல் உள்ள பவானி சாலைப் பகுதியில் உள்ள நிலத்தைக் கையகப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

17—

**தூர் வாரும் பணிகள்**

**வினா 145—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட ஏரிகளில் தூர் வாரியது மற்றும் தூர் வாராதது எத்தனை?

(ஆ) அவைகளை இந்த நிதியாண்டில் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதிக்குள் பொதுப் பணித் துறையால் பராமரித்து வரும் ஏரிகள் 9 ஆகும். இதில் இரண்டு ஏரிகள் தூர் வாரப்பட்டுள்ளன. மீதம் ஏழு ஏரிகள் தூர் வாரப்படவில்லை.

தூர் வாரிய ஏரிகள் விவரம்

1. எடப்பாடி பெரிய ஏரி
2. வெள்ளாளபுரம் ஏரி

தூர் வாராத ஏரிகள்

1. தொண்டயாம்பட்டி ஏரி
2. வேம்பனேரி ஏரி
3. ஆச்சம்பட்டி ஏரி
4. குண்டனேரி ஏரி





5. ஆச்சம்பள்ளி ஏரி
6. கோனேரிப்பட்டி பெரிய ஏரி
7. கோரணாம்பட்டி ஏரி

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் மீதி ஏரிகளில் தூர் வாருதல் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

18—

**குளத்தைத் தூர் வாருதல்**

**வினா 1787—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வெள்ளியன்வலசு குளம், நபார்டு திட்டத்தின் மூலமாகத் தூர் வாரும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வெள்ளியன்வலசு குளம், நபார்டு திட்டத்தின் மூலமாகத் தூர் வாரும் பணி அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

19—

**கருவேல மரங்கள்**

**வினா 1108—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரிகளில் வளர்க்கப்பட்ட கருவேலன் மரங்களை ஏலம் விட்டதில் அரசுக்கு வந்த வருவாய் எவ்வளவு?

(ஆ) வருவாயைப் பெருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2001 செப்டம்பர் 14

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வனத் துறையில் பண்ணைக் காடுகள் மற்றும் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏரி மற்றும் குளங்களில் தோற்றுவிக்கப்பட்ட கருவேல தோட்டங்கள் 10 ஆண்டு சுழற்சி அடிப்படையில் பொது ஏலம் மூலம் ஆண்டுதோறும் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்படுகிறது. 2000-2001-ம் ஆண்டு கருவேல மரத் தோட்டங்கள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டதில் அரசுக்கு சுமார் ரூ.13.55 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) 1996-ம் ஆண்டு முதல் ஏரி மற்றும் குளங்களின் படுகைகளில் கருவேல தோட்டம் நடவு செய்ய அரசு தடை விதித்துள்ளதால் இக்கேள்வி எழவில்லை.

20—

### மூன்று சக்கர மிதிவண்டி

**வினா 330—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர மிதிவண்டி வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து விரைவாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

மூன்று சக்கர மிதிவண்டியின் தேவைகள் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இருப்பினும் தேவைக்கேற்ப உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2001 செப்டம்பர் 14]

21—

### திருமண நிதி உதவி

**வினா 383—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கடந்த 2000-2001-ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் நிதியுதவி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் மனு செய்தும் உதவி பெறாதவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கடந்த 2000-2001-ம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயன் பெற்றவர்கள் 15 பேர் ஆவர்.

(ஆ) மனுச் செய்தும் உதவி பெறாதவர்களின் எண்ணிக்கை 116 பேர் ஆவர்.

22—

### நிவாரணத் தொகை

**வினா 381—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 2000-2001-ஆம் ஆண்டுகளில் 'மீனவர் குழு' விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் எத்தனை மீனவர் குடும்பத்திற்கு எவ்வளவு நிவாரணத் தொகை அரசு அளித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

2000-2001-ம் ஆண்டில் மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் 294 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.47,83,000 அளிக்கப்பட்டுள்ளது.

23—

### கால்நடை மருத்துவமனை

**வினா 3669—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு, மாதனூர் ஒன்றியத்தில் பச்சகுப்பம் சர்க்கரை ஆலையில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

24—

### பேருந்து வசதி

**வினா 559—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-ஆம் ஆண்டு மே மாதம்வரை சேலம் மாவட்டத்தில் எத்தனை அரசுப் பேருந்துகள் புதிதாக இயக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-I) மூலம் 2001-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம்வரை 20 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:





| மாதம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி 2001 | 8 பேருந்துகள் |
| பிப்ரவரி 2001 | .. |
| மார்ச் 2001 | 12 பேருந்துகள் |
| ஏப்ரல் 2001 | .. |
| மே 2001 | . |
| மொத்தம் .. | 20 பேருந்துகள் |

25—

### பேருந்துகள் இயக்குதல்

**வினா 572—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து ஈரோடு வழியாக கோயம்புத்தூர் வரை அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் கோட்டம் மூலம் இயக்கப்பட்டு வந்த பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரிலிருந்து ஈரோடு வழியாக எடப்பாடிக்கு இயக்கப்பட்டு வந்த நேரடிப் பேருந்தில், பயணிகள் அடர்வு போதிய அளவு இல்லாததாலும், வருமானம் மிகக் குறைவாக இருந்தமையாலும், கடந்த 1995-ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழக அலுவலர்கள், கோவை மற்றும் ஈரோடு ஆகியோர் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கோவை-ஈரோடு வழித்தடத்தில் மட்டுமே பேருந்து இயக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. கோவை அரசுப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து தற்போது எடப்பாடிக்கு எந்த பேருந்தும் இயக்கப்படவில்லை. ஈரோட்டிலிருந்து தமிழ்நாடு அரசுப்

[2001 செப்டம்பர் 14

போக்குவரத்துக் கழகம், சேலம் மற்றும் தனியார் துறையினர் எடப்பாடிக்கு பயணிகள் அடர்வுக்கேற்ப போதிய அளவில் பேருந்துகளை இயக்கி வருகின்றனர்.

**26—**

**பேருந்து வசதி**

**வினா 574—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துக் கழகம் மூலம் எடப்பாடி முதல் திருப்பதி வரை ஒரு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் எடப்பாடி முதல் திருப்பதி வரை பேருந்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.*

தற்போது கீழ்க்கண்ட வழித்தடங்கள் எடப்பாடி அருகாமையிலுள்ள சேலத்திலிருந்து (எடப்பாடி—சேலம் தூரம் 43 கி.மீ.) திருப்பதிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

| வழித்தட எண் | மொத்தப் பேருந்துகள் | நடைகள் |
|---|---|---|
| 1. 809 சேலம்-திருப்பதி | 2 | 2 |
| 2. 849 சேலம்-திருப்பதி | 2 | 2 |
| 3. 949 சேலம்-திருப்பதி | 4 | 4 |

இந்நிலையில் எடப்பாடியிலிருந்து திருப்பதிக்குத் தனியே பேருந்து இயக்க தேவை ஏற்படவில்லை.



2001 செப்டம்பர் 14]

**(ஐ) *உடுக்குறியிட்ட வினாக்கள் விதி 51-ன்கீழ் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்று விடைகளுடன் அவைமுன் வைக்கப் பெற்றவை.**

**(மூன்றாம் பட்டியல்.)**

**1—**

**தீயணைப்பு நிலையம்**

**வினா 665—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுபேட்டையில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதிக்குட்பட்ட வெள்ளிமேடு பேட்டையைச் சுற்றி 25 கிலோமீட்டர் தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு நிலையங்கள், அதாவது கிழக்கே 13 கிலோமீட்டர் தொலைவில் திண்டிவனம், மேற்கே 20 கிலோமீட்டர் தொலைவில் செஞ்சி, தெற்கே 20 கிலோமீட்டர் தொலைவில் திருவண்ணாமலை ஆகிய மூன்று தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. எனவே, வெள்ளிமேடுபேட்டையில் ஏற்படும் தீ விபத்துக்களை மேற்கண்ட மூன்று தீயணைப்பு நிலையங்களின் ஊர்திகளைக்கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், வெள்ளிமேடு பேட்டையில் புதிதாகத் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

**2—**

**நாசரேத்தில் தீயணைப்பு நிலையம்**

**வினா 741—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாசரேத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைத்துத்தர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம் நாசரேத்தைச் சுற்றி 25 கிலோமீட்டர் தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு நிலையங்கள், அதாவது வடமேற்கே 14 கிலோமீட்டர் தொலைவில் திருவைகுண்டம், தெற்கே 20 கிலோமீட்டர் தொலைவில் சாத்தான்குளம் மற்றும் கிழக்கே 25 கிலோமீட்டர் தொலைவில் திருச்செந்தூர் ஆகிய மூன்று தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. எனவே, நாசரேத்தில் ஏற்படும் தீ விபத்துக்களை மேற்கண்ட மூன்று தீயணைப்பு நிலையங்களின் ஊர்திகளைக்கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், நாசரேத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

3—

### வாக்குச் சாவடி

**வினா 36—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம்/ சித்தூர் கிராமம் புளியம்பட்டியில் உள்ள வாக்காளர்கள் அங்கு வாக்களிக்க முடியாத நிலை உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள வாக்காளர்களுக்கு அங்கேயே ஓர் வாக்குச்சாவடி இனியாவது அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் கிராமம், புளியம்பட்டியில் உள்ள வாக்காளர்கள், அய்யமரத்துப்பட்டி என்கின்ற மொரசம்பட்டியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியில் 25 (பொ) என்ற எண் உள்ள வாக்குச்சாவடியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்தனர். தற்பொழுது புளியம்பட்டியில் பஞ்சாயத்து யூனியன் துவக்கப்பள்ளிக்கு புதிதாகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. புளியம்பட்டி கிராமத்தில் உள்ள (பிளாக் எண் 12) 689 வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக தற்போது



பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி அய்யமரத்துப்பட்டி என்கின்ற மொரசம்பட்டியில் உள்ள வாக்குச்சாவடி எண் 25 (பொ) என்ற வாக்குச்சாவடியை புளியம்பட்டி கிராமத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் துவக்கப்பள்ளிக்கு மாற்றி அமைக்கலாம் என சேலம் மாவட்ட ஆட்சியர் கருத்து தெரிவித்துள்ளார். வாக்குச்சாவடிகளில் மாற்றம் செய்வது குறித்து விரிவான அறிக்கையினையும், சான்றிதழ்களையும் சேலம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்ற பின்னர், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

4—

### நீதிமன்றம்

**வினா 134—திரு.ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டத்திற்கு எடப்பாடி நகரில் ஓர் உரிமையியல் நீதிமன்றமும், ஒரு குற்றவியல் நீதிமன்றமும் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

### வருவாய்

**வினா 1304—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசு நடத்தும் பரிசுச்சீட்டின் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு?

[2001 செப்டம்பர் 14

(ஆ) இதை வருங்காலத்தில் அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசு நடத்தும் பரிசுச்சீட்டு குலுக்கல்களின் மூலம் ரூ.49,14,82,605/- நிகர வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு குலுக்கல்களை அதிகப்படுத்தி அரசின் வருவாயை அதிகப்படுத்தும் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

6—

## வாக்குச் சாவடி

**வினா 1570—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சி, அகஸ்தியர்பட்டி பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு அந்தப் பகுதியிலேயே ஒரு வாக்குச் சாவடி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சிவந்திபுரம் ஊராட்சி, விடயக்கருக்கன்குளம் என்ற இடத்தில் 100 (ஆ) மற்றும் 100(பெ) என்ற வாக்குச்சாவடிகள் இந்து நடுநிலைப் பள்ளி மற்றும் பஞ்சாயத்து அலுவலகம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடிகள் அகஸ்தியர்பட்டி கிராமத்திலிருந்து 1½ கி.மீ. தூரத்திலும், ஆறுமுகம்பட்டி என்ற ஊரிலிருந்து 1/2 கி.மீ. தூரத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு வாக்குச்சாவடிகளிலும் முறையே 98 மற்றும் 945 வாக்காளர்களே உள்ளனர். ஆறுமுகம்பட்டி என்ற ஊரின் ஒரு பகுதிதான் புதிதாக உருவான அகஸ்தியர்பட்டி எனவும், பொதுக் கட்டடங்களோ அல்லது பள்ளிக் கட்டடங்களோ அகஸ்தியர்பட்டி என்ற ஊரில் இல்லையெனவும் தெரிய வருகிறது. மேலும், தற்பொழுது அமைந்துள்ள வாக்குச்சாவடிகள் இரண்டு கி.மீ. தூரத்திற்குள் இருப்பதாலும், வாக்காளர்கள் எண்ணிக்கை 1500-க்குள் இருப்பதாலும், இந்தியத் தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும், அகஸ்தியர்பட்டி கிராமத்தில் தனியாக வாக்குச் சாவடி அமைப்பதற்கான அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது. மேலும், இந்தியத் தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள வரன்முறைகளின்படி, புதிய வாக்குச் சாவடிகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற முடியும்.





7—

## சட்டக் கல்வி

**வினா 2260—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறை, சட்டத் துறை, சட்டமன்றப் பேரவை ஊழியர்களுக்கு கட்டாய சட்டக் கல்வி பட்டம் வேண்டி இருப்பதால் தொலைதூரக் கல்வி மூலம், இளங்கலை சட்டம் பயில வகை செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

இல்லை.

8—

## அடையாள அட்டை

**வினா 2949—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய எத்தனை வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) வாக்காளர் போட்டோ எடுத்தும் இன்னும் அடையாள அட்டை வழங்கப்படாதவர்கள் எத்தனை பேர்?

(இ) வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படாதவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில், இதுவரையில், *1,61,483* வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) புகைப்படம் எடுக்கப்பட்டவர்களில் சுமார் *1,198* வாக்காளர்களுக்கு கீழ்க்காணும் காரணங்களினால் அடையாள அட்டைகள் வழங்கப்படாமலுள்ளன:

| வாக்காளர் இறப்பின் காரணமாக | அடையாள அட்டையில் தெருப் பெயர் மாறியுள்ளதால் வாக்காளர்கள் பெற்றுக் கொள்ள மறுப்பு தெரிவித்தது | அடையாள அட்டையில் பஞ்சாயத்தின் பெயர் தவறுதலாக உள்ளதால் வாக்காளர் பெற்றுக் கொள்ள மறுப்பு தெரிவித்தது. |
|---|---|---|
| *562* | *132* | *504* |

(இ) அடையாள அட்டைகள் வழங்கப்படாத வாக்காளர்களுக்கு அடுத்த கட்டத்தில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9—

### அரசுத் தேர்வு

**வினா 84—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் இயங்கும் அங்கீகாரம் பெறாத உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அரசுத் தேர்வு எழுதுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இந்தப் பிரச்சினையைச் சரி செய்ய அரசு அங்கீகாரமின்றி பள்ளிகளில் வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா என்பதை கள அலுவலர்கள் ஆய்வு செய்து அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்து ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் *31*-ம் தேதிக்குள் ஓர் இறுதி அறிக்கை அனுப்பி வைக்குமாறு *25-7-2001* நாளிட்ட அரசு கடித எண் *20538*/வி1/*2001-2*-ல் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

10—

### ஆசிரியர்கள் நியமனம்

**வினா 86—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியதில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களில் போதிய ஆசிரியர்களை உடனடி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

*2001-2002*-ம் கல்வியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் முதுகலை ஆசிரியராக பதவி உயர்வு மூலம் சில பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் இந்தக் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

### மேல்நிலைப் பள்ளி

**வினா 263—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 14

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், களப்பால் அரசு உயர்நிலைப் பள்ளியை இவ்வாண்டு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002-ம் கல்வியாண்டில் திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், களப்பால் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

12—

**மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 264—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி ஒன்றியம், புள்ளமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002-ம் கல்வியாண்டில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, புள்ளமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

13—

**ஆசிரியர் பயிற்சித் தேர்வு**

**வினா 308—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பொதுத் தேர்வு எழுத முடியாமல் உள்ள மாணவ/மாணவியர் எத்தனை பேர்?



2001 செப்டம்பர் 14]

(ஆ) இதற்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பொதுத் தேர்வு எழுத முடியாமல் உள்ளவர்கள் 28,366 பேர்.

(ஆ) இவர்களுக்கு முதற்கன் முறையான இரண்டாண்டுப் பயிற்சி அளித்து அதன்பின் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

14—

**பல்தொழில் நுட்பப் பயிலகம்**

**வினா 316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியை மையமாக வைத்து பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டிருக்கும் மாணவ/மாணவியர் நலன் கருதி பல்தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

15—

**ஆசிரியர் பயிற்சிப் பள்ளி**

**வினா 536—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் ஏற்கெனவே இருந்த அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 செப்டம்பர் 14

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தருமபுரி நகரில் ஏற்கெனவே இயங்கி வந்து மூடப்பட்டு விட்ட அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் கொண்டு வரும் திட்டம் ஏதும் இல்லை.

**16—**

**மேல்நிலைப் பள்ளி**

**வினா 1112—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையும் இவ்வாண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) ஊர்மக்கள், மேல்நிலைப் பள்ளியாக மாற்ற ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும் என்று உள்ள விதிமுறையை அரசு இரத்து செய்யுமா?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளையும் படிப்படியாக அரசு மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனடிப்படையில் 2001-2002-ம் கல்வி ஆண்டில் 125 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை வரும் கல்வியாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களின் பங்குத் தொகையாக ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும் என்ற விதிமுறையை இரத்து செய்ய சாத்தியக் கூறுகள் இல்லை.



2001 செப்டம்பர் 14]

**17—**

**பட்டதாரி ஆசிரியர்கள்**

**வினா 1122 ஏ—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல ஆண்டுகளாய் பணிக்கு எடுக்காத பி.எட். படித்த பட்டதாரி ஆசிரியர்களைப் பணியில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

வேலைவாய்ப்பகத்தால் பதிவு முன்னுரிமையின்படி பரிந்துரை செய்யப்படும் பணிநாடுநர்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தில் நேர்காணல் நடத்தப்பட்டு, நேர்காணலில் அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இனச்சுழற்சி அடிப்படையிலும் அரசால் வரையறுக்கப்பட்ட மதிப்பெண்கள் அடிப்படையில், ஆண்டுதோறும் அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளின் கீழ் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளின் தேவைக்கேற்ப பி.எட். படித்த பட்டதாரி ஆசிரியர்கள் நேரடி நியமனம் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்படுகிறார்கள். எனவே, தகுதிவாய்ந்த மற்றும் மேற்படி வரையறைகளை பூர்த்திசெய்த பட்டதாரி ஆசிரியர்களை மட்டுமே ஆசிரியர் பணியில் அமர்த்த இயலும்.

**18—**

**கோளரங்கம்**

**வினா 1155—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் 'கோளரங்கம்' அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் கோளரங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

### ஆசிரியர் பணியிடங்கள்

**வினா 1236—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலிப் பணியிடமாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நடப்பாண்டில் அரசு நிரப்ப ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002-ம் கல்வியாண்டில் பதவி உயர்வின் மூலம் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் சில பள்ளிகளில் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் இந்த கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது சமயம் பெண்ணாகரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலிப் பணியிடமாக உள்ள ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படும்.

20—

### ஆய்வுக்கூடம்

**வினா 1243—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டப்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம்





கட்ட அரசின் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லாததால் மாவட்ட ஆட்சியரை அணுகி சம்பந்தப்பட்ட தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணியினை முடிக்க முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

21—

### மேல்நிலைப் பள்ளி

**வினா 1660—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கட்டியங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கட்டியங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் 2001-2002-ம் கல்வியாண்டில் பெறப்படவில்லை. வரும் கல்வி ஆண்டில் மேற்கண்ட பள்ளியின் சார்பாக கருத்துருக்கள் பெறப்பட்டால் அதனை அடுத்த கல்வியாண்டில் அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கக் கருதப்படும்.

22—

### மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா 3365—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்ஒலக்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 செப்டம்பர் 14

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002-ம் கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்ஒலக்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**23—**

**மின் உற்பத்தி**

**வினா 294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நெய்வேலியில் அனல் மின்சார நிலையத்திலிருந்து எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) தமிழ்நாட்டிற்கு எத்தனை மெகாவாட் மின்சாரம் அளிக்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) 2070 மெகாவாட்

(ஆ) 941 மெகாவாட்

**24—**

**துணை மின் நிலையம்**

**வினா 499—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி 110 கிலோவாட் துணை மின் நிலையத்தை 230 கிலோவாட் துணை மின் நிலையமாக தரம் உயர்த்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2001 செப்டம்பர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் 110 கி.வோ. துணை மின் நிலையத்தை 230 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்துவதற்கான கருத்துரு இல்லை.

**25—**

**மின் வெட்டு**

**வினா 1067—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) மின்வெட்டு வராமல் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் மின் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தற்போது மின் வெட்டு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**26—**

**சிலைகள் மீட்பு**

**வினா 353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2000-2001-ஆம் ஆண்டில் எத்தனை கோயில்களில் சிலைத் திருட்டு நடந்துள்ளதாக காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது?

(ஆ) இதில் எத்தனை சிலைகள் மீட்கப்ப ான?

[2001 செப்டம்பர் 14

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் 26 கோயில்களில் சிலைத் திருட்டு நடந்துள்ளதாக காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது.

(ஆ) இதில் 16 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

**27—**

**புதிய வழித்தடம்**

**வினா 360—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி மலைக்கு பக்தர்கள் இழுவை ரயில் மூலம் செல்வதற்கு ஒரு வழித்தடம்தான் உள்ளது. அதனால் இன்னொரு வழித்தடம் உருவாக்கி நெரிசலைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி மலையில் பக்தர்கள் செல்வதற்கு மூன்று மின் இழுவை ரயில்கள் இருக்கும் நிலையில் புதியதாக மின் இழுவை ரயில் இயக்க வழித்தடம் உருவாக்கும் திட்டம் இல்லை.

**28—**

**வருவாய்**

**வினா 361—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் மலைக்குச் செல்லும் இழுவை இரயிலின் மூலம் 2000-2001-க்கான வருமானம் எவ்வளவு?



2001 செப்டம்பர் 14]

(ஆ) மேலும் இழுவை ரயிலை விஸ்தரிக்கும் திட்டத்திற்குத் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பழனி அ/மி. தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மலைக்குச் செல்லும் இழுவை இரயில் கட்டணச் சீட்டு விற்பனை மூலம் 2000-2001-ம் நிதியாண்டில் கிடைத்த மொத்த வருமானம் ரூ.1,57,91,720 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து, தொண்ணூற்று ஓராயிரத்து எழுநூற்று இருபது மட்டும்).

(ஆ) இழுவை இரயிலை விஸ்தரிக்க தற்போதைக்கு திட்டம் ஏதும் இல்லை.

**29—**

**கோயில் நிலங்கள்**

**வினா 1380—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்ட கோயில் நிலங்களை நீண்ட நாட்களாக உழுவடை செய்பவர்கள், ஒழுங்காக குத்தகை தராமலிருந்தால், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நீண்ட நாட்களாக உழுவடை செய்பவர்கள் குத்தகை செலுத்தாமலிருந்தால் வசூல் செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது வருவாய் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை தொடரப்படுகிறது.

30—

## இரவுக் காவலர்

**வினா 672—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் ஸ்கேன் இயந்திரத்தை இயக்கும் அலுவலர் மற்றும் இரவுக் காவலர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன் (Scan) இயந்திரம் வழங்கப்படாததால், ஸ்கேன் அலுவலர் நியமிக்க அவசியமில்லை. மேலும், இரவுக் காவலர் என தனி பணியிடம் ஒப்புவிப்பு செய்யப்படுவதில்லை.

31—

## குடிநீர் வசதி

**வினா 100—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூர் கிராமம் ராவுத்தர்காடு பகுதியில் புதிதாக மேல்நிலைத் தொட்டி கட்டி கொத்தாங்காடு, குண்டுகல்காடு வாத்தியார்குட்டை ஆகிய பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



32—

## குடிநீர்

**வினா 102—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, மடத்துக்குளம் மாரிமுத்தான் வளைவு பாப்பாபட்டி காட்டுவளைவு பகுதியிலுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, மடத்துக்குளம் மாரிமுத்தான் வலசு, பாப்பாபட்டி காட்டுவளவு ஆகிய குடியிருப்புகள் இருப்பாளி மற்றும் 236 புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் 549 வழியோர கிராம குடியிருப்புகளுக்காக குடிநீர் வழங்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.162.00 இலட்சங்களுக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

33—

## புதிய ஊராட்சி ஒன்றியம்

**வினா 240—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பெருகவாழ்ந்தானை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**34—**

**தொழிற்சாலைகள்**

**வினா 441—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பி.அண்டுசி. ஆலை மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் லிமிடெட் தொழிற்சாலை நீண்ட நாட்களாக மூடியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்தொழிற்சாலைகளைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பி.அண்டுசி. ஆலை: இப்பிரச்சினை குறித்து 28-2-1998 அன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. நிதி நெருக்கடி காரணமாக ஆலையை ஒப்புக்கொண்டபடி நிர்வாகத்தினால் இயக்க முடியவில்லை. நிர்வாகத்தினர் பி.ஐ.எப்.ஆர். முன்பு புனரமைப்புத் திட்டம் தாக்கல் செய்துள்ளனர். பி.ஐ.எப்.ஆர்.-ன் 31-7-2000 மற்றும் 1-3-2001 நாளைய உத்தரவுகளின் அடிப்படையில் ஆலையின் சில அசையாச் சொத்துக்களையும், இயந்திரங்களையும் விற்பதற்காக நாளிதழில் விளம்பரம் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவிக்கும் ஆட்சேபணைகள்/ஆலோசனைகள் கருத்தில் கொண்டு பி.ஐ.எப்.ஆர். பிறப்பிக்கும் இறுதி ஆணைகளின் அடிப்படையிலேயே மீண்டும் இயங்குவது பொறுத்துள்ளது.





**ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் லிமிடெட்:**

சென்னை ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ப்ராடக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலை, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்த மனுவின்மீது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளின் பேரில் கலைப்பு நடவடிக்கைகளில் இருந்து வருகிறது. உயர்நீதிமன்ற உத்தரவுகளின்படி கலைப்பு அதிகாரி (Liquidator) நியமிக்கப்பட்டு நிறுவனம் தற்போது அவர் பொறுப்பில் இருந்து வருகிறது. எனவே இந்நிறுவனத்தை திறந்து இயக்குவது குறித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பில்லை.

**35—**

**பஞ்சாலைகள்**

**வினா 818—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் ஒன்பதுக்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறந்து செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் மூடப்பட்ட ஒன்பது ஆலைகளும் நிதி நெருக்கடி காரணமாகத்தான் இயங்காமல் உள்ளன. தொழிலாளர் பிரச்சினையினால் அல்ல. எனவே, இவ்வாலைகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் இத்துறையால் எடுக்க இயலாது.

[2001 செப்டம்பர் 14

36—

## நிவாரணத் தொகை

**வினா 819—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலை, எஞ்ஜினியரிங் தொழிலாளர்களுக்குத் தலா ரூ.250/- வீதம் மாதாந்திர நிவாரணமாக அளித்திருந்தும் சில மாதங்களாக நிறுத்திவிட்டதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், தொழிலாளர்களின் துயர் நீக்க ஆலைகள் திறக்கும் வரையில் கொடுக்கப்படும் நிவாரணத் தொகையை ரூ.500/- ஆக உயர்த்தித்தர அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலை, எஞ்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர நிவாரணத் தொகை நிறுத்தப்படவில்லை.

(ஆ) நிதிநிலை காரணமாக உயர்த்த இயலாது.

37—

## ஓய்வூதியம்

**வினா 829—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்த பொருள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.



2001 செப்டம்பர் 14]

38—

## பிழைப்பூதியம்

**வினா 848—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு அரசு பிழைப்பூதியம் வழங்குகிறது?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இன்றைய தேதியில் இத்துறையில் பெறப்பட்டுள்ள விவரங்களின்படி தமிழகத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதால்/ இயங்காமல் உள்ளதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 41,830 ஆகும்.

(ஆ) தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு பிழைப்பூதியம் (Subsistance Allowance) ஏதும் வழங்கவில்லை. ஆனால் இடர்காப்பு (Relief) உதவியாக 01-05-1999 முதல் மாதம் ரூ.250/- வழங்கி வருகிறது. அதன்படி 1999-2000 நிதியாண்டில் 5255 தொழிலாளர்களுக்கும், 2000-2001 நிதியாண்டில், 7250 தொழிலாளர்களுக்கும், 2001-2002 நிதியாண்டில் இதுவரை 823 தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

39—

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா 1754—திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி பேரூராட்சியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**40—**

**அங்காடிகள்**

**வினா 3250—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனை பொருள் விற்பனை அங்காடிகளை அனைத்து நகரங்களிலும் விரிவுபடுத்த அரசு முயலுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இதுகுறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**41—**

**மண்ணெண்ணெய் வழங்குதல்**

**வினா 2494—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெயை 'கெரசின் பங்க்' மூலம் வழங்கப்படுவதைத் தவிர்த்து நியாயவிலைக் கடைகளில் கேன் மூலம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெயை நியாயவிலைக் கடைகளில் கேன் மூலம் வழங்குவது குறித்த திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**42—**

**குடும்ப அட்டைகள்**

**வினா 2944—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியில் குடும்ப அட்டை கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் 2000-2001-க்குள் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் எத்தனை?

(இ) மீதமுள்ள குடும்பங்களுக்கு எப்பொழுது அட்டைகள் வழங்கப்பட உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் புதிய குடும்ப அட்டை கோரி வந்த 3560 மனுக்களில், தகுதியானவை என்று கண்டறியப்பட்டுள்ள 3329 மனுக்களில், ஜூன் 2001 ஆம் மாதம் வரை 3223 மனுதாரர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. சங்ககிரி வட்ட அலுவலகத்தில் உள்ள மீதமுள்ள 106 குடும்ப அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி அட்டைதாரர்களுக்கு அஞ்சலட்டை மூலம் தகவல்

[2001 செப்டம்பர் 14

அனுப்பப்பட்டுள்ளது. அவை விரைவில் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். 231 விண்ணப்பங்கள் தகுதியில்லாதவை என்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

**43—**

**கட்டட வசதி**

**வினா 172—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**44—**

**புதிய அச்சகம்**

**வினா 247—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நடப்பாண்டில் புதிதாக அரசு அச்சகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை புதிதாக ஏற்படுத்த எண்ணியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நடப்பாண்டில் புதிதாக அரசு அச்சகம் ஏற்படுத்த எவ்வித உத்தேசமும் இல்லை.



2001 செப்டம்பர் 14]

(ஆ) தற்போது எழவில்லை.

**45—**

**இணைக்கும் திட்டம்**

**வினா 843—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவிரியாற்றையும் பாலாற்றையும் இணைக்கும் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு-கர்நாடக மாநிலங்களுக்கு இடையேயான காவிரித் தண்ணீர் குறித்த தாவா, நடுவர்மன்ற பரிசிலனையில் உள்ளதால் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**46—**

**தலைப்பு வாய்க்கால்**

**வினா 866—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, வீரசோழன் ஆற்றில் கப்பூர் கிராமத்திற்குப் புதிய பாசனத் தலைப்பு வாய்க்கால் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, வீரசோழன் ஆற்றில் கப்பூர் கிராம பாசன வசதிக்கு புதிய தலைப்பு மதகு கட்டுவது பற்றி வரும் கோடையில் தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்ய இருக்கிறோம். ஆய்வின் முடிவு சாதகமாக இருக்கும் பட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து புதிய மதகு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2001 செப்டம்பர் 14

47—

## சந்தன மரங்கள்

**வினா 326—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் துறையினரால் ஏலம் விடப்பட்ட சந்தன மரங்கள் எத்தனை மெட்ரிக் டன்?

(ஆ) அவற்றின் விலை மதிப்பு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய மூன்று சந்தனமரக் கிடங்குகளிலும் 1477.130 மெட்ரிக் டன் சந்தனக் கட்டைகள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றின் விலை மதிப்பு ரூ. 7967.16 இலட்சங்கள் ஆகும்.

48—

## சுத்திகரிப்பு நிலையம்

**வினா 1022—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலைகளில் பலவற்றிற்கு சுத்திகரிக்கும் நிலையம் போதுமானதாக இல்லை என்ற காரணம் காட்டி, தொழிற்சாலைகளை மூடும்படி அறிவிப்பு அனுப்பியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற்சாலைகள் தொடர்ந்து செயல்பட அரசின் நடவடிக்கை என்ன?



2001 செப்டம்பர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தோல் தொழிற்சாலைகள் தொடர்ந்து செயல்பட, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக, அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதாவது, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Leather Research Institute) மற்றும் ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனம் (United Nations Industrial Development Organisation) ஆகியவற்றின் பரிந்துரைகளின்படி, தூய தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி கழிவுநீரில் கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவைக் குறைக்கும்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தோல் தொழிற்சாலையை வலியுறுத்தி வருகிறது. கழிவுநீரில் கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவை 7500 மி.கி./லிட்டர் அளவுக்குக் குறைக்கும் தோல் தொழிற்சாலைகளின் இசைவாணையைப் புதுப்பிக்கும் போது, எதிர்மறை சவ்வூடு பரவல் (Reverse Osmosis) நிலையத்தினை தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு புதுப்பிக்க, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் உத்தேசித்துள்ளது.

49—

## காடு வளர்ப்பு

**வினா 1069—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி- விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காடுகள் அமைந்துள்ள பரப்பளவு எவ்வளவு?

(ஆ) காடு வளர்ப்புத் திட்டத்தை விரிவாக்கம் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(ச.கி. மீட்டரில்)

(அ) தமிழகத்தின் வனப்பரப்பு:

| | | |
|---|---|---|
| ஒதுக்குக் காடுகள் | 19,315.28 | |
| ஒதுக்கு நிலங்கள் | 2243.38 | |
| இதர காடுகள் | 1306.06 | |
| மொத்தம் | **22864.72** | ச.கி.மீட்டர் |

இது தமிழகத்தின் நிலப்பரப்பில் (1,30,058 ச.கி.மீ.) 17.56 விழுக்காடு

(ஆ) தமிழகத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தினை விரிவாக்கம் செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ஐந்தாண்டுகளுக்கு 1997-98 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 75,000 ஹெக்டேர் பரப்பளவிலும் 200 கிராமங்களிலும் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களிலும் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

50—

### ஆலை

**வினா 1299—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள காடுகளில் சந்தன மரம் உள்ளதால் சேலத்தில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலை ஏற்படுத்த அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஒரு புது சந்தன எண்ணெய் தொழிற்சாலை உருவாக்கும் செயல் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழுவதற்கான வாய்ப்பில்லை.

51—

### சுற்றுச்சூழல்

**வினா 2904—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் டம்ளர் போன்ற பொருட்களினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஆம்.

52—

### விவசாயக் கல்லூரி

**வினா 237—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டுத் திட்டத்தில் இணைத்து அறிவிககப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**53—**

**மூன்று சக்கர மிதி வண்டி**

**வினா 332—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர மிதிவண்டி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டி பெற்றவர்கள் 100 பேர் ஆவர்.

(ஆ) காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் 140 நபர்கள். இவர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**54—**

**கல்வித் தகுதி**

**வினா 332—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பு தேர்ச்சி என்று குறைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பு தேர்ச்சி என்று குறைக்க அரசிடம் கருத்துரு எதுவும் இல்லை.

**55—**

**மாற்றுப் பணி**

**வினா 1028—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு அமைப்பாளர்களில் பி.ஏ., பி.எட்., எம்.ஏ., பி.எல். படித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு மாற்றுப்பணி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சத்துணவு அமைப்பாளர்களில் இளங்கலைப் பட்டம் படித்தவர்களின் எண்ணிக்கை 1949; முதுகலைப் பட்டம் படித்தவர்கள் எண்ணிக்கை 513; ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களின் எண்ணிக்கை 598; சட்டப் படிப்பு (பி.எல்.) படித்தவர்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

(ஆ) இவர்களுக்கு மாற்றுப் பணி அளிப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 14

56—

குத்தகை

**வினா 388—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் மேட்டூர் அணை மற்றும் அதன் வாய்க்கால்களில் மீன் பிடிக்கும் குத்தகையாக வந்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்த விலையுள்ள நல்ல ரக மீன்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ரூ.10,03,267 (ரூபாய் பத்து இலட்சத்து மூவாயிரத்து இருநூற்று அறுபத்து ஏழு மட்டும்)

(ஆ) ஆம்.

57—

மீனவர்களைப் பாதுகாத்தல்

**வினா 1149—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கை இராணுவத்தால் தாக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 14]

58—

மானியம்

**வினா 1531—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மீனவர் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் மற்றும் டீசல் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள மீனவர்கள் பயன்படுத்தும் 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகளில் பயன்படுத்தப்படும் உயர்வேக டீசல் எரியெண்ணெய்க்கு மைய அரசு நிதி உதவியுடன் மானியம் வழங்கும் திட்டம் உள்ளது. பொது விநியோக முறையில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் தரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பாரம்பரிய கடல் மீனவர்களுக்காக வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கான மைய ஆயத்தீர்வையை மானியமாக வழங்குவது குறித்து அரசால் கருத்துரு பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

59—

மாற்றுத் திட்டம்

**வினா 2267—திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலில் காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடிக்கவும் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்குச் சலுகைகள் செய்யவும் மாற்றுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

[2001 செப்டம்பர் 14

60—

**கால்நடை மருத்துவமனை**

**வினா 22709—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட பெரியதத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

61—

**கட்டட வசதி**

**வினா 2289—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, விழுதுடையான் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.



2001 செப்டம்பர் 14]

62—

**கால்நடை மருத்துவமனை**

**வினா 2686—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் கிராமத்தில் மீண்டும் வாரம் இருமுறை கால்நடை மருத்துவமனை செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் கிராமத்தில் பார்வைக் கிளை நிலையம் செயல்படுகிறது. அங்கு வாரத்தில் இரண்டு நாட்களுக்கு கால்நடைகளுக்கு கால்நடை உதவி மருத்துவர் மற்றும் கால்நடை நிலைய ஆய்வாளர் அவர்களால் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

63—

**மீனவர்கள் பாதுகாப்பு**

**வினா 2723—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதை நிரந்தரமாகத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும்போது இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து பாதுகாத்திட தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

[2001 செப்டம்பர் 14

64—

**இலவச வீடு**

**வினா 2788—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோட்டையூர், பண்ணவாடி, சேத்துக்குழி கிராமங்களில் வசிக்கும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

65—

**கால்நடை மருத்துவமனை**

**வினா 2799—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழாது.



2001 செப்டம்பர் 14]

66—

**கால்நடை மருத்துவமனை**

**வினா 2800—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நெருப்பூரில் கால்நடை மருத்துவமனை நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

67—

**இலவச வீடு**

**வினா 2898—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் கிராமத்தில் வசிக்கும் மேட்டூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்களுக்கு இலவச வீடு கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

[2001 செப்டம்பர் 14

**68—**

**மீனவர்களுக்கு வீடு**

**வினா 2905—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, வெள்ளமண்காடு, அத்திமரத்தூர், மேட்டுக்காடு கிராமங்களில் மேட்டூர் மீனவ கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**69—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 3338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



2001 செப்டம்பர் 14]

**70—**

**நிவாரணம்**

**வினா 3360—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்திலிருந்து கடந்த 02-06-2001 அன்று இரு படகுகளில் சென்ற 8 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(இ) இவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) தக்க நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) இவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**71—**

**இழப்பீடு**

**வினா 3362—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய கடல் பகுதிகளின் எல்லையோரத்தில் மீன்பிடிக்கும் நூற்றுக்கணக்கான மீனவர்களை இலங்கை கடலோரக் காவல் படையினர் கைது செய்து வரும் நடவடிக்கை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) சிறையில் இவர்கள் அடைக்கப்பட்ட காலத்திற்கு நஷ்ட ஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) நூற்றுக்கணக்கான மீனவர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்வு ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**72—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 3407—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியிலுள்ள சிறுத் தொண்டமாதேவி ஊரில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**73—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 3449—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந்துகள் போதிய அளவு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், உயிர்காக்கும் மருந்துகள் போதுமான அளவிற்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி கால்நடை மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந்துகள் போதிய அளவு தேவைப்படும்போது இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்திலிருந்து அவ்வப்போது பெறப்பட்டு உடனுக்குடன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) உயிர்காக்கும் மருந்துகள் போதுமான அளவிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**74—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 3456—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**75—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 3859—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதி, ஆனைகுளம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**76—**

**பால் விற்பனை நிலையங்கள்**

**வினா 1250—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் பண்ணையின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவு பால் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**77—**

**கிரையத் தொகை**

**வினா 1251—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம், கொள்முதல் செய்யும் பாலுக்குரிய விலையை பிரதிவாரம் ஒரு குறிப்பிட்ட நாளில் வழங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

வாரம் ஒருமுறை குறிப்பிட்ட நாளில் சங்கங்கள் அனுப்பும் பாலுக்கான கிரையத் தொகையினைச் செலுத்த இயலாத நிலை உள்ளது.

**78—**

**கடன் உதவி**

**வினா 1253—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனுதவி வழங்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம், வழங்கப்படுகிறது.

*(ஆ)* பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் கறவை மாடுகள் வாங்க அரசு மானியமாகவும், வங்கிக் கடன் உதவியும், தாட்கோ கறவை மாடுகள் திட்டம் மற்றும் ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் கிறிஸ்துவராக மாறிய திட்டங்களின்கீழ் 1992-93-லிருந்து வழங்கப்படுகிறது.

**79—**

**கறவை மாட்டுக் கடன்**

**வினா 1254—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு திட்டத்தின்கீழ் வங்கி மூலம் வழங்கப்படும் கறவை மாட்டுக் கடன் அந்தந்தப் பகுதி பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் மூலம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம், வழங்கப்படுகிறது.

(ஆ) ஆண்டுதோறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதிதிராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு மத்திய, மாநில அரசுகளின் மூலம் மானியம் மற்றும் வங்கிக் கடன் உதவி வழங்கப்படுகிறது.

**80—**

**பணி நிரந்தரம்**

**வினா 1256—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பணியாற்றும் தினக்கூலித் தொழிலாளர்களின் பணி நிரந்தரப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் 189 தினக்கூலிப் பணியாளர்களின் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உள்ள தினக்கூலிப் பணியாளர்களில், 2 வருடங்களில் 480 நாட்கள் பணிபுரிந்து



நிரந்தரப்படுத்த தகுதி பெற்றுள்ள 20 தினக்கூலிப் பணியாளர்களுக்கு எதிர்வரும் ஒன்றியப் பணிக் குழுவில் வைத்து தீர்மானம் நிறைவேற்றி பணி வரன்முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**81—**

**கூடுதல் பேருந்துகள்**

**வினா 43—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டிலிருந்து அன்னூர் வழியாக குன்னூருக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள நிதி நிலைமையில் ஈரோட்டிலிருந்து அன்னூர் வழியாக குன்னூருக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**82—**

**பேருந்து வசதி**

**வினா 44—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரிலிருந்து இரவு 10 மணிக்கு மேல் ஈரோடு, மேட்டுப்பாளையம், கோவை போன்ற இடங்களுக்குப் பேருந்து வசதி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இயற்கையின் சீற்றத்தால் வாகனங்களும் பயணிகளும் புதையுண்டும், ஆற்றில் இழுத்துச் சென்றும் அழிவை ஏற்படுத்தியதை மனதில் கொண்டும், குளிர்-வெப்ப நிலை, பாதுகாப்பின்மை, பயணிகள் அடர்வின்மை ஆகிய காரணங்களாலும் இரவு 10 மணிக்கு மேல் ஈரோடு, மேட்டுப்பாளையம், கோவை போன்ற இடங்களுக்கு பேருந்து வசதிகள் அளிக்க இயலாது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**83—**

**பணிமனை**

**வினா 116—திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் நகரில் அரசு போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணிமனை அமைக்க ஏற்ற நிலம் கிடைக்கப் பெற்றவுடன், தேவையான நிதி ஆதாரத்திற்கு வகை செய்த பின்னர் பணிமனை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**84—**

**பேருந்து இயக்குதல்**

**வினா 561—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடியிலிருந்து சென்னைக்கு கூடுதலாக ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித்தடத்தில் எடப்பாடி-சேலம், சேலம்-சென்னை என பகுதிவாரியாக பேருந்து வசதி போதுமானதாக உள்ளது. எனவே எடப்பாடி-சென்னை தடத்தில் கூடுதலாக பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**85—**

**விரைவுப் பேருந்து**

**வினா 613—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளையில் இருந்து கோயம்புத்தூருக்கு விரைவுப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தடம் எண் 665-ல் திசையன்விளையிலிருந்து கோயம்புத்தூருக்கு 2 பேருந்துகள் 2 நடைகளாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயக்கப்படும் பேருந்திற்கு நாள் ஒன்றிற்கு ரூ.1501/- (ரூபாய் ஆயிரத்து ஐநூற்றி ஒன்று மட்டும்) நட்டம் ஏற்படுவதால் கூடுதல் பேருந்து இயக்க அவசியம் இல்லை.

[2001 செப்டம்பர் 14

86—

முன்பதிவு

**வினா 614—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் நகரில் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் முன்பதிவு செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் வள்ளியூரில் முன்பதிவு செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

87—

பேருந்து

**வினா 646—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்வார்திருநகரியிலிருந்து பாளையங்கோட்டை வரை இயக்கப்பட்ட தடம் எண் 44 பி பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது ஆழ்வார்திருநகரியிலிருந்து பாளையங்கோட்டை வரை செல்வதற்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் ஆகியவற்றால் நாளொன்றுக்கு 70-க்கும் மேற்பட்ட பேருந்துகள் மூலம் 350-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்படுவதால் தடம் எண் 44 பி நகர் வழித்தடத்தை மீண்டும் இயக்கத் தேவையில்லை.



2001 செப்டம்பர் 14]

88—

பேருந்து இயக்குதல்

**வினா 649—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சிறியந்தூர் மற்றும் மகிழ்ச்சிபுரம் ஆகிய ஊர்களுக்கு திருநெல்வேலியிலிருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சிறியந்தூர் மற்றும் மகிழ்ச்சிபுரம் ஆகிய ஊர்களுக்கு திருநெல்வேலியிலிருந்து பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

புதிய பேருந்து

**வினா 651—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செய்துங்கநல்லூரிலிருந்து தூத்துக்குடிக்கு புதிய பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்துங்கநல்லூர் - தூத்துக்குடி வழித்தடத்தில் பகுதி பகுதியாக போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, மேற்படி தடத்தில் புதிய பேருந்து இயக்க தேவை எழவில்லை.

[2001 செப்டம்பர் 14

90—

## பேருந்து வசதி

**வினா 652—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செய்துங்கநல்லூரில் இருந்து பாளையங்கோட்டை செல்வதற்கு தனியாக பேருந்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செய்துங்கநல்லூரில இருந்து பாளையங்கோட்டை செல்வதற்கு திருச்செந்தூர், திருவைகுண்டம், திருநெல்வேலி பிரதான தடத்தில் போதுமான பேருந்து வசதிகள் உள்ளதால் செய்துங்கநல்லூர்—பாளையங்கோட்டை என தனியாக பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

91—

## பேருந்து

**வினா 778—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து, கிருஷ்ணாபுரத்திற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கிருஷ்ணாபுரம் வழியாக மதுரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்துகள் மூலம் 10 தனிச் சுற்றுக்கள் இயக்கப்படுகின்றன. மற்றும் 0.5 கி.மீ. தூரத்தில் உள்ள பெருமாள்பட்டியிலிருந்து இயக்கப்பட்டு வரும் 12 தனிச் சுற்று பேருந்து வசதிகளையும் கிருஷ்ணாபுரம் மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து கிருஷ்ணாபுரத்திற்கு என தனியாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.



2001 செப்டம்பர் 14]

92—

## பேருந்து இயக்குதல்

**வினா 905—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் பணிமனையில் இயங்கும் தடம் எண் 11-ஐ திண்டிவனம், நீர்பெருத்தகரம், மாம்பாக்கம் வரை இயக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திண்டிவனம் பணிமனையில் இயங்கும் தடம் எண் டி. 11-ஐ திண்டிவனம், நீர்பெருத்தகரம், மாம்பாக்கம் வரை நீட்டித்து இயக்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

93—

## புதிய பேருந்துகள்

**வினா 1575—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 செப்டம்பர் 14

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்க, அரசால் தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**94—**

**புதிய பேருந்து**

**வினா 1585—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில், ஆண்டிமடம்-தொழுதூர் இடையே இடையக்குறிச்சி, பொன்பரப்பி, செந்துறை, நக்கம்பாடி, நமங்குணம், தங்கபுரம், திட்டக்குடி வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் ஆண்டிமடம்-தொழுதூர் வழித்தடத்தில், இடைக்குறிச்சி, பொன்பரப்பி, செந்துறை, நக்கம்பாடி, நமங்குணம், தங்கபுரம், திட்டக்குடி வழியாக புதிய பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**95—**

**மகளிர் இருக்கைகள்**

**வினா 2139—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநகரப் பேருந்துகளில் உள்ளதுபோல அரசு விரைவுப் பேருந்துகளிலும் மகளிர் இருக்கைகளை தனியாக ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?



2001 செப்டம்பர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மாநகரப் பேருந்துகளில் உள்ளது போல மகளிர் இருக்கைகளை தனியாக ஒதுக்க திட்டம் ஏதும் இல்லை.

**96—**

**தனிப் பேருந்து**

**வினா 2305—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்திற்கு நாகர்கோவிலில் இருந்து அஞ்சு கிராமம் வழியாக தனிப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவிலில் இருந்து அஞ்சு கிராமம், பழவூர் வழியாகவும் மற்றும் மதகனேரியிலிருந்து பழவூர், அஞ்சு கிராமம் வழியாகவும் ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால் நாகர்கோவிலில் இருந்து அஞ்சு கிராமம் வழியாக பழவூர் கிராமத்திற்கு என தனிப் பேருந்து இயக்கத் தேவை எழவில்லை.

**97—**

**மினி பேருந்து**

**வினா 2310—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறு பேருந்து (Mini Bus) திட்டத்தை விரிவாக்கி ஒவ்வொரு பேருந்தும் 30 கி.மீட்டர் செல்ல அரசு அனுமதிக்குமா?

[2001 செப்டம்பர் 14

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சிற்றுந்துகளை 30 கி.மீட்டர் இயக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**98—**

**புதிய பேருந்து**

**வினா 2450—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்திலிருந்து அய்யூர், வல்லம், கூவாகம், மருதூர் வழியாக ஒரு புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடப் பகுதி, போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே புதிய பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**99—**

**பேருந்து வசதி**

**வினா 3721—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரில் இருந்து பவானிக்கு பேருந்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரிலிருந்து பவானி செல்ல நேரிடை பயணிகள் அடர்வு மிகக் குறைவு என்பதால், நேரிடைப் போக்குவரத்து



2001 செப்டம்பர் 14]

வசதி தேவை எனக் கருதப்படவில்லை. எனவே, குன்னூரிலிருந்து பவானிக்கு பேருந்து வசதி அளிக்கத் தேவையில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**100—**

**அரசுப் போக்குவரத்துக் கழகம்**

**வினா 4682—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001-ஆம் ஆண்டு நிதியாண்டில் சேலம் மாவட்டம் அரசுப் பேருந்துக் கழகம் - கோட்டம் I இலாபத்தில் இயங்கி வந்ததா அல்லது நட்டத்தில் இயங்கி வந்ததா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

2000-2001-இல் அரசுப் போக்குவரத்துக் கழகம், (சேலம் கோட்டம்-I) சேலம், நட்டத்தில் இயங்கி வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### சென்னை, பெரம்பூரில் குடிநீர் விநியோகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்) சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை அடுத்து எடுத்துக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. கே. மகேந்திரன் அவர்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** குற்றச்சாட்டு அல்ல. அது எந்த அடிப்படையிலே என்றுதான் கேட்கிறார். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முறையல்ல. (கூச்சல்-குழப்பம்) மகேந்திரன், வாசியுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**டாக்டர் க. பொன்முடி:** அவர் சொன்னதெல்லாம் குற்றச்சாட்டு இல்லையா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை. மகேந்திரன் பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாவட்டம், பெரம்பூரில் குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்திடவும், கூடுதல் குடிநீர் வழங்கிடவும் அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து....(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது, முடியாது. (கூச்சல்-குழப்பம்) நான் எடுத்துக்கொள்ளவில்லை (கூச்சல்-குழப்பம்) நீங்கள் உட்காருங்கள். மகேந்திரன், பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்) கவன ஈர்ப்புவாசகத்தை வாசியுங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் உட்காருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) முறையல்ல; முறையல்ல அது. கேள்வி நேரத்திலே அனுமதிப்பதும், அனுமதிக்காததும் என்னுடைய உரிமை. என்னுடைய உரிமை அது. (கூச்சல்-குழப்பம்) அப்புறம் என்ன? நான் அதை அனுமதிக்கவில்லை. (கூச்சல்-குழப்பம்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு)

## 3. ஒழுங்குப் பிரச்சினை

### துணை வினா கேட்க அனுமதிப்பது குறித்து

**திரு. துரைமுருகன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அமருங்கள். Point of order-ஐக் கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், ஒரு கேள்வி கேட்க வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாபு அவர்கள் கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். யார் யாருக்கு





ஒதுக்கப்பட்டிருக்கிறது; என்ன அதனுடைய சமாச்சாரம், எவ்வளவு என்றெல்லாம் கணக்குச் சொன்னார்கள். ஓர் அமைச்சர் சொல்ல வேண்டிய பதில்தான். தரலாம் அதேபோல்தான், மாண்புமிகு பொன்முடி அவர்கள், இந்த மன்றத்திலே பேசுவதற்கு, குறிப்பிட்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் (குறுக்கீடுகள்) நான் பெயரைச் சொல்லவிலலை, சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் Point of order தானே கேட்கிறீர்கள்? அதைக் கேளுங்கள். Point of order-ஐக் கேளுங்கள்.

**திரு. துரைமுருகன் :** நான் கேட்பது, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், சிலரைக் குறிப்பிட்டு ஒரு கேள்வி கேட்கிறார். அதற்கு அமைச்சரிடம் பதில் இருந்தால், சொல்லலாம். இல்லை என்றால், சபாநாயகரே வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போகலாம். விட்டுவிடுங்கள். அதற்காக நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒரு கேள்வி கேட்பதற்கு அனுமதி கொடுப்பதும், அனுமதி மறுப்பதும் பேரவைத் தலைவருடைய உரிமை.

**திரு. துரைமுருகன்:** அது உங்களுடைய இஷ்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் கேட்கத் தொடங்கிய கேள்வி, இந்த வினாவிற்குச் சம்பந்தப்பட்டது அல்ல என்று நான் கருதிய காரணத்தால், அனுமதியை நான் மறுத்திருக்கிறேன். இதிலே என்ன தவறு?

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், யாருக்கு கேள்வி கொடுப்பது என்பது உங்களுடைய உரிமை. அந்தக் கேள்வியை அனுமதிப்பது உங்களுடைய உரிமை. அதை சபை நடவடிக்கையில் வைப்பதும், வைக்காததும் உங்களுடைய உரிமை. நாங்கள் உங்கள் உரிமையிலே தலையிடவேயில்லை. உங்களுக்கு அதிகாரம் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. துரைமுருகன்:** ஆனால் அமைச்சர், பலருக்கு, ஒரு பட்டியல் கொடுத்து, இவர் இவர்களுக்கெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இது விதிமுறைகளுக்குப் புறம்பாக இருக்கிறது என்று சொல்கிறார்.

[2001 செப்டம்பர் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துறையின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற பதிலைத்தான் அவர் வாசித்தார். அதற்கு மேலே அவர் பேசத் தொடங்கியதும், நான் அதை அனுமதிக்கவில்லை.

**திரு. துரைமுருகன்:** அதேபோன்று, ஒரு கேள்வியை பொன்முடி அவர்கள் கேட்கிறபோது, அமைச்சர் சொல்லலாம்; ஏற்கெனவே என்னிடத்திலே இந்தக் கேள்வி வந்த காரணத்தால், என்னிடத்திலே பதில் இருந்தது. நான் சொன்னேன். பொன்முடி தனிக் கேள்வி போடலாம். அவர்களுடைய கேள்விக்கு விளக்கங்கள் இல்லை என்று சொல்லலாம்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், பல பேர் கேள்வி கேட்க எழுந்திருக்கின்றபொழுதே— அவர்கள் கேள்வியிலே, இந்த மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது அல்லாமல் அவர்கள் வினா எழுப்புகின்றபொழுதே— நான் அவர்களுக்கு உரிமையை மறுத்திருக்கின்றேன். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பல பேருக்கு நான் அந்த உரிமையை மறுத்திருக்கிறேன். செய்யாறு தொகுதியிலே பேருந்து சம்பந்தமாக ஒரு கேள்வி வருகிறது என்றால் அவர்களுடைய சொந்தத் தொகுதியைப் பற்றிக் கேள்வி கேட்கிறபொழுது நான் மறுத்திருக்கிறேன். அதேபோல பொன்முடி அவர்கள் கேள்வியைக் கேட்பதற்கு நான் அனுமதித்தேன். ஆனால், அது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது என்ற காரணத்தினால், நான் அனுமதியை மறுத்திருக்கின்றேன். அதிலே என்ன தவறு?

**திரு. துரைமுருகன்:** தாராளமாக அனுமதி கொடுக்கிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. உறுப்பினர்களுக்கு அவர்களுடைய உரிமையைக் கொடுக்கிறீர்கள். அதிலே எல்லாம் குறை சொல்லவில்லை. திரு. பொன்முடி கேள்வியை நீங்கள் அனுமதித்துவிட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்கவேயில்லை. (குறுக்கீடு) இல்லை, சொல்கிறேன். இப்பொழுது பிரச்சினை என்னவென்றால், பேரவைத் தலைவர் ஒருவரைக் கேள்வி கேட்க அனுமதிக்கலாமா, கூடாதா? பேரவைத் தலைவருக்கு அந்த அதிகாரம் உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு உண்டு. இல்லை என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். அவ்வளவுதான். பிரச்சினை அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், நியாயத்தைத் தங்களிடத்திலே கேட்க எங்களுக்கு உரிமை உண்டு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கிறீர்கள். நான் பதில் சொல்கிறேன். அதனால்தான், இவ்வளவு நேரம் உங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டு இருக்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** பொன்முடி அவர்களின் கேள்வியை அனுமதியுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். இல்லாவிட்டால் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. திரு. மகேந்திரன் கவன ஈர்ப்பைக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) கேள்வியை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டே இல்லை இது.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டைச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டே அல்ல. அந்தத் துறையின் சார்பாகக் கொடுக்கப்பட்ட பதிலைத்தான் அமைச்சர் வாசித்தாரே தவிர, குற்றச்சாட்டே அல்ல. அதைத் தாண்டி அவர் ஒரு விளக்கம் சொல்லப்போகும்போது நானே தடுத்திருக்கின்றேன். ஆகவே, இது முறையல்ல, நீங்கள் செய்வது முறையல்ல. திரு. மகேந்திரன்.

## 2. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### சென்னை, பெரம்பூரில் குடிநீர் விநியோகம்—தொடர்ச்சி

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாவட்டம், பெரம்பூரில் குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்திடவும், கூடுதல் குடிநீர் வழங்கிடவும் அரசு நடவடிக்கை எடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

சென்னை நகருக்கு நீர் வழங்கும் பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஆகிய மூன்று ஏரிகளின் கொள்ளளவு 7,412 மில்லியன் கன அடியாகும். சென்ற ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதி ஏரிகளின் இருப்பு 586 மில்லியன் கன அடியாக இருந்தது. இரண்டு வருடங்களாக பருவ மழை பொய்த்ததால் ஏரிகளின் நீர் இருப்பு 12-9-2001-ல் 203 மில்லியன் கன அடியாக இருந்தது. எனவே, சென்னை நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நகருக்குத் தொடர்ந்து குடிநீர் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், நெய்வேலி, மேட்டூர், ஈரோடு, பூந்தமல்லி, செங்கல்பட்டு. மாமண்டூர் முதலிய இடங்களிலிருந்து லாரி மற்றும் இரயில் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப்பட்டும், ஏரிகளில் இருக்கும் தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரத்திலிருந்து சென்னைக் குடிநீர் வாரியக் கிணறு;கள் மற்றும் தனியார் விவசாயக் கிணறுகளிலிருந்தும் தண்ணீர் எடுத்து நகருக்குத் தொடர்ந்து தினமும் 115 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த அளவு குடிநீர் வழங்கும் நிலையில், நகரில் சுமார் 10,000 தெருக்களில் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க ::முடியவில்லை. எனவே, தொட்டிகள் வைத்து, லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

பெரம்பூர் பகுதியில் 754 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டு குடிநீர் வழங்கப்படுவதுடன், தெருக்களில் லாரிகள் மூலமாக 65 நடைகள் குடிநீர் வழங்கப்படுகிறது. இதற்காக லாரிகள் எண்ணிக்கை மேலும் 10 அதிகரித்து, 48-லிருந்து தற்போது 58 லாரிகள் மூலம் 485 நடைகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் மகாகவி பாரதி நகரில் இயக்கப்படாமலிருந்த லாரிகளில் நீர் நிரப்பும் நிலையம் தற்போது இயக்கி பயன்படுத்தப்படுகிறது. மற்றத் தேவைகளுக்கு 440 இந்தியா மார்க் 2 பம்புகள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. வியாசர்பாடியிலுள்ள அம்பேத்கர் கல்லூரி வளாகத்தில் ஒரு நீரேற்று நிலையம் நிறுவப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை நன்கு பெய்தவுடன். இந்நீரேற்று நிலையம் மூலம் இப்பகுதிக்குக் குடிநீர் வழங்குதல் அதிகரிக்கப்படும்.

பருவமழை பெய்து ஏரிகளில் நீர் இருப்பு அதிகரித்தவுடன், இந்தப் பகுதிகளுக்கு சீரான முறையில் தேவையான அளவு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படும்.





**திரு. கே. மகேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விவர அறிக்கையில், கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மழை பெய்யாததனுடைய காரணம், இன்றைக்கு சென்னை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப்பஞ்சம் சம்பந்தமாக விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தினால், கடந்த காலங்களிலே குழாய்கள் மூலமாக பல்வேறு தெருக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுக்கொண்டிருந்த குடிநீர் என்பது, சமீப காலங்களில் நிறுத்தப்பட்டிருக்கிறது. பெரம்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், தேர்தலுக்குப் பின்பாக 150 புதிய குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டாலும், ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக, தினம், தினம் பல்வேறு தெருக்களுக்கு குழாய் மூலமாக வரக்கூடிய குடிநீர் நிறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இதர தேவைகளுக்காக 440 இந்தியா மார்க் 2 பம்புகள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் விவர அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கடந்த காலத்திலே அமைக்கப்பட்ட 440 இந்தியா மார்க் 2 பம்புகளில் இன்றைக்கு 300-க்கும் அதிகமான இந்தியா மார்க் 2 பம்புகள் நிலத்தடி நீர் இல்லாத காரணத்தினால் வேலை செய்யாது, தண்ணீர் வராத நிலை ·ம நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே, கூடுதலாக இந்தியா மார்க் 2 பம்புகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று பெரம்பூர் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் இந்தியா மார்க் 2 கைப்பம்புகள் புதியதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர் குறிப்பிட்டுச் சொல்கிற பகுதிகளிலும், மற்றத் தெருக்களிலும் இந்தியா மார்க் 2 கைப்பம்புகள் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்து, குடிநீர்ப் பிரச்சினையுள்ள பல்வேறு பகுதிகளுக்கு லாரிகள் மூலமாகவும், டேங்கர்கள் மூலமாகவும் தெருக்களிலே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படாத வகையில் நிருவாகம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் (குறுக்கீடு) மகேந்திரன் இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமா?

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய இந்தியா மார்க் 2 பம்புகள் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, ...

## 4. தகவல் கோரல்

### (அ) வேலூர் குடிநீர்ப் பிரச்சினை

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே ... .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். ஞானசேகரன் சொல்லுங்கள்.

*முற்பகல் 11-20*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை குறித்து, நான் ஏற்கெனவே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள பாலாற்றில் இருக்கக்கூடிய கிணறுகள் எல்லாம் வற்றிவிட்டன. 10 நாட்களுக்கு ஒருமுறைதான் வேலூரிலே குடிநீர் வழங்கப்படுகிறது. மிகவும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 3 ஆண்டுகளுக்கு முன்னாலே, எங்களுடைய வேலூர் குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு G.O. போடப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும்கூட, அது 3 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் போய், கடைசியில் இப்போது நான்காவது முறையாக டெண்டர் விடப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். இது வேலூர் குடிநீர் பற்றிய பிரச்சினையானது என்றால், அதை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சரிடத்தில் ஏதாவது இது சம்பந்தமான விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். ஏனென்றால் இன்றைக்குக் கடைசி நாள். அமைச்சர், ஏதாவது விளக்கம் இருந்தால் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 19.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தம் நிர்வாகத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** டெண்டர் விட்டாகிவிட்டது. Only it should be approved by the Board.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாக அமைச்சரிடம் போய்க் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. புகழேந்தி.

### (ஆ) கடலூர், வருவாய்த் துறை மற்றும் நில அளவைத் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காதது

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பாக கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தேன். கடலூரில் 50 அரசு ஊழியர்கள், வருவாய்த் துறை மற்றும் நில அளவுத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அயல் பணி deputation duty என்று நிலம் கையகப்படுத்துகின்ற பணியிலே இருக்கின்ற அவர்களுக்கு பணிகள் முடிந்த பிறகும், இன்னும்—கடந்த 3 மாதங்களாக, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 3 மாதங்களாக—ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறது; சம்பளம் தரப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகத் தருவதற்கு ஏற்பாடு—வேறு பணம் வர வேண்டுமென்றால்கூட அரசு அவர்களுக்கு ஊதியம் கொடுத்துவிட்டு வருகின்ற நாகார்ஜுனாவோ அல்லது வேறு திட்டத்தின் மூலமாகவோ வருகின்ற பணத்தை ஒதுக்கிக் கொடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. யோசனைகளையெல்லாம் சொல்லாதீர்கள். என்ன பிரச்சினை என்று மட்டும் சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஆகவே, அதற்கான நடவடிக்கையை உடனே அரசு எடுத்து, அந்த 50 ஊழியர்களுக்கும் இந்த 3 மாத சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருவாய்த் துறை அமைச்சரிடம் ஏதாவது பதில் இருக்கிறதா?

[2001 செப்டம்பர் 14

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கோரிக்கை வடிவத்தில் கொடுப்பார் என்றால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வேல் முருகன், சொல்லுங்கள்.

**(இ) காட்டுமன்னார்குடி வட்டம், பெண் வட்டாட்சியரை வீடு புகுந்து தாக்கியது**

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டத்தில், வட்டாட்சியராகப் பணிபுரிகின்ற ஒரு பெண் அதிகாரியை ஒரு வன்முறைக் கும்பல், வீடு புகுந்து தாக்கி, இப்போது அந்த மாவட்டத்திலே பதட்டம் ஏற்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்னுடைய கவனத்திற்கே வரவில்லை. (குறுக்கீடு) துறை சம்பந்தமான ஏதாவது பிரச்சினைக்கு நீங்கள் பரிகாரம் காண வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்.

**(ஈ) வெளிநாடுகளில் வேலைக்காகச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக இருப்பவர்களை மீட்பது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களுக்கு முன் தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தமிழகத்திலே, படித்துவிட்டு வேலையில்லாதவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு, இங்கே இருக்கக்கூடிய agency மூலமாக வேலைக்குச் செல்கிறார்கள். அப்படி வேலைக்குச் சென்ற இடங்களிலே அவர்கள் மிகக் கொடுமைப்படுத்தக்கூடிய நிலையிலே, மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களுக்கு, அதாவது 300-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் அறிவிப்புகள் வந்திருக்கின்றன. நாம் எந்த அளவுக்கு ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக் கொள்கிறோம். எல்லாப் பிரச்சினைகளுமே முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இவற்றையெல்லாம் நாம் எடுக்க



2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

வேண்டுமென்றால், ஆண்டு முழுவதும் சட்டமன்றக் கூட்டம் நடத்தினாலும் முடியாது. ஆகவே, சில பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்திற்கு நேரடியாகக் கொண்டு வாருங்கள். அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள். அதையும் மீறி ஏதாவது பிரச்சினை இருந்தால், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இது முக்கியமான பிரச்சினை. நான் நீட்டித்துக் கொண்டே போகவில்லை. இப்படி மலேசியாவிலே 5,000 பேருக்கு மேலே, சிங்கப்பூரிலே 5,000 பேருக்கு மேலே கொத்தடிமைகளாக இருப்பது மாத்திரம் அல்லாமல், சிலபேர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் சிறையிலே வாடிக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே, எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள்கூட, கடந்த வாரம் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தகவல் கொடுத்து, தொலைபேசியிலும், தந்தி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் செய்தி கொடுத்திருக்கிறார்கள், அவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு. ஆகவே, சிறையிலே வாடக்கூடிய அந்த அப்பாவித் தமிழர்களை, கொத்தடிமைகளாக இருக்கக்கூடியவர்களை மீட்பதற்கு நம்முடைய தமிழக அரசு முன்வர வேண்டுமென்ற இந்தச் செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை நீங்கள் கோரிக்கை வடிவத்தில் முதலமைச்சருக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

எல்லாப் பிரச்சினைகளையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) இது முடியட்டும். திரு. எஸ்.ஆர். பி. அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன். அவர் முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள், திரு. ஆஸ்டின்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 9 முதல் 13 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

*முற்பகல் 11-25*

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் இந்தப் பேரவைக்கு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குண்டான வாய்ப்பினை அளித்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் குலதெய்வமான அம்மா அவர்களுக்கு எங்களுடைய குடும்பத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் முதலில் இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதிவாழ் மக்கள் அதிக வாக்குகளை அளித்து என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ததற்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னை பொது நிறுவனங்கள் குழுத் தலைவராக நியமனம் செய்து பணியாற்றிட எனக்கு ஓர் அரிய வாய்ப்பினை அளித்தமைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.





## 6. அறிவிப்புகள்

### (அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவை (Senate) ஆட்சிக் குழு (Syndicate) மற்றும் மாநில நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றிற்கு அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

| பல்கலைக்கழகம்/குழு/குழுமம் | உறுப்பினர்களின் பெயர்கள் |
|---|---|
| 1. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. பி.கே. சேகர்பாபு<br>2. திரு. வி. சோமசுந்தரம்<br>3. திரு. த. ஆறுமுகம்<br>4. திரு. ம. அப்துல் லத்தீப்<br>5. திரு. டி. சுதர்சனம்<br>6. திரு. பரிதி இளம்வழுதி |
| 2. மதுரை-காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. கு. அன்பழகன்<br>2. திரு. லா. சந்தானம்<br>3. திரு. க. பாரமலை<br>4. திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் |
| 3. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்<br>2. திரு. ப. மோகன்<br>3. திரு. போளூர் வரதன் |
| 4. தமிழ்நாடு டாக்டர் எம்ஜி-ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (ஆட்சிமன்றப் பேரவை) | 1. டாக்டர் சி. விஜயபாஸ்கர்<br>2. டாக்டர் தே. குமாரதாஸ் |
| 5. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. செ.மா. வேலுசாமி<br>2. திரு. கோவை தங்கம் |

| | | |
|---|---|---|
| 6. | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. அ. பாப்பாசுந்தரம்<br>2. திரு. வை. சிவபுண்ணியம் |
| 7. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. பி.ஜி. இராஜேந்திரன்<br>2. திரு. ஜே. ஹேமச்சந்திரன் |
| 8. | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. நா. சந்திரமோகன்<br>2. திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் |
| 9. | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. பி.ஆர். சுந்தரம்<br>2. திரு. கா.தி. இளையகண்ணு |
| 10. | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. கே.கே. உமாதேவன் |
| 11. | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை (ஆட்சிக்குழு) | 1. திரு. ஆகுசி. அன்பழகன் |
| 12. | தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் (நிர்வாகக் குழு) | 1. திரு. இரா. வில்வநாதன்<br>2. திரு. எச்.எம். ராஜு<br>3. திரு. கே.என். இலட்சுமணன் |
| 13. | மாநில நூலகக் குழு | 1. திரு. எஸ். இராமச்சந்திரன்<br>2. திருமதி நளினி மனோகரன்<br>3. திரு. ப.வெ. தாமோதரன் |
| 14. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (நிர்வாகக் குழு) | 1. திரு. ஆகு. முருகேசன் |
| 15. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை (நிர்வாகக் குழு) | 1. திரு. ஐ. கணேசன் |
| 16. | தமிழ்நாடு அனாதைகள் மற்றும் கருணை இல்லங்கள் (நிர்வாகக் குழு) | 1. திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி<br>2. திரு. செ. சிவசாமி<br>3. திரு. சி. ஞானசேகரன் |





தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

**(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

**(உ) தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் செய்யவுள்ள வேலைகளுக்கான பட்டியலைக் கொடுக்கும் கால அளவை நீட்டித்தல்**

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் இந்தக் கருத்தைக் கொண்டு வருகிறேன். இது என்னுடைய கருத்து அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய சார்பாகவும் இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன். நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாகச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக அரசு ஆணை ஒன்று 5-9-2001-லே வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணை நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள் வீட்டிற்கு ஒரு தபால் மூலமாக வந்திருக்கிறது. வேறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அநேகமாக அது வரவில்லை. எல்லோரும் இங்கே இருக்கிறோம். ஆனால், அதிலே என்ன சொல்லி இருக்கிறது என்று சொன்னால், நாளையதினம், அதாவது 15-9-2001-க்குள் அவசியம் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலே எந்தெந்த வேலைகளை எடுக்கப் போகிறோம் என்ற பட்டியலை—அவசரமாக 15-9-2001-க்குள்—கொடுக்க வேண்டுமென்று சொல்லி வலியுறுத்தி— (குறுக்கீடு)

முற்பகல் 11-30

[2001 செப்டம்பர் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதோ விளக்கம் கேட்கிறார்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** வலியுறுத்திக் கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் சென்னையிலே இருக்கிற காரணத்தால், இதில் கால நீட்டிப்புத் தேவை; அதாவது last date-ஐ நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரு வார காலம் அவகாசம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அத்தனைபேரும் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு வார காலம் என்பது போதாது. செப்டம்பர் 30 வரையில் இந்தத் தேதியை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையிலே, முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:



2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, C. Rangarajan, Governor of Tamil Nadu hereby give my recommendations for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2001-2002."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 13-9-2001 ஆம் தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.

**நிறைவேற்றப்பெற்ற 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | | |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | .. | 79,18 |
| 10 பால் வழங்கு செயல் திட்டங்கள் | .. | 8,10 |
| 15 காவல் துறை | .. | 3,20,60 |
| 17 கல்வி | .. | 3 |
| 18 மருத்துவம் | .. | 1,75,00 |
| 19 மக்கள் நல்வாழ்வு | .. | 63,93 |
| 23 கூட்டுறவு | .. | 1 |
| 27 ஊரக வளர்ச்சி | | 27,35 |
| 29 சமூக நலன் | | 4,43,12 |
| 32 வீட்டு வசதி | .. | 50,00 |
| 35 பாசனம் | .. | 5 |
| 38 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | .. | 2 |
| 42 பல்வகை | .. | 1 |
| 50 சுற்றுலா | .. | 17,10 |
| மொத்தம் - அ. வருவாய்க் கணக்கில் செலவு | | **11,84,50** |
| ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | | |
| 52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | .. | 82,82 |
| 54 பாசனம் குறித்த மூலதனச் செலவு | .. | 20 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 56 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | .. | 2 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | .. | **83,04** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | | |
| 61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | .. | 37,55 |
| பெரு மொத்தம் | | **13,05,09** |

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). *2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி* **ஒதுக்கச் (எண் 2)** சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2001) மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்டிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2001) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின்மீது **விவாதம்.** முதலில், டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது விவாதங்கள் நடைபெற்று, துணை மானியங்களின்மீது விவாதங்கள் நடைபெற்று, இன்று இறுதியாக இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை, இதுவரை நடைபெற்ற மானியங்களின் மீது விடுபட்டு இருக்கிற கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், VAT என்பதற்கு ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். அதிலே எனக்கு ஒரு clarification தேவை. I do not want to discuss the merits and demerits of the VAT system. But, I want to know what is VAT? Value Added Tax என்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஒரு பேனா 10 ரூபாய் என்று சொன்னால், அந்தப் பேனா மாநில distributor-க்குச் சென்று, அதற்குக் கீழே இருக்கிற மாவட்ட Regional distributor செல்கிறபொழுது, மாறி மாறிச் செல்கிறபொழுது ஒவ்வொரு இடத்திலேயும் அதற்கு வரி விதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த வரி விதிப்பு முறை என்பது multi point system என்ற முறையில்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், பலமுனை வரி என்பதை மாற்றி, single point tax ஆக மாற்றி இருக்கிறோம்.



என்னுடைய புரிந்துகொள்ளும் தன்மை சரியாக இருக்கும் என்று சொன்னால், if my understanding is right, VAT - Value Added Tax என்பது, ஒரு பொருள் வாங்கப்பட்டு, வாங்கப்படுகிற பொருளினுடைய மதிப்பு உயருகிற இடத்திலேதான் அந்த Value Added Tax போடப்படுகிறது. உதாரணமாக, ஒரு மரத்தை வாங்குகிறபொழுது அந்த மரத்திற்கான வரி மட்டுமே போடப்படுகிறது. அந்த மரத்தை ஒருவர் மேஜையாகச் செய்கிறபொழுது இதனுடைய value increase ஆகிறது. மரத்தினுடைய value வேறு. அந்த மரம் மேஜையாக மாறுகிறபோது, அதனுடைய value அதிகரிக்கிறது. அந்த அதிகரிக்கப்பட்ட மதிப்புதான் Value Added Tax அந்த அதிகரிக்கப்பட்ட அந்த value-வுக்கு மட்டுமே போடப்படுகிற வரியாகத்தான் இந்த Value Added Tax என்பதை நான் கருதுகிறேன். அதுவும், குறிப்பாக அதற்குரிய definition-லே கூட Tax is paid by every company that handles a product during its transformation from raw materials to finished goods என்ற அடிப்படையிலேதான் அது இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே இந்த Value Added Tax பற்றி நான் முதலிலே சொன்னதுபோல, அதனுடைய நன்மை தீமையைப்பற்றி நான் ஆராய விரும்பவில்லை. இதுபோன்ற tax முறைகளிலே பல்வேறு நாடுகளிலே அவற்றிற்கு for and against விவாதங்கள் இருந்தாலும்கூட, Value Added Tax முறைக்கு இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் அந்த definition-க்கு மட்டும் நான் விளக்கம் பெற இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-35*

மேலும் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், அவருடைய உரையிலே சுட்டிக்காட்டியதுபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகைகள் எல்லாம், பெரும்பாலும் அது ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளே அடங்கிவிடுகிறது. பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகை என்பது, நாங்கள் பொது மக்களிடம் சென்று அவர்களை அணுகுகிறபோது, அந்தக் கிராமத்திலே திடீரென்று ஏற்படுகிற சில சச்சரவுகளுக்காக,—சாலை வேண்டும்; குடிநீர் வசதி வேண்டும் என்று கேட்கிறபோது— அவற்றிற்கு நாங்கள் செய்து கொடுக்கிற வாய்ப்பாக இருந்தால்தான், ஒதுக்கப்படுகிற அந்த நிதிக்கே ஓர் உண்மையான பொருள் இருக்க முடியும்.

கடந்த காலங்களிலேகூட 75 இலட்சம் ரூபாய் ஒதுக்குகிறபோது, ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் கம்ப்யூட்டர் இருக்க வேண்டுமென்று

சொன்னபோது, ஒவ்வொரு தொகுதியிலேயும் 2 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அது கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய்க்குள் இருக்கும். மீதி 65 இலட்சம் ரூபாயை அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப, தேவைகளுக்கு ஏற்ப ஒதுக்கிக் கொடுக்கலாம் என்ற விதி இருந்தது. ஆனால், இப்போது நீங்கள் ஒதுக்கி இருக்கிற இந்தத் தொகையில், நீங்கள் கொடுத்து இருக்கிற இந்த புள்ளிவிவரத்தின்படியே, பெண்களுக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கு 20 இலட்சம் ரூபாய், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவியர் விடுதி கட்டுவதற்கு 12 இலட்சம் ரூபாய், ஆதிதிராவிடர் மாணவ-பழங்குடியினருக்கான மாணவ-மாணவியர் விடுதி கட்டுவதற்கு 12 இலட்சம் ரூபாய், கிராம நிர்வாக அலுவலர்கள் கட்டடம் கட்டுவதற்கு 6 இலட்சம் ரூபாய். ஆக 50 இலட்சம் ரூபாய் இதிலேயே சென்றுவிடுகிறது. மீதி இருப்பது 32 இலட்சம் ரூபாய்தான். இந்த 50 இலட்சம் ரூபாயில்கூட, பல தொகுதிகளிலே B.C. ஹாஸ்டலே இருக்காது; சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற சில தொகுதிகளிலே B.C. ஹாஸ்டலே இருக்காது; சில தொகுதிகளிலே S.C. ஹாஸ்டலே இருக்காது. அவற்றிற்கு நீங்கள் 12 இலட்சம் ரூபாய், 12 இலட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறீர்கள். நாங்கள் என்ன பண்ணுவோம்? இந்த G.O-வை வைத்துக்கொண்டு கலெக்டரிடம் போனால், உங்கள் தொகுதியிலே இ[illegible]லை என்று சொன்னால், வேறு எதற்காவது ஒதுக்குவார்களே தவிர, நாங்கள் அதற்கு clarification கேட்க வேண்டுமென்றால், அதற்கு 6 மாதங்கள் ஆகும். அதனால் நீங்கள் G.O. போடுகிறபோது அந்த மாதிரி இல்லை என்று சொன்னால், குறைந்தபட்சம் நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் குறைகளைக் கேட்கப் போகிறபோது அந்தந்தக் கிராமங்களிலே ஏற்படுகிற தேவைகள் குறித்து அதற்கு certain amount ஒதுக்கலாம். ஆனால் நீங்கள் சுட்டிக்காட்டி இருக்கிற இந்தத் தொகைகூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். இப்படி நீங்கள் இதில் சொல்லி இருக்கிற நிதி அதிலே இல்லாத நிதியா? இல்லை, அவர்கள் கட்டுவதற்காக நீங்கள் ஒதுக்கி இருக்கிற நிதிக்குள்ளேயே இது உட்படுகிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அதற்கு அப்புறம் நீங்கள் extra-வாகக் கொடுத்தீர்கள் என்றால்கூடப் பரவாயில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்கு நீங்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். நாங்களும் அதற்கு 10 கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்றால், அது திருப்தி அளிப்பதாகக்கூட இருக்கும். ஆனால், அந்த நிதிக்குள்ளேயே இது இருக்கும் என்று சொன்னால், நீங்கள் அந்த



நிதியிலேயே இதைக் காட்டிவிட்டு, வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த இடங்களிலே வேண்டுமென்று நீங்கள் சொன்னால் போதும் என்று இருந்தால்கூட, அது போதும். சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற இந்தத் தொகையானது 50 இலட்சம் ரூபாய்; இது குறிப்பிட்ட பணிகளுக்குத்தான் செலவிடப்பட வேண்டுமென்று சொல்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி என்பதனுடைய பொருளே அதற்குச் சரியாக இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதிலே கொஞ்சம் relax பண்ணி, தேவைகள் ஏற்படுகிறபோது அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, அந்தத் தொகுதியிலே இருக்கிற தேவைகளை உணர்ந்து அவற்றிற்கு ஒதுக்கப்படுகிற வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சென்னை மாநகரிலே நீங்கள் சொல்லியிருக்கிற பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவை கட்டுவதற்கு வாய்ப்பே கிடையாது. அங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கள் கொடுத்து இருக்கிற category -படி பயன்படுத்தவே முடியாது. அதனால் அவர்களுக்கு வேறு தேவைகள், அதுவும் huts போன்றவற்றிற்குச் செலவிட வேண்டிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இதைக்கூட நீங்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றிக் கொண்டு இருப்பவர்கள், இதே சட்டமன்றத்திலேகூட தற்காலிக ஊழியர்களாக நீண்ட நாட்கள் பணியாற்றிக் கொண்டு இருந்தவர்கள், இதற்கு முந்தைய ஆட்சியிலே சபாநாயகர்களால் நியமிக்கப்பட்டவர்கள்கூட கடந்த கால ஆட்சியிலே நிரந்தரம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியிலே நியமிக்கப்பட்டு 450 நாட்கள், 500 நாட்களுக்கு மேல் பணியாற்றி இருப்பவர்களெல்லாம்கூட, இப்போது பணி நீக்கம் செய்யப்படுவதாக அவர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீண்டகாலம் பணியாற்றியவர்கள். ஆகவே தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை நீங்கள் நிரந்தரப்படுத்துகிற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-.40

மேலும், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை ஆகியவற்றிலே open tender திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மு[illegible]ற பின்பற்றப்படுகிறது. ஆனால், சில இடங்களிலே schedule-ஐக் கொடுப்பதற்கு அதிகாரிகள்

[டாக்டர் க. பொன்முடி] [2001 செப்டம்பர் 14

மறுக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலேகூட ஒரு மாதத்திற்கு முன்பு schedule கொடுக்க மறுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்குச் சென்று 5 ஒப்பந்தக்காரர்கள், அந்த ஒப்பந்தங்களைப் பெற்றிருக்கிறார்கள். நேற்றைக்கு முதல் நாள் சென்னையிலே நடைபெற்ற தேசிய நெடுஞ்சாலைத் துறையில் அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளைக் கோருவதிலேகூட பலபேருக்கு schedule கொடுக்க மறுக்கப்பட்டு அவர்களெல்லாம் நேற்று நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே இந்த open tender, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறை மூலம், அதை அதிகாரிகள் செய்தாலும், அவர்களுக்கு யாராவது நிர்ப்பந்தம் இருந்தாலும்கூட அவர்களைக் கூப்பிட்டு, schedule கேட்கின்ற அனைவருக்கும் schedule கொடுக்கின்ற முறையை உருவாக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்யவேண்டும். ஏனென்றால், Internet-லே கூட schedule-ஐப் பெறலாம் என்ற முறைகளெல்லாம் கடந்தகாலத்திலே கொண்டுவரப்பட்டது. அவற்றை நீங்கள் தொடர்ந்து நடத்தி schedule கொடுப்பதிலே அந்த முறையை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காவிரி நதிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அங்கே மத்தியிலே இருக்கிற எங்களுடைய அமைச்சர்கள், அவர்களால் முடிந்தவரை முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று உங்களோடு தோழமையாக இருக்கிற காங்கிரஸ் கட்சியும், உங்களோடு இருக்கிற காரணத்தால், காங்கிரஸ் அமைச்சரே கர்நாடகத்திலே முதலமைச்சராக இருக்கிற காரணத்தால், அவர்தான் உடனடியாக முடிவு எடுக்க வேண்டுமென்ற காரணத்தால், அவர்களையும் வலியுறுத்தி நீங்கள் இந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், காவிரி நீரை இங்கே கொண்டு வருவதற்கு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று கர்நாடக மாநிலத்தில், கர்நாடக முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தற்போது தமிழகத்திற்கு காவிரித் தண்ணீரைத் திறந்துவிட இயலாது என்று தெரிவித்து, மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, கர்நாடக அனைத்துக் கட்சிகளின் அந்த முடிவைத் தெரிவிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். கர்நாடகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு இன்று பிரதமரைச் சந்தித்து இந்த முடிவைத் தெரிவிக்க உள்ளார்கள். ஆகவே, உடனடியாக காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று நான் பிரதமர்



2001 செப்டம்பர் 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அவர்களைக் கேட்டு, இப்பொழுதுதான் கடிதம் அனுப்பியிருக்கிறேன். அவசரக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, Supreme Court-க்குச் செல்ல வேண்டுமென்ற செய்தியைக்கூடச் சொன்னார்கள். அதைக்கூட சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் இங்கேயே சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே Supreme Court-ஐ அணுகுவது குறித்து விவாதிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Supreme Court-க்கு இப்போது சென்றால், அவர்கள், நீங்கள் Cauvery River Water Authority-ஐ அணுகினீர்களா என்று முதலில் கேட்பார்கள். அதனால்தான் முதற்கட்டமாக, Cauvery River Water Authority-யின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டவேண்டுமென்று பிரதமரைக் கேட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆணையத்தைக் கூட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னது, பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னதை இங்கே சொல்லியிருக்கலாம் என்று சொன்னேன். வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சுட்டிக்காண்பித்தேன். இந்த அவையிலே பேசுவதற்கு முன்பாகவே, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே இதைப்பற்றி விவாதிக்கப்பட்டது. தி.மு.க.வைச் சார்ந்த பிரதிநிதிகளும் இதைப்பற்றிப் பேசினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வீட்டுவசதித் துறையைப் பற்றிப் பேசுகிறபோது, வீட்டுவசதி மானியத்திலே பதில் அளிக்கிறபோதுகூட, ஏதோ சில பேருக்கு விதிமுறைகளை மீறி, இடம் ஒதுக்கியிருப்பதாகவும், அவை குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கடந்த காலத்திலேகூட discretionary quota என்று ஒன்று இருந்தது. அதிலே பலபேருக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் வீட்டுவசதி வாரியத்தினுடைய விலை நிர்ணயப்படிதான் ஒதுக்கப்பட்டன. எந்தக் காலத்திலும் சரி. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனுடைய வரலாற்றை எடுத்துப் பார்க்கவேண்டும், யார் யாருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்; எந்த விலைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று.

Discretionary quota என்று சொன்னால், அதை ஒதுக்குகிறபோது, விலை நிர்ணயம் செய்கிறபோது, இந்த வருடம் Housing Board-ல் வாங்கிய purchase price, அதை வைத்துத்தான் விலை நிர்ணயம் செய்வார்கள். அது 4 வருடம் ஆகிவிட்டால், வருடா வருடம் அதற்கு tax போட்டு 4 வருடத்திற்குப் பிறகு அந்த விலையை fix செய்வார்கள். அந்த விலைக்குத்தான் எந்தக் காலத்திலும் கொடுக்கப்படுவது உண்டு. இந்த 100 நாட்களில்கூட, நீங்கள் சிலபேருக்கு வீடுகளை ஒதுக்கியிருக்கிறீர்கள். அது Market Price-ஐ Housing Board fix பண்ணுகிற price-ஆ என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் அலசிப் பார்த்து சொன்னால் நன்றாக இருக்கும்.

*முற்பகல் 11-45*

அதுமட்டுமல்ல. முன்புகூடப் பல பேர் இங்கே இருக்கிறவர்கள் வீடுகளைப் பெற்றிருக்கிறார்கள். நான் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. இங்கே இருக்கிற அமைச்சர் தம்பிதுரை அவர்களுடைய துணைவியார், இங்கே இருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள். . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பான, முற்றிலும் புறம்பான ஒரு தகவலை அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். எந்தக் காலத்திலும் எந்த இடமும் அரசிடமிருந்து நாங்கள் பெற்றதில்லை.





**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. பெயர் வேண்டுமானால் சொல்லாமல் விட்டுவிடுகிறேன், சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது . . .

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் தற்போது பேசும்பொழுது, நிலங்கள், மனைகள் எல்லாம் எவ்வாறு ஒதுக்கப்பட்டன, ஒதுக்கப்பட்டதில் என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை வினவியிருக்கிறார். அதைச் சொல்லும்போது ** சொன்னார் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அதாவது, நீங்கள் பேசிய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், பெயர்களைக் குறிப்பிட்டது முறையற்றது. குறிப்பிட்ட அந்தப் பெயர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பெயர் இருக்கட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இந்த அவையிலே பலமுறை விவாதிக்கப்பட்டதுதான்; புதிய பொருள் ஒன்றும் கிடையாது. இந்தக் கருத்தைக் கருணாநிதி அவர்களும் முன்பு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ** என்று எல்லோரையும் சேர்த்துச் சொல்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** முன்னாள் முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே, 1989-ல் ஆட்சிக்கு வந்த உடனே, சில பழிவாங்கும் செயலில் ஈடுபட்டார்கள். அதிலே குறிப்பாக, நான் பாராளுமன்ற துணைச் சபாநாயகராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, எப்படியெல்லாம் தொல்லை தர வேண்டுமோ அப்படித் தொல்லை தந்து, அதையெல்லாம் அனுபவித்தவன் நான். அதை மறுக்க முடியாது. புரட்சித் தலைவி அவர்களும் அனுபவித்து இருக்கிறார்கள். அதுபோலப் பல

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைகிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் மு. தம்பிதுரை] [2001 செப்டம்பர் 14

தொண்டர்கள் அனுபவித்து இருக்கிறார்கள். நானும் அனுபவித்து இருக்கிறேன். அதில் முதன்முதலாக அவைக்கு வந்த உடனேயே இந்தப் பிரச்சினையை அவர் எழுப்பினார். எவ்வாறு ** ஒதுக்கலாம் என்று கேள்வி கேட்டார். அப்போது ஒதுக்கியதற்குக் கையெழுத்திட்டவர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள். அப்போது அவர் விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கின்றார். இது முறைப்படிதான் application பெற்று, மனுவினைப் பெற்று நடந்தது என்று சொல்லியிருக்கிறார். அடிப்படை இன்னும் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய வீட்டுவசதித் துறை அமைச்சர் என்ன சொன்னார் என்றால், திரு. லத்தீப் அவர்களும் கேட்டார்கள். வீட்டு மனை ஒருவருக்கு சென்னை நகரத்திலே இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று கேள்வி கேட்டார். ** ஒதுக்கும்போது, எனக்கு எந்தச் சொத்தும் இன்றைக்கும் கிடையாது. நான் வாடகை வீட்டில்தான் இருக்கிறேன். சென்னை மாநகரிலே எனக்கு எந்தவிதமான சொத்தும் கிடையாது. அப்படி ஏதாவது முறைப்படியும் செய்யவில்லை. ஆனால் அவர் வைரமுத்து அவர்களின் பிரச்சினையைக் கொண்டுவந்தபோது நீங்கள் கோபப்பட்டுப் பேசினீர்கள். வீட்டு நம்பர் எல்லாம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, எப்படி இன்னொரு மனை ஒதுக்கலாம் என்று கேள்வி கேட்டார்கள் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி கேள்வி கேட்கவில்லை. கேள்வி கேட்க நான் அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அடுத்ததாக, முறைகேடுகள் நடைபெறவில்லை. இரண்டாவது என்ன market price fix செய்தார்களோ, அந்த விலைக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். Housing Board-ல் என்ன fix செய்கிறார்களோ அதைத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் எனக்கு ஒதுக்கித் தந்தார்கள். மாண்புமிகு திருநாவுக்கரசு மந்திரியாக இருக்கும்போது செய்திருக்கிறார். அதற்காகப் பணமும் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் 1989-லே முன்னாள் முதல்வர் அவர்கள் பிரச்சினையை உருவாக்கினார்கள். இன்னும் Court-லே இருக்கிறது, இன்னும் முடிந்தபாடில்லை. அதனால் நான் ஒன்றும் கட்டவில்லை. அப்படியே அந்த நிலம் இருக்கிறது. அதிலே ஏதாவது குறைபாடு இருந்தால் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். அதை வைத்துக் கொள்ளவேண்டுமென்று இல்லை. அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. அதை யார் யார் எல்லாம் வேண்டும் என்று குறிவைத்து இருக்கிறார்கள் தெரியுமா,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 செப்டம்பர் 14] [டாக்டர் மு. தம்பிதுரை]

அண்ணா நகரில் மூலைமுடுக்கெல்லாம் வேண்டும் என்று இருக்கிறார் ஒரு முன்னாள் அமைச்சர், அவர் அதைக் குறி வைத்தார். அதை எப்படியாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு முறையும் — அண்ணா நகரிலே இருக்கிற சொத்து பூராவும் முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது — அவர் இதற்கு முயற்சி செய்தார். அது அப்படியே Court-லே இருக்கிறது. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நிறைய சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுவசதித் துறையைப் பொறுத்தவரையிலே அவர்கள் நிர்ணயிக்கின்ற விலை, சென்ற ஆண்டு எவ்வளவோ அதைவிட 15 சதவிகிதம் உயர்த்தி அடுத்த ஆண்டு விற்பதுதான் வழக்கம். அதன்படிதான் விற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே விற்கப்பட்ட விலைக்குத்தானே தவிர—அதிலே நான் உங்களிடம் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்வது, கேள்வி நேரங்களிலே குறைகள் சொல்லக்கூடாது என்று விதி இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் கிடையாது. அதனால் அமைச்சர் ஒருவர் பதில் சொல்கிறபோது, கேள்வி நேரத்தைவிட்டு இந்தமாதிரி நேரங்களில் எந்தக் குறைகளை வேண்டுமானாலும் சொல்லட்டும். விசாரிக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தக் குறைகளைச் சொல்கின்றபோது அதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு அல்ல. திரு. சேகர்பாபு கேட்ட கேள்விக்கான விளக்கத்தை மட்டுமே அமைச்சரைச் சொல்ல நான் அனுமதித்தேன். அதற்கு மேலே போகும்போதுகூட நானே தடுத்து, வேண்டாம் என்று அவற்றையெல்லாம் நான் விட்டுவிட்டேன். சொன்ன, அந்தத் துறையிலிருந்து கொடுக்கப்பட்ட விளக்கத்தை மட்டும்தான் அமைச்சரை நான் வாசிக்க அனுமதித்திருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இதுபோன்ற நெடுஞ்சாலைத் துறைகளிலே இருக்கிற இந்த tender போன்றவற்றிலே எல்லாம் கவனம்

செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு துறைகளிலே அதிகாரிகள்கூட நியமிக்கப்படாத சூழ்நிலைகள் இருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையிலே இன்னும்கூட C.E. பதவிகள். 5, 6 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மேற்பார்வைப் பொறியாளர்கள் எல்லாம் நியமிக்கப்படாமல் பல்வேறு இடங்களிலே 8, 9 இடங்கள் காலியாக இருக்கின்றன. மொத்தம் 40 பேர் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை நியமிப்பதற்கான முயற்சியையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவிற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், 10 மணித் துளிகளில் முடித்து விடுங்கள். நிறையச் சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 15 மணித்துளிகள் கொடுங்கள். தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையில் குக்கிராமத்தில் சாதாரண தொண்டர்களாக இருந்துவந்த எங்களையெல்லாம் இந்த மாமன்றத்திற்கு வந்து மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்து, மீண்டும் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியை நிறுவி, சிறந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 133 சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1-½ கோடி தொண்டர்களின் சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கவர்னர் உரை விவாதத்திலும் முதலில் பேச அனுமதித்து, துணை மானியக் கோரிக்கை விவாதத்திலும் என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய ஆசியால் இந்த 12-வது சட்டமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்களும், உறுப்பினர்களும் இன்று வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே புதிய வார்ப்புகளை எல்லாம் உருவாக்கி சரித்திரம் படைத்த சாதனை உங்களையே சாரும்.

பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 19 சட்டமன்ற உறுப்பினர்களை



இந்த மாமன்றத்திலே பேச வைத்து அழகு பார்ப்பதோடு 3 பெண் அமைச்சர்களை நியமித்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய உறுப்பினர்கள், அதிலும் பெண் உறுப்பினர்கள் தங்களுடைய கன்னிப் பேச்சைப் பேசுகிறபோது அனைவருடைய கவனத்தையும் கவர்ந்துவிட்டார்கள். எதிர்க்கட்சிகளே பார்த்து அதிசயக்கும் விதத்தில், ஏன் எங்களைப் போன்ற உறுப்பினர்கள் எல்லாம் இன்று பார்த்துப் பரவசம் அடையும் விதத்திலே, பெண் உறுப்பினர்கள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அவையைப் பற்றி நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமிகூட, அவைக்கு அனைவரும் தவறாமல் வருகிறார்கள் என்று கூறினார். 11-வது சட்டமன்றக் கூட்டத் தொடரில் எல்லாம், மாலையில் அவை நடக்கும்போது, quorum இல்லாத சூழ்நிலைதான் அன்றைக்கு இருந்தது. ஆனால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் காலையில் அவை நடந்தாலும் சரி, மாலையில் நடந்தாலும் சரி, தவறாமல் கலந்துகொள்கிறார்கள் என்ற கூற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கக்கூடிய விதத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவர்னர் விவாதத்திலும் சரி, பட்ஜெட் விவாதத்திலும் சரி, காவல் துறை மானியக் கோரிக்கையிலும் சரி, தனக்கென ஒரு பாணியை வைத்துக்கொண்டு, தனி முத்திரை பதித்துள்ளார்கள். இந்த அவையிலே இரண்டு நிமிடங்கள்கூட நின்று என்னால் பேச முடியாது என்று சொல்கிறவர்கள் மத்தியிலே, இரண்டு மணி நேரம் தன்னுடைய காவல் துறை மானியக் கோரிக்கையின்போது பதிலுரையில் தங்கு தடையில்லாமல் பேசி அற்புதமான சாதனையைப் படைத்திருக்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இப்போது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சட்டமன்றப் பேச்சை, எதிர்க்கட்சிகளுடைய விவாதத்தை, அவர்களுடைய பதிலை இன்றைக்கு தமிழக மக்கள் தொலைக்காட்சியிலே பார்த்துப் பாராட்டுகிறார்கள், பரவசமடைகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்றவுடன், இந்த அவையிலே உரையாற்றிய முன்னாள் முதல்வர், 234 சட்டமன்றத்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2001 செப்டம்பர் 14

தொகுதிகளையும் என்னுடைய தொகுதியைப் போலப் பாவிப்பேன் என்று கூறினார். ஆனால் நடந்தது என்ன? எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒரே காரணத்திற்காக, என்னுடைய ராசிபுரம் தொகுதி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. நான் ஒவ்வொரு முறையும், தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவேன். ராசிபுரத்தில் ஒரு புதிய தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்பேன். அப்போது கூறுவார், அவருக்குரிய பேச்சாற்றலால் கூறுவார், "சுந்தரம் அவர்கள் ஒன்றாவது கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார், நிச்சயம் ஏதாவது ஒரு தொழிற்சாலை ராசிபுரத்தில் அமைக்கப்படும் என்ற உறுதியைக் கொடுக்கிறேன்" என்ற உறுதியை கடந்த 4 ஆண்டுகாலமாக, ஒவ்வொரு ஆண்டாகக் கொடுத்தார். அவர் உறுதியைக் கொடுத்தார் என்பதைத்தவிர, தொழிற்சாலை எதுவுமே வரவில்லை. அம்மா அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தால் உங்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ராசிபுரத்தில் ஒரு புதிய தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று நான் இங்கே வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ராசிபுரம் நெரிசல் நிறைந்த பகுதியாகும். பலநேரங்களில் போக்குவரத்துத் தடைபட்டு விடுகிறது. எனவே, ராசிபுரம் நகரில் புதிய புறவழிச் சாலை ஒன்றை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டமான மோகனூர்-சிராப்பள்ளி-நாமகிரிப்பேட்டை-புதுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

சேலம், நாமக்கல் போன்ற பகுதிகளில் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருளான குச்சிவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படுகின்ற ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை எல்லாம் Sago Serve-இல் விற்கும்போது அந்த Sago Serve ஸ்தாபனத்திற்குக் கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகின்ற காரணத்தால், அங்கே குச்சிவள்ளிக் கிழங்கிற்குச் சரியான விலை கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து அம்மா அவர்கள் Sago Serve நிறுவனத்திற்கு விதிக்கப்படுகின்ற கூடுதல் விற்பனை வரியினை இரத்து செய்ய ஆணையிட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் கடந்த 5 ஆண்டுகளாக நான் இந்த மாமன்றத்திலே பேசினேன். ஆனால் ஒரு கோரிக்கைகூட



2001 செப்டம்பர் 14] [திரு. பி.ஆர். சுந்தரம்]

ஏடுபடவில்லை. ராசிபுரத்தை ராசியில்லாத புரமாக அன்றைய ஆட்சியாளர்கள் மாற்றிவிட்டார்கள். ஆகவே, அம்மா அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், ராசிபுரத்தை மகாராசிபுரமாக மாற்றித் தரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மகத்திலே பிறந்த நீங்கள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) மகராசி உங்களால்தான் அதை நடத்திக் காட்ட முடியும் என்பதை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே அவை மரபைப்பற்றி எல்லாம் பேசினார்கள். முன்பு என்ன நடந்தது? அவை மரபைப்பற்றி திரு. துரைமுருகன் மற்றும் சில உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். 11-வது அவையிலே நடந்த அவை மரபிலே ஒரு சிலவற்றை பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு எடுத்துச் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

*1997* ஆம் ஆண்டு, மார்ச் மாதம் *27* ஆம் தேதி இந்த அவையிலே நடந்த ஒரு நிகழ்ச்சி. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ராஜிவ் காந்தி கொலையாளிகளான சிவராசன், தாணு இவர்களுடன் இருப்பதுபோல ஒரு போலியான புகைப்படத்தைச் சட்டமன்றத்திலே காட்டி, அந்தக் கொலையாளிகளுடன் புரட்சித் தலைவி அவர்களையும் சம்பந்தப்படுத்தி, தேசத்துரோக வழக்குத் தொடுப்போம் என்று இங்கே பேசினார்கள். அதற்குப் பிறகு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதை மறுத்தார்கள். அந்தப் புகைப்படத்தில் இருப்பவர்கள் தருமபுரியைச் சேர்ந்த நஞ்சே கவுடா, தாட்சாயிணி என்று புரட்சித் தலைவி அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை நான் இந்தச் சட்டமன்றத்திலே எழுப்புவதற்கு எழுந்து நிற்கிறேன். எழுந்தால், என்னைத் தூக்கி வெளியே வீசினார்கள். அதுதான் அன்றைக்கு நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுகின்றார்கள், பேசுகின்றார்கள், கலாட்டா செய்கின்றார்கள்; அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மற்றொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் தாக்கப்படுகிறார்கள். அவர் தாக்கப்பட்ட சம்பவத்திலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சம்பந்தப்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர், திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கொச்சையாக ஓர் அறிக்கையை வெளியிடுகின்றார். 'இரவிலே ஆளை வைத்து அடித்துவிட்டு, பகலிலே பூச்செண்டு கொடுக்கச் செல்கின்றார்

புரட்சித் தலைவி' என்று அவர்கள் கூறினார்கள். அம்மா அவர்கள் அதை மறுக்கிறார்கள். தலைமைச் செயலாளர் எதற்காகத் தாக்கப்பட்டார் என்றால், அது வேறு ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு அன்று அந்த நிகழ்ச்சி நடக்கிறது. அதைத் திரித்துக் கூறி, புரட்சித் தலைவி அவர்கள்மீது களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஓர் அறிக்கையை வெளியிடுகின்றார். அந்த அறிக்கையைப்பற்றி சட்டமன்றத்திலே நான் பேச எழுகின்றேன். பேச எழுந்தவுடனே என்னைத் தூக்கி வெளியே வீசினார்கள் என்பதுதான் அன்றைய அவை மரபு. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏன், நானே இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியிலே கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெற்றபோது, விண்ணப்பப் படிவங்களை வாங்கச் சென்ற என்னை அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர் அடியாட்களை வைத்து அடித்து, என்னை உதைத்து, எனக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. அதை இந்த மாமன்றத்திலே நான் எழுப்ப முயன்றபோது, அன்றைக்கு அனுமதித்தார்களா அந்த ஆட்சியாளர்கள்? அனுமதித்தாரா இங்கே அமர்ந்திருந்த முன்னாள் சபாநாயகர் அவர்கள். இன்று சபாநாயகர் அவர்களைப் பார்த்து எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்கிறார்கள். அமருங்கள், அமருங்கள் என்று கூறினாலும் அமருவதில்லை. அதுதான் அன்றைய அவையின் மரபு. இதுதான் இன்றைய அவையின் மரபு. (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைக்குக்கூட புரட்சித் தலைவி அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்த மரபு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆமாம். இதை நான் நேரடியாகச் சொல்வேன். நேற்றைக்குக்கூட துரைமுருகன் அவர்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களிடம் கூறி நீங்கள் பேசுங்கள் என்று அனுமதித்தார்கள். அதுதான் இந்த அவையின் மரபு. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இந்த 12-வது சட்டமன்றத்தின் அவை மரபு என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களான திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஆக இருந்தாலும் சரி, மாண்புமிகு பொன்முடியாக



இருந்தாலும் சரி, வீட்டுவசதித் துறை மானியத்தில், பொதுப் பணித் துறை மானியத்தில் பேசுகிறபோது, புள்ளிவிவரங்களை எடுத்துப் படித்தார்கள். எங்களுக்கும் புள்ளிவிவரங்களைக் காட்டத் தெரியும். இந்த 100 நாட்களில் என்ன சாதித்து விட்டீர்கள், சாதித்து விட்டீர்கள் என்று கேட்கிறீர்கள். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 100 நாட்களில், புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனை, 14-5-2001-லிருந்து 28-8-2001 வரை. இந்த 100 நாட்கள் சாதனை என்ன தெரியுமா? புரட்சித் தலைவி அவர்கள் சார்பாகப் பெறப்பட்ட மனுக்கள், முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவில் பெறப்பட்ட மனுக்கள், புரட்சித் தலைவி அவர்கள் நேரடியாகப் பெற்ற மனுக்கள் 3,15,345., (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 100 நாட்களில். அந்த மனுக்களில், 2,99,726 மனுக்கள் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே தீர்வு கண்ட மனுக்கள் 21 ஆயிரத்து 13 மனுக்கள். நான் சொல்கின்றேன். மற்றொன்றை இந்த மாமன்றத்திற்குச் சொல்கிறேன். நீங்களும்தான் அன்றைக்கு மனு வாங்கினீர்கள், மனுவே வாங்கவில்லை, கொடுத்தார்கள், அதுதான் உண்மை. ஓராண்டுகாலத்தில் - ஐந்தாண்டுக்காலம் பட்டியல் என்னிடம் இருக்கிறது — நேரத்தின் அருமை கருதி ஒரே ஆண்டு, கடைசி ஆண்டு.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஜனவரி 2000-த்திலிருந்து டிசம்பர் 2000 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல்வர் அவர்கள் தனிப் பிரிவிலே வாங்கப்பட்ட மனுக்கள் மட்டும் 2,98,472. நீங்கள், சற்றுக் கூர்மையாக - - அவை உறுப்பினர்கள் அனைவருமே - - பார்க்க வேண்டும். ஒரு வருடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில். 2,98,472 மனுக்கள் பெறப்பட்டன. ஆனால் இன்று 100 நாட்களில் 3,15,000 மனுக்கள். நூறு நாட்கள் எங்கே, ஒரு வருடம் எங்கே? இதுதான் இந்த ஆட்சியின் சாதனை. இன்னும் நிறைய எங்களுடைய சாதனைகளை நான் சொல்ல முடியும். இன்னும் ஒன்றே ஒன்று, அடுத்தபடியாக (குறுக்கீடு)

நண்பகல் 12-00

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... (கூச்சல்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக நான் சொல்கிறேன். புரட்சித் தலைவி அவர்களுக்கு மக்களுடைய மத்தியிலே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சமூக நலத் துறை அமைச்சர் உட்காருங்கள். நான் அவரை அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதித்தால்தானே பேசுவார். (குறுக்கீடு) திரு. சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு என்றைக்குமே பள்ளி மாணவர்கள், படிப்பவர்கள் மத்தியிலே தனிப்பட்ட பாசம் உண்டு. அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் படிப்பதற்கு வசதியற்றவர்கள், அது பொறியியல் கல்லூரியில் படிப்பவர்களாக இருந்தாலும் சரி, அல்லது மருத்துவக் கல்லூரியில் படிப்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மனு கொடுத்தவுடனே, ஏன் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யாமலேயே, அமைச்சர்கள் பரிந்துரை செய்யாமலேயே அவர்களை நேரடியாக அழைத்துவந்து, இதுவரை 125 பேருக்கு, டாக்டர்கள், எஞ்ஜினியர்களாவதற்கு, அவர்கள் படிப்பதற்கு மட்டும் உதவிய தொகை 31,40,000 ரூபாய். புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அறக்கட்டளையின் சார்பாகக் கொடுக்கப்பட்ட தொகை இதிலே வரவில்லை. இவற்றையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் நாங்கள் பரிந்துரையே செய்யவில்லை. என்னுடைய தொகுதியிலிருந்து இரண்டு பேர் வருகின்றார்கள். நான் பத்திரிகையில் பார்க்கின்றேன். பத்திரிகையில் பார்த்ததற்குப் பிறகுதான் பொறியியல் கல்லூரியில் படிப்பவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் பணம் கொடுத்ததே எனக்குத் தெரிகிறது. அவர்கள் கிராமத்திலிருந்து என்னை வந்து பார்க்கின்றார்கள். அம்மா அவர்களைப் பார்த்தோம், அவர்கள் எங்களுக்கு 25,000 ரூபாய் கொடுத்தார்கள் என்று பரவசம் அடைகின்றார்கள். இதுதான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிற தொண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இருதய அறுவைச் சிகிச்சைகளுக்காகப் பல கோடி ரூபாயைப் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்ற 120 நாட்களில் அற்புதமான சாதனைகளை நடத்திக் காட்டியிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். நிறையப் பேச வேண்டும். ஏற்கெனவே நானும் பட்ஜெட் விவாதத்திலே பேசியிருக்கிறேன். இரண்டே இரண்டு. 311 கோடி ரூபாய் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார்கள். இங்கேயிருக்கிற நாங்களும், நம்முடைய ஞானசேகரன் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தவர்கள் அனைவருமே



கேட்டோம். என்ன கூறினார் அன்றைய முதல்வர். நபார்டு வங்கி, நபார்டு வங்கி. எதற்கெடுத்தாலும் நபார்டு வங்கி. அதுவும் கொச்சையாக உங்கள் அம்மா எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்று இதையேதான் கூறினார்களே தவிர- (குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை. நான் முடித்து விடுகிறேன். நான் முடித்தபிறகு நீங்கள் பேசுங்கள். நீங்கள் நினைத்திருந்தால், (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன், அப்புறம் நீங்கள் பேசுங்கள். நீங்கள் நினைத்திருந்தால் அன்றைக்குக் கடனை ரத்து செய்திருக்க முடியும்.

அதேபோல தேயிலை விலைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அன்றைக்கு நடு ரோட்டிலே வைத்து போலீசார் அடித்தார்கள். இன்றைக்கு இங்கே ஊட்டியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் புகழ்கிறார்கள். இன்றைக்கு எப்படி அது சாத்தியம்.

அதேபோல மனித உரிமை மீறலைப் பற்றிப் பேசுகிறீர்கள். அன்றைக்கு மனித உரிமை கமிஷன் 31,30,000 ரூபாயை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டது. அன்றைய ஆட்சியாளர்கள் நிறைவேற்றினார்களா? புரட்சித் தலைவி அவர்கள் வந்தவுடன் அந்த 31,30,000 ரூபாயை அவர்களுக்குக் கொடுக்க ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் கேட்கிறீர்கள் சிமெண்ட் விலையைப் பற்றி. 200 ரூபாய்க்கு விற்ற சிமெண்ட் 125 ரூபாய்க்கு வந்திருக்கிறது. நீங்கள் விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசைக் கேட்க வேண்டும் என்று சொன்னீர்கள், இப்போது எப்படிக் குறைந்தது என்று நாங்கள் கேட்டால் அது மத்திய அரசு, என்கிறார்கள். இப்போது எப்படி என்று கேட்டால் அது கொள்கை என்கிறார்கள். ஒன்றை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். சாராயம் குடித்தவன் பக்கத்திலே போலீஸ் வரவில்லை என்றாலும் இதோ போலீஸ் என்று கூறினால் சாராயம் குடித்தவனுக்கு அந்தப் போதை தெளிந்துவிடும் என்று கூறுவார்கள். அதுபோலப் புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்தவுடன் தொழிலதிபர்களை அழைத்து,-- நிதியமைச்சர் அவர்களை அழைத்து -- பேசியதன் விளைவாக இன்றைக்கு 125 ரூபாய்க்கு சிமெண்ட் விலை வந்திருக்கிறதே இது எப்படி சாத்தியம்? நேற்றைக்கு ஓர் அறிவிப்பை

அறிவித்திருக்கிறார்கள். யாருமே எதிர்பார்க்கவில்லை. கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே 110 கோடி ரூபாய்; இதை யாராவது எதிர்பார்த்தோமோ; இதைப் புரட்சித் தலைவி அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். இவை எல்லாம் பேரறிஞர் அண்ணாவின் கனவை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை, பெருந்தலைவர் மூப்பனாருடைய கனவை நிறைவேற்ற—ஏனென்றால் நல்லாட்சி தருவார் புரட்சித் தலைவி என்று அன்றைக்கு மூப்பனார் அவர்கள் கூறினார்கள். இன்றைக்கு நல்லாட்சி தந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் விரோத ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கவில்லை—நல்லாட்சி தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-05*

விவசாயிகளுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நேற்றைய தினம் மிக விளக்கமாக அனைவரும் பேசிவிட்டார்கள். அதிலே உள்ளே சென்று என்னுடைய நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. இருந்தாலும் இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்கள் அதற்காகப் பல கட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால் முன்னாள் முதல்வர் அவர்கள் தேவை ஏற்பட்டால் வாஜ்பாயுடன் பேசுவேன் என்றார்கள். என்ன தேவை, எப்போது தேவை ஏற்படும்? இன்றைக்கு கர்நாடகாவிலே எதிர்க்கட்சிகள் அனைவரும் சேர்ந்து தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று தீர்மானத்தையே நிறைவேற்றிவிட்டார்கள். இன்னும் தேவை ஏற்படவில்லையா? இன்னும் என்ன தேவை ஏற்பட வேண்டும். ஏன் நீங்கள் அவர்களோடு பேச முடியாதா? 1924-லே போட்ட 50 ஆண்டு கால ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு * புதுப்பிக்கப்பட வேண்டும், அந்த 50 ஆண்டு கால ஒப்பந்தம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், ஒப்பந்தம் ** என்கிற சொல்லைப் பயன்படுத்தக்கூடாது. அந்த ஒப்பந்தம் மறுபடியும் 1974-லே புதுப்பிக்கப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த ** ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பித்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்குமா? அன்றைக்கு முதல்வராக இருந்த நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு நீங்கள் அதைச் செய்திருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை வந்திருக்குமா? இதை நான் எதற்காகத் தெரிவிக்கிறேன் என்றால்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.
** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



விவசாயிகள்மீது அன்றைக்கும் உங்களுக்கு அக்கறை இல்லை, இன்றைக்கும் அக்கறை இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்ற 120 நாட்களிலே இவ்வளவு அற்புதத்தைச் சாதித்துவிட்டார்களே இவர்களை இன்னும் 5 ஆண்டு காலம் ஆளவிட்டால் திமுக என்ற கட்சியே இல்லாமல் ஆக்கிவிடுவார்களோ என்ற அச்சத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று இன்றைக்குத் தேவையில்லாமல் அவைக்குள்ளேயும் பிரச்சினை செய்கிறீர்கள்; வெளியிலேயும் பிரச்சினை செய்து கொண்டு இருக்கிறீர்கள். அதுதானே இன்றைக்கு நாட்டு நடப்பு. என்ன சட்டம் ஒழுங்கு? சட்டம் ஒழுங்கைப் பற்றி எங்களுக்குத் தெரியாதா? முந்தைய ஆட்சிக் காலத்தில் சட்டம் ஒழுங்கு நிலை பற்றி ஒரே ஒரு உதாரணம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். சென்னையிலே எழும்பூரிலே பட்டப்பகலில் நீதிபதியின் முன்பு விசாரணைக் கைதி கொலை செய்யப்படுகிறான். அங்கே பக்கத்திலேதான் போலீஸ் கமிஷனர் அலுவலகம் இருக்கிறது. யாரும் கைது செய்யப்படவில்லை. அந்த நீதிபதி ஓடி ஒளிகின்றார், தன்னுடைய உயிருக்குப் பயந்து. ஆனால் இன்றைக்கு உங்கள் என்ன? இன்றைக்கு நீதிபதிகளின் நிலைமை என்ன? இது நீதியின் பிரச்சினை என்பதால் நான் அனைவருக்குமே தெரியும். அதிகமாக இதிலே உள்ளே செல்ல விரும்பவில்லை. ** (குறுக்கீடு) இன்றைக்கு (குறுக்கீடு) நான் சொல்லவில்லை, சொல்லவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று அவர் ஆரம்பித்த அந்தப் பகுதி, வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்றைக்கு நீங்கள் இந்த போலீஸ் அதிகாரிகளை எல்லாம் ஏன் மாற்ற வேண்டும் என்று துடிக்கிறீர்கள்? என்ன காரணம்? நான் ஏற்கெனவே கூறியது போல மேயர் ஸ்டாலினுடைய உற்ற நண்பர் ரமேஷினுடைய மரணத்திலே மர்மம் இருக்கிறது. அந்த மர்மத்தை அந்தப் போலீஸ் அதிகாரிகள் துருவித் துருவிக் கண்டுபிடித்துவிட்டால் பல மர்மங்கள் வெளிவரும். அதன் விளைவாக சிங்கப்பூரிலே நீங்கள் எல்லாம் சேர்த்து வைத்திருக்கின்ற சொத்துகள் வெளிவரும். அதற்காக நீங்கள் கைது செய்யப்படுவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்) இப்போது என்ன சொல்லிவிட்டேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சுந்தரம் பேசுங்கள். பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் முடிக்கட்டும், பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 14

(குறுக்கீடுகள்) அவர் முடிக்கட்டும். அவரைக் கேட்கச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. சுந்தரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் முடித்த பிறகு கேட்கிறேன். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். நீங்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்). சுந்தரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்ற அச்சத்தால் . . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு அவர்களைக் கேட்கச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் அவர்களை எல்லாம் மாற்ற வேண்டும் என்று கூறுகிறீர்கள். மடியிலே கனம் இல்லை என்றால் வழியிலே பயம் எதற்கு? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) வெளியிலே செல்வதற்காக இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக நான் .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்களே, உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு உங்களை நான் கூப்பிடுகிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இறுதியாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றத்திலே ஐந்து ஆண்டுகளாக நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் இந்தச் சட்டமன்றத்திலே என்ன பேசினேனோ அனைத்துமே நடந்துகொண்டிருக்கின்றன. நான் அன்றைக்கு கூறினேன். அருமைப் பெரியவர் லத்தீப் அவர்களுக்குத் தெரியும். இங்கே இருக்கிறவர்கள் அனைவருக்குமே தெரியாது. குறிப்பிட்ட நபர்கள், ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியும். ஐயா சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரியும். இதுதான் நீங்கள் வாசிக்கின்ற கடைசி பட்ஜெட் என்று அன்றைய முதல்வரிடம் அன்று சொன்னேன். அதுதான் இன்றைக்கு நடந்தது. அடுத்த மகளிர் தினத்தில் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வருவார் என்றேன். அதுதான் இன்றைக்கு நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அருமையான சத்தான பட்ஜெட்டை சமர்ப்பிப்பார்கள் என்று கூறினேன். அதுதான் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் ஒன்று கூறினேன்.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசிபுரம் ஜோதிடர் சுந்தரம் என்றுகூட உங்களை வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மற்றொன்றையும் கூறினேன், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை பெற வேண்டும். மத்திய சிறைச்சாலைகளுடைய கதவுகள் உங்களுக்குத் திறந்திருக்கும் என்று அன்றே கூறினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இன்றைக்கு நடந்திருக்கிறது. மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கொப்பரைத் தேங்காயில் அடித்த கொள்ளைகள், தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு 1,400 கோடி ரூபாய் அரிசியில் அடித்த கொள்ளைகள், ஏன்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுந்தரம் அவர்கள் கடந்த கால ஆட்சியில் நடந்த தவறுகளைப் பற்றி, ஊழல்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார். கொப்பரைத் தேங்காய் வாங்கியதிலே ஊழல், அரிசி பேரத்திலே ஊழல் என்றெல்லாம் கூறினார். இன்னும் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அவற்றை இந்த அவைக்குத் தெரிவிப்பது இந்தக் கட்டத்தில் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். உள்ளாட்சி அமைப்புகளில் அதாவது டவுன் பஞ்சாயத்துகளில் முனிசிபாலிட்டிகளில் பொதுவாக டியூப் லைட்தான் பொருத்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) டியூப் லைட் பொருத்தினாலே போதுமானது. அதுவும் நம்முடைய அரசினுடைய நிதிநிலைமையிருக்கின்ற சூழ்நிலையில் டியூப் லைட்டுகள் பொருத்தினாலே நல்ல வெளிச்சம் கிடைக்கும். ஆனால், வேண்டுமென்றே கடந்த ஆட்சி காலத்தில், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இங்கே அமர்ந்திருக்கிறார். அவர் வேண்டுமென்றே டவுன் பஞ்சாயத்துக்களில் எல்லாம் கூட Sodium vapour lamp-களையும் Halogen Lamp-களையும் பொருத்தியிருக்கிறார். பொதுவாக ஒரு டியூப் லைட் வாங்குவதானால் Electricity Board rate-படி ஒரு செட் 740 ரூபாய் தான் ஆகும். ஆனால், ஒரு செட் Sodium Vapour Lamp வாங்குவதானால் 3590 ரூபாய் செலவாகும். நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள், ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு டியூப் லைட் செட் என்றால் 740 ரூபாய் என்பது எங்கே? ஒரு சோடியம் வேப்பர் லேம்ப் செட் எனறால் 3,590 ரூபாய் என்றால் அது எங்கே போகிறது. அதைப் போலவே, டியூப் லைட்டுகளைப் பயன்படுத்தினால் ஓர் ஆண்டுக்கு 182.50 யூனிட் மின்சாரம் செலவாகும். ஆனால், சோடியம் வேப்பர் லேம்புகளைப் பொருத்தினால் ஓர் ஆண்டுக்கு ஒரு செட்டுக்கு 1095 யூனிட்டுகள் கரண்ட் தேவைப்படுகிறது. அவ்வளவு

கரெண்ட்டை உறிஞ்சுகிறது, சாப்பிடுகிறது. இப்படி என்ன காரணத்தினாலோ, அதனால் என்ன ஆதாயம் பெற்றாரோ தெரியவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியின்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கே பார்த்தாலும் டவுன் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் சோடியம் வேப்பர் லேம்புகளை பொருத்தியதால், அமைத்ததினால் கரெண்ட் பில்லைக் கட்ட முடியாமல் மின்சார சார்ஜ்களைக் கட்ட முடியாமல் அந்த உள்ளாட்சி அமைப்புகள் இப்போது திணறிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பல கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களால் செலுத்த முடியவில்லை.

புள்ளிவிவரத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். ஒரு புள்ளிவிவரத்தை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *1996* ஆம் ஆண்டிலிருந்து *2001* வரை கடந்த ஆட்சி காலத்தில் போடப்பட்ட சோடியம் வேப்பர் லேம்புகளின் எண்ணிக்கை *51,496*. அவற்றின் விலை *25* கோடியே *43* இலட்சம். இவற்றிற்குப் பதிலாக டியூப் லைட்டுகள் வாங்கியிருந்தால்— தேவைப்படும் எண்ணிக்கை அதாவது ஒரு சோடியம் வேப்பர் லேம்புக்கு பதிலாக இரண்டு டியூப் லைட்டுகளை வாங்கிப் பொருத்த வேண்டும். அந்த எண்ணிக்கைப்படி இவற்றிற்குப் பதிலாக டியூப் லைட்டுகள் வாங்கியிருந்தால்— தேவைப்படும் எண்ணிக்கை ஒரு இலட்சத்து *2* ஆயிரத்து *992*. அவற்றின் விலை *18* கோடியே *7* இலட்சம் ரூபாயாகும். இந்த *5* ஆண்டுகளுக்கு சோடியம் வேப்பர் லேம்ப்களை பொருத்தியதால் ஏற்பட்ட மின்கட்டணச் செலவு *19* கோடியே *75* இலட்சம் ரூபாய். இதுவே, டியூப் லைட்டுகளைப் போட்டிருந்தால், ஆகக்கூடிய செலவு வெறும் *5* கோடியே *85* இலட்சம் ரூபாய் மட்டுமே. ஆகவே, கடந்த *5* ஆண்டுகளில் *1996* முதல் *2001* வரை சோடியம் வேப்பர் விளக்குகள் வாங்கியதால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் *7* கோடியே *36* இலட்சம் ரூபாய். இந்த சோடியம் வேப்பர் லேம்ப்களை பொருத்தியதால் மின்சாரம் அதிகமாக பயன்படுத்தப்பட்டதால் அதனால் ஏற்பட்ட மின்கட்டணத்தினால, அதிகமான செலவு *13* கோடியே *90* இலட்சம் ரூபாய். ஆக மொத்தம் கடந்த கால ஆட்சியில், கடந்த காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் எடுத்த முடிவினால் அரசுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு *21* கோடியே *26* இலட்சம் ரூபாய் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.



**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுடைய ஆட்சியில் குறிப்பாக என்னுடைய துறையில், அதிலும் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த நானே, ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு, இப்படிப்பட்ட குழல் விளக்குகளை மாற்றி, சோடியம் வேப்பர் லேம்புகளை அமைத்ததில் நஷ்டம் ஏற்பட்டதாகக் குறிப்பிடுகிறார். அவர் ரொம்ப சாமர்த்தியமாகக் குறிப்பிடுகிறார். அப்போது குழல் விளக்குகளையும், சோடியம் விளக்குகளையும், அந்த விலைக்கு, இந்த விலைக்கு, கூட இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால், சோடியம் விளக்கு அமைத்ததில் அவர்கள் முறை தவறி விலை கூடக் கொடுத்து வாங்கியதாக அவர்கள் குறிப்பிடவில்லை. இப்போது ஆரிக்கேன் விளக்கைக் கொடுத்தால் இதைவிட விலை குறையும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரச்சினையைத் திசை திருப்புகிறார். என்னுடைய கேள்வியெல்லாம் என்னவென்றால் ஒரு டியூப் லைட் வாங்கியிருந்தால் அதனுடைய செலவு வெறும் *740* ரூபாய் அதுவே போதுமானது. அப்படி டியூப் லைட் வாங்கிப் போட்டால் போதும் என்ற இடத்தில் எதற்காக இவ்வளவு செலவு செய்து *3590* ரூபாய் கொடுத்து சோடியம் வேப்பர் லேம்ப்பை வாங்கினீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழல் விளக்குக்குப் பதிலாக ஏன் சோடியம் விளக்கை வாங்கினீர்கள் என்று கேட்கிறார்கள். (குறுக்கீடுகள்) இது என்ன கோஷ்டி கானமா? முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். நீங்கள் அனைவரும் எழுந்திருக்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** நான் சொல்வது, அமைச்சரோ, அரசாங்கமோ, இந்த விளக்கைத்தான் போடவேண்டுமென்று விதிமுறை வகுத்து உத்தரவினைப் போடவில்லை. அங்கங்கு இருக்கிற நிர்வாகங்கள் அதைக் கேட்டுப் பெற்று அதற்காக அரசாங்கமும் நிதி ஒதுக்கீடு செய்து மானியம் போலக் கொடுத்து, அதைச் செய்து இருக்கிறோம். இப்போது, நம்முடைய ஸ்டேடியத்தில்கூட புல்லை வளர்ப்பதற்காக மூன்று கோடி ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். புல் வளர்ப்பதற்காக இப்போது மூன்று கோடி ரூபாய், இப்போது, நாங்கள் வெளிச்சம் போட்டதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சாதாரண புல் அல்ல; astroturf அது என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது போலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் பேச்சை முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, தார்ப்பாய் ஊழலையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். தார்ப்பாயில் நடந்த ஊழலையும் உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல கால்நடைத் துறையின் மூலமாக மருந்து வாங்கியதில் 8½ கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்தது என்று நானே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறேன். அதற்கும் நீங்கள் விரைவாக நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகள் அனைவரையுமே, குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டுமென்று கூறி (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறேன். உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி பேச்சை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நன்றிதான் சொல்ல வருகிறேன். நான் சொல்வது நடக்கும். என்னுடைய நாக்கு அப்படி. அதற்காகத்தான் சொல்கிறேன். 2001-ல் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2025 வரையிலும் தொடர்ந்து வெள்ளிவிழா முதல்வராக நீடிப்பார் என்பதை எடுத்துக்கூறி, ஒன்றை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையில் மின்னலை விழுங்கி மின்சாரத்தைக் கொப்பளிப்பவர் புரட்சித் தலைவி என்பதை மட்டும் உங்களுக்குக் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**திரு. கோ.சி. மணி:** இன்னும்கூடச் சொல்கிறேன். ஊழல் என்றால் ஓர் அரசு இதுபோன்ற காரியங்களில் முறைதவறி, அந்த விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு செய்திருந்து, அது சட்டப்படி குற்றம் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால், இதைச் செய்திருக்கலாம், அதைச் செய்திருக்கலாம், இத்தனை கோடி, அத்தனை கோடி என்றெல்லாம் ஒரு புள்ளிவிவரத்தைக் காட்டி, சேற்றை வாரியிறைக்கிற மாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சேற்றை வாரி இறைக்கவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் அவர்கள் செய்ததைத்தான், அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். திரும்பவும் நான் கேட்கிறேன். பொதுவாக, பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் டியூப் லைட் போட்டாலே தேவையான வெளிச்சம் கிடைக்கும். அப்படி இருக்கும்போது ஒரு டியூப் லைட்டுக்கு ஆகும் விலை 740 ரூபாய், - - ஒரு செட்டுக்கு என்று இருக்கும்போது, 5 மடங்கு கூட விலை கொடுத்து, 3,590 ரூபாய் கொடுத்து சோடியம் வேப்பர் லேம்ப் வாங்கிப் பொருத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?

அதைப்போலவே current consumption என்று சொன்னால், ஒரு டியூப் லைட் செட்டிற்கு 182.50 யூனிட்தான் ஒரு ஆண்டிற்குத் தேவைப்படும்; ஆனால், சோடியம் வேப்பர் லேம்ப் என்றால் ஒரு ஆண்டிற்கு 1,095 யூனிட்டுகள் தேவைப்படுகின்றன. அதாவது, 6 மடங்கு கூடுதலாக மின்சாரம் தேவைப்படுகிறது. 5 மடங்கு விலை கொடுத்து, சோடியம் வேப்பர் லேம்ப்களை வாங்கி, 6 மடங்கு கூடுதலாக மின்சாரத்தை வீணடித்ததற்கு நியாயமான காரணத்தை அவர்களால் கற்பிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டியூப் லைட்டினுடைய கால நீடிப்பு வேறு; அதேபோல் குண்டு பல்பினுடைய கால நீடிப்பு வேறு; சோடியம் ஆவி விளக்கினுடைய கால நீடிப்பு வேறு. இதற்கும் அதற்கும் 10 பங்கு காலம் நீடிப்பு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர் முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர் சொல்லட்டும். நீங்கள் எதற்காகச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) அவர் பழைய உள்ளாட்சித் துறை அமைச்சர்: அவர் சொல்லட்டும்.

**திரு. கோ.சி. மணி:** இந்த மன்றத்திலே இருப்பவர்களே, இந்த மன்றத்திலே இருக்கிற பலபேர்களே பல மனுக்களைக் கொடுத்து சிபாரிசும் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, இப்படிப்பட்ட தவறான புள்ளிவிவரங்களைச் சொல்லி, தவறான குற்றச்சாட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புள்ளிவிவரத்திலே தவறு இல்லை. (குறுக்கீடு) புள்ளிவிவரத்திலே தவறு இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்ளாட்சித் துறையிடமிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்கள். தவறான புள்ளிவிவரங்கள் அல்ல. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கும், நான் பதிலைத் தயாராக வைத்திருக்கிறேன். சோடியம் வேப்பர் லேம்ப் என்றால் the lamps will be replaced twice in three years as per norms. மூன்று ஆண்டுகளில் இரண்டு முறை மாற்றுவார்கள். அதற்கான செலவையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். டியூப் லைட் என்று சொன்னால், முதல் ஆண்டிற்கு *50* பர்சன்ட் எடுத்துக்கொள்கிறார்கள். இரண்டாவது ஆண்டிலிருந்து *100* பர்சன்ட் எடுத்துக்கொள்கிறார்கள். *50* சதவிகிதம் எடுத்துக்கொள்கிறார்கள். Current year-ல் முறை மாற்றுவதற்குத்தான் *470* ரூபாய் ஒரு செட்டிற்கு என்று கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கணக்குகளையெல்லாம் உள்ளடக்கித்தான் நான் புள்ளிவிவரத்தைக் கூறியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக உருவாக்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த முறையிலேயும் பல நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதையொட்டி ஒருசில கருத்துகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தை ஒரு சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தையொட்டி இந்த அவையிலே நிலச் சீர்திருத்தச் சட்டம் சம்பந்தமான சில கருத்துகளைச் சொன்னதற்கு, கம்யூனிஸ்ட் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று,





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்திலோ அல்லது நில உச்சவரம்புச் சட்டத்திலோ மாறுதல்களைக் கொண்டு வரமாட்டோம் என்று அறிவித்து இருப்பதற்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால், நான் இந்த அரசினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்படுகிற நேரத்திலே வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள் ஒரு சட்டத்தை உபயோகப்படுத்துவதற்கு ஓர் ஆபத்து இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Act, 1972, அந்தச் சட்டத்திலே *37*-ஏ என்ற ஒரு ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்து என்ன சொல்கிறது என்றால் ".......Provides for granting permission by Government under section 37 (a) of the Act, for industrial and commercial undertakings, other than co-operative societies, to hold lands in excess of the ceiling area." This Act came into effect on the first day of March, 1972. The Notified date of the said Act is 01-08-1972.

இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைத் தங்களுடைய தேவைகளுக்கு உபயோகப்படுத்துவதற்காக அதிகாரிகளைப் பயன்படுத்துகிற ஆபத்திருக்கிறது. அதை அரசு பரிசீலிக்க வேண்டும். அந்த முறையிலே வசதிபடைத்தவர்களும் பணக்காரர்களும் இந்த ஷரத்தைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை undermine பண்ணுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது தடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் இதிலே விதிவிலக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஏனென்றால், கூட்டுறவு முறையிலே இன்று நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுத்து கூட்டுறவுச் சங்கங்களினுடைய உதவியோடு அவர்கள் விவசாயம் பண்ணுவதற்கான நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதன்மூலம் நம்முடைய உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்து கொண்டிருப்பதன் காரணமாக, என்னிடத்திலே கொடுக்கப்பட்ட ஒரு கோரிக்கையைச் சொல்கிறேன். அதாவது இன்று சிறையிலே இருந்துகொண்டிருக்கிற கைதிகளுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவுநாளையொட்டி இன்று remission கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலஞ்சென்ற எம்.ஜி.ஆர். அவர்கள் பெயராலேயும் இதேபோன்ற remission கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் (மேசையைத் தட்டும் ஒலி) வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். எனக்குக் கொடுக்கப்பட்ட அந்த மனுவைக்கூட நான் மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களிடம் ஓர் மனுவைக் கொடுத்தார்)

இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இந்த மாநிலம் நல்ல வளர்ந்த மாநிலமாக மாற்றப்பட வேண்டுமென்றால், இங்கே இன்று மூடிக்கிடக்கிற ஆலைகளையும் திறந்து தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்படி வருகிற நேரத்திலே, மத்திய அரசினுடைய சில தொழிற்சாலைகள் இன்று மூடு விழாவினுடைய இடத்திலே சென்றிருக்கின்றது என்பதை அரசு நன்கறியும். உதாரணமாக, சேலம் உருக்காலை, ஊட்டியிலே இருக்கிற இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், அதேபோன்று சென்னை நகரிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், ஜெயங்கொண்டத்திலேயிருக்கிற சிமெண்ட் ஆலை. இதுபோன்ற பொதுத் துறை நிறுவனங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசு என்னென்ன செய்ய முடியுமோ அதைச் செய்து மத்திய அரசுக்கு நிர்பந்தத்தைக் கொடுத்து இந்த ஆலைகள் தனியார்மயமாக்கப்படுவதைத் தடுப்பதற்கான அந்த நிலையை உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஏற்கெனவே இந்த அவையிலே தீப்பெட்டி ஆலைகள் சம்பந்தமான கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தீப்பெட்டித் தொழில்களை இப்போது இயந்திரமயமாக்குவதன் காரணமாக ஏராளமானவர்கள் வேலைவாய்ப்பை இழக்கிற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தடை





செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டம், அதன் அருகிலேயிருக்கிற மாவட்டங்களிலே எல்லாம் இப்போது அறுவடைக்கு இயந்திரத்தைப் புகுத்துகிற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது அந்தப் பகுதியிலேயிருக்கிற விவசாயிகளுக்குக் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவையெல்லாம் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றால் இன்று World Trade Organisation-னுடைய அந்தத் தாக்குதலை, அதாவது globalisation, liberalisation போன்ற அந்தத் தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்படுவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மாநில அரசால் உச்ச நீதிமன்றத்திலே இதுசம்பந்தமான ஒரு வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது என்பதை நாடு நன்கு அறியும். அதாவது, இன்று மாநில அரசினுடைய ஒப்புதலைப் பெறாமல் மத்திய அரசு மாநிலங்களைத் தாக்கக்கூடிய முறையிலே உள்ள முடிவுகளை எடுப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்று பல மாநில அரசுகள் முன் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் பயன்படுத்தி, இன்று இந்த உலகமயமாக்கப்படுகிற அல்லது தாராளமயமாக்கப்படுகிற -- அதனுடைய தாக்குதலின் காரணமாக ஏற்படுகின்ற -- நிலையிலிருந்து இந்த மாநிலத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-30*

அதேபோன்று நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே மே மாதம் 31 ஆம் தேதி பேசிய நேரத்திலே அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பிரச்சினைபற்றிச் சொன்னேன். அதாவது, அன்று, "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தப் பிரச்சினைக்குப் பதில் அளிக்கக்கூடிய நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கைகள் கடந்த ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டன, அந்தப் பழிவாங்கும் நடவடிக்கைகளை எல்லாம் திரும்பப் பெற்று நீதி வழங்குகின்ற பணியை இந்த ஆட்சிக் காலத்திலே செய்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அரசு ஊழியர்கள் சம்பந்தமாக அதாவது on the eve of retirement— அவர்களை வேலைநீக்கம் செய்வது சம்பந்தமாகச் சொன்னபோது தெரிவித்தார்கள். இன்றும் அந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று தகவல்கள் வருகின்றன. இதை நான் குறை சொல்வதற்காக வேண்டி

சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகச் சொல்கிறேன். அதற்கு அரசு ஊழியர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அன்று முதலமைச்சர் அவர்களால் இங்கே சொல்லப்பட்ட ஓர் உறுதிமொழி சம்பந்தமாக அரசு உத்தரவு வரப்பெறவில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்று எனக்குத் தெரியாது. அதற்கு அரசு உத்தரவு தேவையா என்று கூட எனக்குத் தெரியவில்லை. அப்படித் தேவைப்படுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசும் அதைப் பரிசீலித்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, vigilance enquiry என்ற பெயரிலே பல ஆண்டுகளாக அரசு ஊழியர்களைப்பற்றி யாராவது ஒரு மொட்டை petition-ஐ அனுப்பினால் அந்த மொட்டை petition-ஐ வைத்துக் கொண்டு அவர்கள் suspend செய்யப்படுகிறார்கள். இன்று நெல்லை மாவட்டத்திலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் மொட்டை petition அடிப்படையில் இந்த ஆட்சியில் யாரும் suspend செய்யப்படவில்லை. நிச்சயமாக அப்படி ஒரு சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியின்போது அரசுத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்பது உண்மை. அதுபோன்ற ஒரு நிலைமை இந்த ஆட்சியில் இருக்காது என்று சொன்னேன். அதன்படிதான் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போதுகூட, இத்தகைய சில நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓர் அதிகாரி மீது, ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது ஒரு புகார் பெறப்பட்டால் அதற்கு ஒரு Departmental Enquiry order செய்யப்படுகிறது. சில சமயம் அந்த enquiry விசாரணை முடிவதற்குக் காலதாமதம் ஆகிவிடுகிறது. அப்பொழுது, அந்த சம்பந்தப்பட்ட அலுவலரின் Retirement தேதி நெருங்கி விடுகிறது. அந்த நேரத்தில் enquiry முடிவதால் அப்போது அவர் மீது உண்மையிலேயே குற்றம் இருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டிருந்தால், அந்த நேரத்தில் அவரை suspend செய்வதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. இப்படிச் சில நேரங்களில், விசாரணை முடிவதற்குக் காலதாமதம் ஆவதால், சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைத் தவிர்ப்பதற்கு, இனிமேல் ஓர் அதிகாரி ஓய்வு பெறப் போகிறார் என்று சொன்னால், அதற்கு 6 மாதங்களுக்கு





முன்பாகவே விசாரணையை முடித்து விட வேண்டும் என்று ஓர் உத்தரவு வேண்டுமானால் போடலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த ஆட்சியிலே நடந்ததாகக் குறிப்பிடவில்லை. ஏற்கெனவே இருந்த ஆட்சியிலே இப்படி பல நடந்தன. உதாரணமாக நம்முடைய வேளாண்மைத் துறையிலே அன்று இருந்த அமைச்சருடைய Personal Assistant-னுடைய சொந்தக்காரனுக்கு promotion கொடுப்பதற்காக ஒரு அப்பாவி ஊழியரை suspend செய்தார்கள். அதற்குக் காரணம் ஒரு மொட்டை petition. Vigilance-லே - - அந்த விஜிலென்சிலே ஒரு charge sheet கூட இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆனால், அவர் வெளியே நின்று கொண்டு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் பழிவாங்கும் நடவடிக்கையாக சில அரசு அலுவலர்கள் suspend செய்யப்பட்டனர். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அந்த suspend உத்தரவை இரத்து செய்திருக்கிறோம். Suspension-ஐத் திரும்பப் பெற்றிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவங்களை, நிகழ்ச்சிகளை, அந்த விவரங்களை அரசுக்குத் தெரிவித்தால், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-35*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிற நேரத்திலே ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே இதுசம்பந்தமாக முதலமைச்சரிடத்திலே ஒன்றிரண்டு மனுக்களைக் கொடுத்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமாக இரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே திருவட்டாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற முறையிலே ஒரு திட்டம் 2 ஆண்டுகளுக்கு முன்னாலே அறிவிக்கப்பட்டது; அனுமதிக்கப்பட்டது. ஆனால் டெண்டர் கொடுப்பதிலே, அதை split செய்து கொடுக்க வேண்டுமென்று

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்][2001 செப்டம்பர் 14

Superintending Engineer அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், Managing Director ஒத்துக்கொள்ளாத காரணத்தினாலே 2 ஆண்டு காலமாக அது தேங்கி நிற்கிறது. அதேபோல வேர்கிளம்பி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு பெருஞ்சாணி அணையிலிருந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்று அந்தத் துறையினுடைய அதிகாரிகள் சொன்னதன் காரணமாக TWAD Board ஆட்கள் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். குடிதண்ணீருக்காக மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே சில அதிகாரிகள் இப்படிப்பட்ட குறுகிய நோக்கோடு செயல்படுவது சரியல்ல.

அதேபோன்று எங்கள் மாவட்டத்திலே ஒரு மலைப் பகுதி; Western Ghats Development Scheme-லே எந்த வேலையும் இதுவரை எங்கள் மாவட்டத்திலே செய்யப்படவில்லை. அதைச் செய்ய வேண்டும். கீரிப்பாறையிலே 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரிய வெள்ளத்திலே ஒரு பெரிய பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அங்கே அதற்கு ஒரு பாலம் போடப்பட வேண்டுமென்று பல மனுக்கள் கொடுக்கப்பட்ட பிறகும் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. ஆகவே, அங்கே ஒரு பாலத்தை Western Ghats Development Scheme-லே கட்டித் தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான மனு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று குழித்துறை ஆற்றிலே ஒரு மூழ்கு பாலம் போடப்பட்டு இருந்தது. அது அதிக ஆபத்தான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றித் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அங்கே ஒரு இரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்தித் தருவதாக ஏற்கெனவே 1991-96-லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்ட மக்களுக்கு ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். அதை அமல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கான வேலைகளை உடனடியாகச் செய்வதற்காக 1 கோடி ரூபாயாவது நிதியொதுக்கித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.



2001 செப்டம்பர் 14]

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, —

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சி சார்பாக ஒருவர்தான் பேச முடியும்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திலே இதுவரை நான் கலந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படாத காலகட்டத்திலே இந்த வாய்ப்பினை நீங்கள் அளித்தமைக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்பாகப் பேசியவர்கள் எல்லோருமே, ஒரு சிலரைத் தவிர, அரசு எப்படியெல்லாம் செலவு செய்ய வேண்டும், எந்தெந்தத் திட்டங்களை எல்லாம் செய்ய வேண்டுமென்று செலவுகளைப் பற்றியே பேசினார்கள். யாரும் வரவுகளைப் பற்றி அதிகமாகப் பேசவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

இந்த அரசுக்கும் மாண்புமிகு நிதியமைச்சருக்கும் எந்தெந்த வழிகளில் எல்லாம் வரவுகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதற்கான கருத்துகளை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேட்காமலேயே பல திட்டங்களை இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். அத்தனை திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு வழிவகைகள் கண்டிப்பாக இருக்கும் என்று நான் அறிவேன். இருந்தாலும், என்னுடைய சிந்தைக்கெட்டிய ஒரு சில கருத்துகளை இங்கே எடுத்து வைப்பது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்.

1991 ஆம் ஆண்டிலே திரு. நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக வருவதற்கு முன்பாக எத்தகைய பொருளாதார நெருக்கடியில் நாடு இருந்ததோ, அதைவிட சற்று அதிகமான நெருக்கடியிலே இன்றைக்கு தமிழக அரசு இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன்.

அன்றைய தினத்திலே மத்திய அரசானது சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டி இருந்தது. அதை எடுத்தது; செயல் வடிவம் கொடுத்தது. அதனால் 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டுவரை சுபிட்சமான ஒரு பொருளாதார வளர்ச்சி இந்த நாட்டிலே நிலவியது. தமிழகத்திலே அப்போதிருந்த ஆட்சியின் செயல் வளத்தால் இன்னும் அந்தப் பொருளாதாரம் சற்று அதிகமாகவே அன்றைக்கு வளர்ந்திருந்தது.

பிற்பகல் 12-40

குறிப்பாக ஒருசில கருத்துகளை உணவு மானியத்தைப் பற்றி, ஆதாயம் கொடுக்கின்ற கருத்துகளைக் கூற விரும்புகின்றேன். தமிழ்நாடுதான் அதிகமான உணவு மானியத்தை இன்றைக்கு இந்தியாவிலேயே கொடுத்துக் கொண்டிருக்கிறது. 1540 கோடி ரூபாய் உணவு மானியமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 1,540 கோடியிலே, 144 இலட்சம் குடும்பங்கள் பயனடைகின்றன. அதில் 70 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டுக்கு மேலாக உள்ளவர்கள். அந்த வறுமைக் கோட்டுக்கு மேலாக உள்ளவர்களுக்கு மட்டும் 1,300 கோடி ரூபாய் மானியமாக அளிக்கப்படுகிறது. இது தேவைதானா என்று எனக்குத் தெரியவில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழாக உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகின்ற மானியம் ரூபாய் 240 கோடிதான். சுமார் 43 இலட்சம் குடும்பங்களுக்கு மாதம் ஒரு குடும்பத்திற்கு 46.50 ரூபாய் என்ற வகையிலே 12 மாதங்களுக்கு எடுத்துக்கொண்டால் ரூ. 240 கோடிதான் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு இந்த அரசு கொடுக்கின்றது. 1,300 கோடியை வறுமைக் கோட்டுக்கு மேலாக, உயர் வர்கத்தில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மந்திரிகளுக்கும்கூட இதில் மானியம் இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. ஆகவே, 1,300 கோடி ரூபாய் மானியத்தை வறுமைக் கோட்டுக்கு மேலே இருக்கின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. 10 இலட்சம் Bogus Cards, போலி குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இதில் மட்டும் 205 கோடி ரூபாய் இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மேலும் ஒன்று, போக்குவரத்துத் துறை. போக்குவரத்துத் துறையைப் பார்க்கின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள் இதுவும் ஒரு துறையின் வருமானத்தை ஈட்டித் தருவதாக இருக்கும் என்று கருதுகிறேன். இது பெருவாரியான மக்களை அவ்வளவாக பாதிக்காமல் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு நயாபைசாவை மட்டும் நீங்கள் கூட்டினால் 160 கோடி ரூபாய் உங்களுக்கு உபரி வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த 160 கோடி ரூபாயை நீங்கள் இதே துறைக்குப் பயன்படுத்தினாலும்கூட 1100 புதிய பஸ்களை வாங்க முடியும் என்று நான் கருதுகிறேன். இது மக்களுக்கும் பயனளிக்கும். நான் இதைப் பேசுவதற்காக வெளியிலே என் மீது வசைமொழி கூறுவார்கள்; மக்கள் விரும்பமாட்டார்கள். இருந்தாலும்



இந்த அரசுக்குச் சாதகமாக சில கருத்துகளை எடுத்து வைக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இதை நான் இங்கே குறிப்பிடுகிறேன். நீங்கள் அதிகமாக விதித்திருக்கின்ற வரி 135.5 கோடி ரூபாய்தான். இந்த ஒரு நயாபைசாவைக் கூட்டுவதன் மூலம் 160 கோடி ரூபாயை உபரியாகப் பெற இருக்கின்றீர்கள் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற மின்சாரத் துறைதான் மிகவும் நலிந்து, நொடிந்து, சீர்கெட்ட நிலையில் இருக்கிறது என்றால் அது மிகையாகாது. வெள்ளை அறிக்கையிலே அழகாக எடுத்துச்சொல்லி இருக்கிறீர்கள். மாதம் 9 கோடி ரூபாய்க்கு மேலாக நீங்கள் நஷ்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்........

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் 9.5 கோடி ரூபாய் நஷ்டம்.

**திரு. கு. ஜெயக்குமார்:** தினந்தோறும் 9 கோடி ரூபாய் நீங்கள் நஷ்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தத் துறையாலே இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் மட்டும்தான் எனக்குத் தெரிந்தமட்டில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இங்கே நிதிநிலை அறிக்கையில் நடப்பு ஆண்டில் 500 கோடி ரூபாயை நீங்கள் மானியமாகக் கொடுக்க இருக்கின்றீர்கள். இது எல்லா விவசாயிகளுக்கும் சென்று சேரும் என்று அறிவேன். ஆனால், பண்ணைகளுக்கும் இந்த மானியம் கொடுக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியை நான் இங்கே எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். பண்ணைகளுக்கும் கொடுத்து ஒரு நாளைக்கு 9 கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மின்சார மானியம் கொடுக்கப்படுவதில் மட்டும் இப்போது நஷ்டமாக ஒரு வருடத்திற்கு 5,000 கோடி ரூபாயை நீங்கள் எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையிலே 15 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டும், அல்லது 20 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு வரையில் மின்சார மானியம் கொடுத்து, மற்றவர்களுக்கெல்லாம் Slab system-அடிப்படையிலே எவ்வளவு consume செய்கின்றார்களோ அந்த முறையிலே கட்டணம் செலுத்த ஏற்பாடு செய்வீர்களானால் ஓரளவுக்கு இந்தத் துறையினுடைய நஷ்டத்தை ஈடுகட்ட முடியும் என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கு. ஜெயக்குமார்] [2001 செப்டம்பர் 14

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். குறிப்பாகக் கொப்பரைத் தேங்காய் பற்றி அதிகம் பேர் என்னிடம் வந்து பேசிச் சென்றிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் மிக அதிகமான வரி இதற்கு விதிக்கப்படுவதாகவும், அண்டை மாநிலமான தேங்காய் அதிகமாகப் பயிர் செய்யப்படுகின்ற கேரளாவில் மிகவும் குறைவான வரி விகிதம் இருப்பதாகவும், கேரளாவில் 2½ சதவிகிதமாகவும், நம்முடைய தமிழ்நாட்டில் 9 சதவிகிதமாகவும் இருப்பதாக நான் அறியக் கண்டேன். இப்போது நீங்கள் கூடுதலாக 3 சதவீதத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு வணிக வரியில் 3 சதவிகிதம் கூட்டி இப்போது 4 சதவிகிதமாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் அதிகப்படியான வருமானம் வருமா என்று தெரியவில்லை. தொழில் நடப்பது தமிழகத்திலும் அதற்கான Bills போடப்படுவது பக்கத்தில் இருக்கிற கேரளாவிலுமாக நடந்தால் நாம் நம்முடைய Border பகுதிகளிலே கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டிவரும். அந்த நிலையிலே நமக்கு வரி இதனால் கூடுமா? குறையுமா? என்பதை நீங்கள் அலசிப்பார்க்க வேண்டும். இந்தக் கொப்பரைத் தேங்காய் வியாபாரிகளும், கொப்பரைத் தேங்காய் பயிரிடுபவர்களும் வளம்பெற வேண்டுமென்பதற்காக, அந்த வரிகளைக் குறைத்துக்கொள்ள முடியுமா என்ற சாத்தியக் கூறுகளை நீங்கள் தயவுசெய்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இதுநாள்வரை என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு வார்த்தைகூட நான் இங்கே குறிப்பிடவில்லை.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரேயொரு நிமிடத்தில் முடிக்கிறேன். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாமக்கல் பகுதியிலே ஒரு குளிர்பதனக் கிடங்கினை, முட்டைகளையெல்லாம் தேக்கி வைத்து விற்பதற்கு, கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் நகரம் மிகவும் நெரிசல் மிக்க நகரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வழியாகத்தான் பல ஊர்களுக்குப் பேருந்துகள் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நாமக்கல் நகரத்தைச் சுற்றி ஒரு சுற்றுப்பாதை ring road அமைத்துக் கொடுத்தால், அந்த நெரிசல்கள் எல்லாம் நீங்கிவிடும் என்ற ஒரு கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 14] [திரு. கு. ஜெயக்குமார்]

மாவட்டம் தொடங்கி 5 வருடங்கள் ஆகியும், அங்கே நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இப்போதுதான் அங்கே மாவட்ட அளவிலான நீதிமன்றம் வந்திருக்கிறது. அது வாடகைக் கட்டடத்திலே இயங்க வேண்டியதாக இருக்கிறது. தயவுசெய்து அந்த நீதிமன்றத்திற்கு ஒரு நல்ல கட்டடத்தைக் கட்ட வேண்டும்.

அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தங்குவதற்கு வீடு கிடையாது. அவர் Circuit House-லே இப்போது தங்கியிருக்கின்றார். அதனால், மற்றவர்களுக்கும் அங்கே சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கலெக்டர் அவர்களுக்கு ஒரு வீட்டையும் கட்டிக்கொடுக்க வேண்டும். அங்கேயிருக்கின்ற போலீஸ் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றது. S.P. அலுவலகம் ஒன்றும் R.D.O. அலுவலகமும் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, S.P. அலுவலகம் மற்றும் RDO அலுவலகங்களைக் கட்டித்தர வேண்டும்.

100 பேர்களுக்கு மேல் இருக்கும் கிராமங்கள் அத்தனைக்கும் நீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். நீர் வசதியும், போக்குவரத்து வசதியும், (மணியடிக்கப்பெற்றது) நாம் செய்து கொடுத்தாலே, அந்த மக்களுக்கெல்லாம் முறையான நன்மைகளைச் செய்தவர்களாக இருப்போம். அத்தகைய ஒரு திட்டத்தை நீங்கள் மேற்கொண்டிருக்கின்றீர்கள். அதைச் சிறப்பாகச் செயல்படுத்துங்கள் என்று இந்த அரசை வாழ்த்தி, வணங்கி விடைபெறுகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட கூடுதல் நிதி ஒதுக்க துணை மானியத்தின்மீது பா.ம.க. சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சுருக்கமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய மாமன்றத்திலே துணை மானியம், கூடுதல் நிதி ஒதுக்கம் என்று வருவது இப்போது வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்குகின்ற நேரத்திலே அந்த நிதியை மையமாக வைத்துச் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை வேகமாக, குறிப்பிட்ட காலத்திலே விரைந்து செய்து முடிக்கும் நிலைமை உருவாக்கப்படும் என்று சொன்னால், இப்படிப்பட்ட துணை மானியமோ, கூடுதல் நிதி ஒதுக்கமோ, மறு நிதி ஒதுக்கமோ தேவையில்லாமல் போய்விடும் என்ற கருத்தை [illegible]

D
V21,31'P01
P01.12.2
2237555
சென்னை-600 008

விரும்புகிறேன். காரணம், நிதிச் சுமை என்று, நிதிப் பற்றாக்குறை என்று ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கும். ஆகவே, இனி வரக்கூடிய காலகட்டங்களிலே நம்முடைய அரசு, வேகமாக, ஒதுக்கக்கூடிய திட்டங்களை இந்தக் குறிப்பிட்ட காலங்களிலே விரைந்து முடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்ற கருத்தை நான் முதலிலே சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு எல்லாத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கினால்கூட, கல்வித் துறைக்கு நிச்சயமாகக் கூடுதலான நிதி ஒதுக்கம் செய்யவேண்டும். காரணம், எல்லாத் துறைகளிலும், இன்றைய நாட்டை, எதிர்கால நாட்டை உருவாக்கக்கூடியது கல்வித் துறை. இன்றைய இளைஞர்கள்தான், குழந்தைகள்தான் நாளைய இந்தியாவை நிர்மாணிக்கக் கூடியவர்கள் என்ற காரணத்தினாலே, கோத்தாரி கமிஷன்கூட, 6 சதவிகிதம் நிதி ஒதுக்கம் செய்யவேண்டுமென்று சொல்லி வலியுறுத்தி இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே கூடுதலாக, கல்விக்கு நிதி ஒதுக்கம் தேவை என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்துகின்றேன்.

*பிற்பகல் 12-50*

இப்போது, நம்முடைய அரசு புள்ளிவிவரங்களைச் சொல்கின்றது. கல்வித் துறையிலே பார்க்கின்றபோது, எல்லோருக்கும் கல்வி இல்லாத நிலை இருக்கிறது. அதேநேரத்திலே, தேர்ச்சி விகிதம் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அதிலே நம்முடைய சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலே 52 சதவிகிதம், 54 சதவிகிதம்தான். ஆகவே, கல்வித் தரம் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆண்டுதோறும் 56 இலட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள்-இதிலே, drop-outs 8 இலட்சம். இதிலே மாற்றுப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்துச் சில்லறை. ஆகவே, இந்தக் குழந்தைகளுக்கு மீண்டும் கல்வி கொடுக்கக்கூடிய கடமை நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கின்ற காரணத்தினாலேதான், நான்கூட இந்த மன்றத்திலே தொடர்ந்து வலியுறுத்துவதுண்டு. கடந்த ஆட்சிக் காலத்திலேகூட, 5-வது வகுப்புவரை கட்டாயக் கல்வி என்று சொன்னார்கள். ஆனால், மீண்டும் இங்கே நான் வலியுறுத்துகிறேன்; இந்த நாட்டு மக்களுக்குக் கல்வி கொடுப்பது அரசு; பெற்றோர்கள் கல்வி கொடுக்கவில்லை என்று சொன்னாலும்கூட, குழந்தைகளுக்கு நம்முடைய அரசு கட்டாயம் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்ற அந்த நிர்ணயத்தின் அடிப்படையிலே 14 வயது வரையிலே கட்டாயக் கல்வித



திட்டத்தை அமலாக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும்; அந்தக் கட்டாயக் கல்வி என்பது இலவசக் கல்வியாக இருக்க வேண்டும் இலவசக் கல்வி என்று சொல்கிற நேரத்திலே எல்லோருக்கும் ஒரே சீரான, ஒரே தரமான கல்வியைக் கொடுக்க வேண்டும். இப்போது அப்படியல்ல. ஏழைகளுக்கு ஒரு மாதிரியான கல்வி; நடுத்தர வர்கத்திற்கு ஒரு மாதிரியான கல்வி; பணக்கார வர்கத்திற்கு ஒரு தரமான கல்வி என்றெல்லாம் இந்த நாட்டிலே நிலவக்கூடிய நிலையிலேதான், ஒரே தரமான கல்வி வேண்டும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறன்.

குழந்தைத் தொழிலாளர் முறை இருக்கிறது. நம்முடைய அரசு முனைப்பாகச் செயலாற்றுகிறது. அதை நான் குறை சொல்லவில்லை. இருந்தாலும்கூட, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்து, அந்தக் குழந்தைகள் மீண்டும் படிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இன்று பள்ளிக்கூடப் பையை மாட்டுகின்ற நேரத்திலே பணிக்குச் செல்லக்கூடிய அவல நிலையையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே அதை ஒழிப்பதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல Counselling முறை மூலம் இப்போது ஆசிரியர் மாறுதலெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இது ஆசிரியர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. என்னுடைய தொகுதி, என்னுடைய தருமபுரி பின்தங்கிய மாவட்டம். இன்னும் பல்வேறு மாவட்டங்களிலே கிராமப்புறப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களெல்லாம் நகர்ப் பகுதிக்குச் சென்றுவிட்டார்கள். ஐந்து ஆசிரியர்கள் இருக்கக்கூடிய இடங்களிலே ஒரு ஆசிரியர், இரண்டு ஆசிரியர்கள் என்று இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் மனதிலே வைத்து, அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு நம்முடைய அரசு வேகமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்னொன்று. இது பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். சட்டக் கல்லூரிகளெல்லாம் தனியார் மயமாக்கப்படும் என்ற ஒரு நிலையை அறிவித்த காரணத்தினாலே, நேற்று சட்டக் கல்லூரி மாணவர்கள் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள் என்ற பெயராலே, 17 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, இன்று சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வேலூர்

சிறைக்கு மாற்றப் போவதாக எங்களுக்குக்கூட செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். மாணவர்கள் போராட்டம் என்பது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சொல்கிறேன். அந்த மாணவர்களை விடுதலை செய்து, அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று, நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் கல்வி நிறுவனங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. Self-Financing என்ற முறையிலே. அங்கே கூட்டுக்கொள்ளை; கொள்ளையோ கொள்ளை என்ற நிலை இருக்கிறது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய அதே நேரத்திலே இந்தத் தனியார் கல்வி நிறுவனங்களை அரசு கண்காணிக்க வேண்டும். இவர்கள் எவ்வளவோ சம்பாதிக்கக்கூடிய நேரத்திலே, ஒரு தரமான கல்வியைக் கொடுக்கக்கூடிய அந்தத் தனியார் கல்வி நிறுவனங்களிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களின் நிலை அவலமாக இருக்கிறது. இன்று பெண்கள் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள். நல்ல தரமுள்ள ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய சம்பளம் *600* ரூபாய், *900* ரூபாய், *1000* ரூபாய், *1,500* ரூபாய் என்று இருக்கிறது. ஆகவே, *10* ஆண்டுகள், *14* ஆண்டுகள், Self-Financing கல்வி நிறுவனங்களிலே பணியாற்றக்கூடிய அந்த ஆசிரியர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த *3* ஆம் தேதியிலிருந்து *6* ஆம் தேதிவரையிலே, ஆசிரியர் பெருமக்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியைப்போல, *6* கூட்டு இயக்கங்கள் என்ற பெயராலே தொடர்ந்து போராட்டம் நடத்தினார்கள். ஏறக்குறைய *1* இலட்சம் ஆசிரியர்கள் அந்தப் போராட்டத்திலே பங்கேற்றிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்குக் குறை என்ன என்று சொன்னால், ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது; காலியிடங்களில் நியமனம் செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசும்போது, கவுன்சிலிங் முறையின் காரணமாக கிராமப் புறங்களிலேயிருந்து நகர்ப்புறங்களுக்கு பல ஆசிரியர்கள் வந்துவிட்டதாகவும், அங்கே காலியாக இருப்பதாகவும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போது சொல்லும்போது, பல பள்ளிகளிலே ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக, ஆசிரியர்களெல்லாம் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்; மாணவர்களுக்கு இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்றும்





சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆட்சியிலே *50,000* ஆசிரியர்களை நியமித்ததாகச் சொன்னார்கள். பிறகு மாறுதல் செய்யும்போது, ஏதோ மாறுதல் காரணமாகத்தான் ஆங்காங்கே, கிராமப்புறங்களிலே இடம் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அவற்றையெல்லாம் களைவதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அதன்படி சமீபத்திலே Employment Exchange-களிலிருந்து, இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இடம் தருவதற்காக ஒரு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அதன் மூலமாக பல ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அடுத்ததாக, பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்புத் தருவதற்காக, நேற்றுக்கூட பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள்; சுமார் *1200* ஆசிரியர் பணியிடங்களை, நிரப்புவதற்காக நேர்மையான முறையில், வயது வரம்பையும் தளர்த்தி, பிறகு அனைவருக்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்பதற்காக Employment Exchange-ல் யார் யார் பதிவு செய்து இருக்கின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் ஒரு வாய்ப்புத் தருவதற்காக, ஒரு நேர்முகத் தேர்வும் நடத்துவதற்காக புரட்சித் தலைவி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள், அதற்கேற்ப ஒரு மாதத்திற்குள்ளாக அது முடிவடைந்துவிடும். எங்கெங்கு பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நிரப்பி விடுவோம். அதற்கு மேலும் காலி இருந்தால், அதற்கும் சில வழிமுறைகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அதுவும் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கல்வி மானிய கொள்கை விளக்கக் குறிப்புகளிலே பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்கின்றபோது, *1:3* என்ற விகிதத்திலே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்த அந்த மூப்பின் அடிப்படையிலே அவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு *50* மதிப்பெண் வைத்து, நேர்முகத் தேர்வின் அடிப்படையிலே தேர்வு செய்யப்படும் என்று சொன்னார்கள். இப்போது Teachers Recruitment Board மூலமாக, ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மூலமாக எழுத்துத் தேர்வு வைக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். இது மாதிரியான எழுத்துத் தேர்வு வைக்கின்றபோது, Employment Exchange Seniority இதனால் பாதிக்கப்படும்

[திரு. ஆஸ்டின்] [2001 செப்டம்பர் 14

என்பதை நான் இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1:3 என்ற விகிதத்திலே நேர்முகத் தேர்வு மட்டும் நடத்தினால்—கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்ட அந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் இன்றைக்கு வயது 40-45-ஐத் தாண்டியிருக்கிறார்கள் — அவர்களுக்கெல்லாம் வாய்ப்புப் போய்விடும் என்ற கருத்தை, அரசு மேற்கொண்டு மறுபரிசீலனை செய்து வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கின்ற மூப்பின் அடிப்படையிலே அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயது மட்டும்தான் என்று இவர் சொல்கிறார். ஆனால், அம்மா அவர்கள் 57 வயது இருந்தாலும்கூடக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் பத்திரிகை விளம்பரத்திலே பார்த்தீர்களென்றால், (மேசையைத் தட்டும் ஒலி) 57 வயது உள்ளவர்களுக்குக்கூட, வாய்ப்பைத் தரவேண்டுமென்பதற்காக இந்த அரசு, அம்மா அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். இது ஒன்று.

இரண்டாவது, இவர் Employment Exchange Seniority பற்றிச் சொல்கிறார். அம்மா அவர்கள் இதற்கும் வழிவகை தந்திருக்கிறார்கள். அதற்காக ஒரு தனி மதிப்பெண் தரும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். Employment Exchange Seniority-யையும் எடுத்துக்கொள்கிறோம் இப்போது. அதற்காக, அதையே எடுத்துக்கொண்டு எல்லாம் செய்வதில்லை. திறமையுள்ளவர்களும் பல ஆண்டுகளாக வாய்ப்பே இல்லாமல் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அனைவருக்கும் ஒரு வாய்ப்பினைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் தமிழக அரசு, புரட்சித் தலைவி அவர்கள் இங்கே திட்டத்தினை வகுத்திருக்கின்றார்கள். அதிலே Employment Exchange Seniority-க்கும் ஒரு மதிப்பெண்ணானது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மணி அவர்கள் பேசி முடித்துக் கொள்ளட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். பிறகு கேளுங்கள்.



2001 செப்டம்பர் 14]

**திரு. ஜி.கே. மணி:** இப்போது நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பணி நியமனங்களிலே வயது வரம்பைத் தளர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே 57 வயது 45 வயது முடிவடையக்கூடிய நிலையிலே இருக்கக்கூடியவர்களும் நேர்முகத் தேர்விலே பங்குகொள்கிறார்கள். 21 வயது முடிந்தவர்களும் பங்குகொள்கிறார்கள். 21 வயது நிரம்பியவருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது என்று சொன்னால், 57 வயது 45 வயது நிரம்பியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே seniority அடிப்படையிலே நியமனம் செய்கின்றபொழுது, ஊழலும் இல்லாமல் எந்தவித குறைபாடும் இல்லாமல் அது அமையும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ Employment Exchange மூலமாகச் செய்யும்போதுதான் ஊழல் இல்லாமல் நடப்பதுபோலவும், நேர்முகத் தேர்வில் இருப்பது போன்றும் கருத்தைச் சொல்கின்றார். வேண்டும் என்றால் நாங்கள் ஒருபடி மேலேகூடப் போகிறோம். Plus 2 Examination முடிந்த பிறகு தேர்விலே பார்த்தீர்கள் என்றால், என்ன மார்க், அது தவறாக இருந்தாலும்கூட, திரும்பவும் re-totalling செய்து நாம் அந்த answer sheet-ஐக் கொடுத்துவிடுகிறோம் மாணவர்கள் கையிலே. இதிலேயெல்லாம், மார்க்கிலே எல்லாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எதையும் வெளிப்படையாகவே செய்கிறது. எதையும் மறைமுகமாகச் செய்கிற பழக்கம் எங்களுக்குக் கிடையாது. ஆகவே, இந்த எழுத்துத் தேர்விலே உங்களுக்கு சந்தேகம் இருந்தாலும், answer sheet-ஐயே உங்கள் கையிலே கொடுத்து விடுகிறோம், அங்கே. நீங்கள் பார்க்கச் சொல்லுங்கள் ஒவ்வொருவரையும். அங்கு மறைமுகம் கிடையாது. ஊழல் வருவதற்கு வாய்ப்பே கிடையாது. ஒருபடி மேலாகத் திறமைக்கும் இங்கே இடம் இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே ஒரு கோரிக்கை. நேற்றுகூட நம்முடைய மாமன்றத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கார் வாங்குவதற்கு கடன் வழங்கும் திட்டத்தைச் சொன்னார்கள். அது நல்லது. வரவேற்கத்தக்கதாக இருந்தாலும்கூட, கார் வாங்கக்கடன் பெறுவதற்கும், அதைத் திரும்பச் செலுத்துவதற்கும்,

5 ஆண்டுகாலம் முடிவடையும் நிலை என்றெல்லாம் இருப்பதனாலே சற்றுச் சிக்கலாக இருக்கும். இப்போது பெரும்பாலான அரசு அதிகாரிகளுக்கு வாகனங்கள் வழங்கப்படுகின்றன. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலகங்கள் இருக்கின்ற காரணங்களினாலே, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்களைக் கொடுத்துவிடுங்கள். 5 ஆண்டுகாலம் பணி முடிவடைகிறது என்று சொன்னால் அந்த வாகனங்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். எத்தனை ஆண்டுகாலம் பணியிலே இருக்கிறார்களோ அதுவரையிலே அந்த வாகனங்களை, காரோ அல்லது எந்த வாகனமோ, ஜீப் கொடுத்தாலும்கூட, அதைப் பயன்படுத்திக் கொள்ளட்டும். காலம் முடிவு அடைந்தவுடனே அதை நீங்கள் எடுத்துக்கொண்டு, வேறு உறுப்பினர்களுக்கு, புதிதாக வரக்கூடிய உறுப்பினர்களுக்குக் கொடுத்துவிடலாம். இத்தகைய ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள். இன்னும் சட்டமுன்வடிவுகள் நிறைய இருக்கின்றன, முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு சமூக நீதியிலே மிக்க ஈடுபாடு இருக்கிறது, அக்கறை இருக்கிறது என்பதையெல்லாம் நாங்கள் நன்றாக உணர்வோம். அப்படிப்பட்ட காரணத்தினாலே, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, இப்போது அரசுத் துறைகளிலே வேலைவாய்ப்புக் குறைந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசுத் துறையிலும் சரி, மாநில அரசுத் துறையிலும் சரி, இரண்டிலேயும் சேர்த்து மொத்தமே 4 சதவிகித வேலைவாய்ப்புத்தான். மைய அரசிலே 3, மாநில அரசிலே ஒன்று. ஆக, 96 சதவிகிதம் தனியார் நிறுவனங்களிலே இருந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தனியார் நிறுவனங்களிலே, தாழ்த்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் வேலைக்குச் செல்வதென்பது, குதிரைக் கொம்பாக இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட காரணத்தினாலே, ஏழையெளிய சாதாரண மக்களிடையே வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையிலே, தனியார் நிறுவனங்களிலும் [redacted]துக்கீடு வரவேண்டுமென்ற அந்தக் கொள்கை உங்களுடை[redacted]லே வரவேண்டும்; அதை நிச்சயமாக





நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு இந்தக் கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

இட ஒதுக்கீட்டில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையும் களைய வேண்டும். அந்தக் குறைபாடுகளையெல்லாம் களைவதற்கு — இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள் — விகிதாச்சார அடிப்படையிலே இட ஒதுக்கீடு வழங்குவதற்கு அரசு முனைப்பாகச் செயல்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை வரவேற்று, இதைக் களைவதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு தேவை; அதை நிச்சயமாக நாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி இருக்கிறீர்கள். வரவேற்கிறேன். இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கி, அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர் மின்சாரம். ஒகேனக்கல் நீர் மின்சாரம் மிக்க பயனுள்ளது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்டவாரியாக சாலைகள் பாலங்களுக்கு நிதி ஒதுக்குகிறீர்கள். நிதியைப் பார்க்கின்ற நேரத்திலே, வளர்ந்த மாவட்டங்களுக்குக் கூடுதலாக நிதி, வருடா வருடம் போய்க்கொண்டேயிருக்கிறது. ஆனால் பின்தங்கிய மாவட்டங்களுக்கு நிதியொதுக்கம் சற்றுக் குறைவாக இருக்கிறது. நான் புள்ளி விவரத்தோடு சொல்கிறேன். ஆகவே, நிதி ஒதுக்குகின்ற நேரத்திலே மாவட்டத்திலே இருக்கக்கூடிய சாலையினுடைய நீளத்தைக் கணக்கிலே கொண்டு, சாலையினுடைய தரத்தைக் கணக்கிலேகொண்டு, போக்குவரத்தைக் கணக்கிலேகொண்டு, அவற்றையெல்லாம் மையமாக வைத்து, பின்தங்கிய மாவட்டங்களிலேயும் முன்னேற்றப் பணிகளை எடுத்துச் செய்வதற்கு நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போலவே ஜனநாயகத்திலே தேர்தல் மிக முக்கியமானது. இந்தத் தேர்தல்தான் ஊழலுக்கு வழி வகுக்கக்கூடிய ஓர் அம்சமாக இருக்கிறது. பொதுமக்களும் தேர்தல் என்று சொன்னாலே, ஏதோ வரவேண்டும்; ஏதோ வருவாய் வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தேர்தலில் யார் நின்றாலும்கூட, எந்த அரசியல்

கட்சியாக இருந்தாலும்கூட, கூடுதலான செலவினம் ஏற்படுகிறது. தேர்தலுக்குப் பிறகு செலவை ஈடுகட்டுவதற்கு பல்வேறு நிலைகளிலே, ஊழலுக்கு இந்தத் தேர்தல் வழிவகை செய்கிற காரணத்தினாலே, இந்த ஊழல் என்பது முக்கோண வடிவில் இருக்கிறது. இந்த ஊழலுக்கு பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள், அதிகாரிகள் எல்லோருமே மையமாக இருக்கிற காரணத்தினால், இந்த முக்கோண ஊழலை அகற்ற வேண்டும். அதை அகற்றுவதற்குத் தேர்தலை ஒரு மையமாக வைத்து ஒரு முன்னுதாரணமாக ஆக்க வேண்டுமென்று சொல்கிறேன். தேர்தல் என்று வருகிற நேரத்திலே ஒரு வேட்பாளர், ஒரு கட்சியின் சார்பிலே போட்டியிடுகிறார் என்று சொன்னால், 50 ஆயிரம் அல்லது ஒரு இலட்சம் ரூபாய் deposit கட்ட வேண்டும். அங்கே வேட்பாளர் பயன்படுத்தும் வாகனங்கள் அல்லது notice அல்லது wall posters வேறு எதுவாக இருந்தாலும், காராக இருந்தாலும்கூட, தேர்தல் ஆணையத்தினுடைய முத்திரையோடு அவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டும். எல்லோருக்கும் சமமாகக் கொடுக்க வேண்டும். பிரச்சாரம் என்று வருகிற நேரத்திலே, வீடு வீடாக, கிராமம் கிராமமாக இல்லாமல், மேலை நாடுகளிலே இருப்பதைவிட சற்றுக் குறைவாகச் சொல்வோம் என்று சொன்னாலும்கூட, ஒரே இடத்திலே மேடை அமைத்து, கட்சிகளுக்கு, வேட்பாளருக்கு நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கிற வகையில், தேர்தல் விதிமுறைகளிலே மாற்றம் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால் தேர்தல் செலவைக் குறைப்பதற்கு, ஊழலைக் களைந்தெறிவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. தயவுசெய்து இதோடு உரையை முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேசி முடித்துவிடுகிறேன். அதேபோல் சத்துணவுப் பணியாளர்களுடைய பிரச்சினை, நீண்ட நாளைய பிரச்சினை. அதையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தினந்தோறும் ஒன்பதரை கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்வார். இருந்தாலும்கூட, இந்த மின் துறையில் additional deposit என்று வருவது, இன்று வீட்டிலே இருக்கக்கூடிய, நாட்டிலே இருக்கக்கூடிய எல்லோரையும் தொடக்கூடிய பிரச்சினை. சம்சாரம் இல்லாமல் வாழ்ந்துவிடலாம்;





ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாத நிலை. ஆகவே எல்லோரும் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய காரணத்தினால், எல்லோரையும் நேரடியாக பாதிக்கின்ற காரணத்தினாலே, இந்த additional deposit திட்டத்தை நீங்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பள்ளிக்கூடத்திலே உடற் கல்வி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், இன்னும் பல்வேறு சிறப்பு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இந்த ஆசிரியர் இடங்கள் எல்லாம் காலியாக இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடிய வகையிலே, அதை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். போக்குவரத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளைக் களைவதற்கு மற்ற மாநிலங்களில் கூட வசதி இருக்கிறது. இந்த பேருந்துகள் விட முடியாத இடங்களிலே Jeep Service, Van Service — அவர்கள் கட்டணங்கள் கட்டுகிறார்கள். ஆகவே அவற்றிற்கு நீங்கள் முன்னுரிமை கொடுத்து Jeep Service, Van Service — விடுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த அளவுக்கு வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. மற்ற சட்டமுன்வடிவுகளிலே பேசலாம். (குறுக்கீடுகள்) சட்டமுன்வடிவுகளிலே பேச வாய்ப்பு அளிக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எல்லாக் கட்சிகளுக்கும் கொடுக்கிறீர்கள். எங்கள் கட்சிக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். ஒரே ஒரு கோரிக்கை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கிறேன். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது, மூன்றாவது.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல கட்சிகள் பேசவில்லை. உட்காருங்கள். அவர் பேசட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிதி ஒதுக்க மசோதாக்களின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை, தொகுத்துச் சொல்கின்ற நல்வாய்ப்பினை அளித்தமைக்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்க மசோதா தாக்கல் செய்யப்படும் நேரத்தில் ஒரு நெருக்கடியான சூழ்நிலையை நாம் சந்தித்துக்கொண்டு இருக்கிறோம். அதிலிருந்து விடுபட்டு நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல வேண்டியது ஆட்சியாளருடைய தலையாய கடமையாக இருக்கிறது. இந்தியாவினுடைய பொருளாதாரத்திலே ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தொழில் துறையில் எதிர்பார்த்த அளவு வளர்ச்சி ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல; வளர்ச்சி விகிதம் குறைந்து கொண்டிருக்கிறது. நேற்றையதினம் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். Index for industrial production போன மாதம் 2.7%-க்கு வந்திருக்கிறது. இந்த இக்கட்டான நிலையிலேயிருந்து நாட்டை மீட்பதற்கு பொருளாதார நிபுணர்கள்தான் வழிகாட்ட வேண்டும் என்று பாரதப் பிரதமர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், பொருளாதார நிபுணர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அத்தனை பேரையும் அழைத்துப் பேசி ஆலோசனை நடத்தியிருக்கிறார். தற்போது அமெரிக்க நாட்டின் நியூயார்க், வாஷிங்டன் போன்ற நகரங்களை பயங்கரவாதிகள் கொடூரமாகத் தாக்கி ஏற்படுத்திய கோர விளைவுகளால் உலக வர்த்தகமே பாதிக்கப்பட்டிருக்கிறது. பெட்ரோலியப் பொருள்கள் விலை, தங்கத்தின் விலை உலகெங்கும் ஏறிவிட்டது என்ற செய்தி வருகிறது. இங்குள்ள பங்கு மார்க்கெட்டிலே விலைகள் வீழ்ச்சி அடைந்திருக்கின்றன. அதே நேரத்திலே ரூபாய் நாணயத்தினுடைய மதிப்பு குறைந்திருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையிலே திருப்பூரிலேயிருந்து ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 1,500 கோடி ரூபாய்க்குப் பின்னலாடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதற்கு பெரும் பாதிப்பு இந்த ஆண்டு வரும் என்று அத்தனை பேரும் மிகவும் வருத்தத்திலே இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்று ஒரு செய்தி பார்த்தேன். இராமேஸ்வரத்திலிருந்து இறால் மீன் ஏற்றுமதி ஆகிறது. இனி அடுத்த இரண்டு வாரங்களுக்கு மீனே பிடிப்பதில்லை என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதுபோன்ற ஒரு சூழ்நிலையிலேதான் நம்முடைய



மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வேளாண் பொருட்களுடைய இறக்குமதிக்கு இருந்த அளவுக் கட்டுப்பாடுகள் — quantitative restrictions—மத்திய அரசால் அகற்றப்பட்டுவிட்டதாலே நம்முடைய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பருத்தி, கரும்பு, தேயிலை, கோதுமை, முந்திரி, தென்னை போன்ற பயிர்களைச் சாகுபடி செய்தவர்கள் விலை வீழ்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். உலக வர்த்தக ஒப்பந்தத்தால் நமக்குப் பெரும் பாதகம்தான் ஏற்பட்டு இருக்கிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் விவசாயத்திற்கு மானியமாக மட்டும் 36,500 கோடி டாலர், அதாவது ரூபாய்க் கணக்கிலே சொன்னால் 18 இலட்சம் கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மானியமாக அவர்கள் வழங்குகிறார்கள். அங்கே இப்படி வழங்கிய காரணத்தினாலே வேளாண் பொருட்களுடைய விலைகள் மிகவும் மலிவாகிவிட்டன. அவை தங்குதடையின்றி இங்கு நுழைய அனுமதிக்கப்பட்டு இருப்பதால் நம்முடைய விவசாயப் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஒருபுறத்திலே வளர்ச்சி அடைந்த நாடுகளில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு மானியங்கள் வாரி வழங்கப்படுகின்றன. ஆனால் மறுபுறத்திலே நம்மைப் போன்ற வளர்ச்சி அடையும் நாடுகளுக்கு, developing nations—மானியமே கொடுக்கக்கூடாது என்று கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகமயமாக்கல் கொள்கையிலே நாம் வேகத்தைக் காட்டுவதும் நமது பொருளாதாரத்தைப் பாதித்துவிட்டது என்று நம்முடைய மத்திய வேளாண் துறை அமைச்சர் அஜீத் சிங் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். பெரிய பெரிய தொழில் அதிபர்களுக்கு எல்லாம் கோடிக்கணக்கில் அரசுப் பணத்தை வாரி இறைத்து அவர்களைத் தூக்கி நிறுத்தும்போது, விவசாயத் துறைக்கு உதவி புரிகின்ற கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகளை மட்டும் ஈடுசெய்ய முடியாது என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்கத்தக்கது அல்ல என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் அஜீத் சிங் அவர்களும், ஹரியானா முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலா அவர்களும் பிரதமருடனும், நிதியமைச்சருடனும் நேரடியாகவே மோதியிருக்கிறார்கள். இந்நிலையில் இங்குள்ள கூட்டுறவு நிறுவனங்களிலே பல்வேறு முறைகேடுகளைச் செய்தும், கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் கோடிக்கணக்கில் கொள்ளையடித்தும், பருத்தி விவசாயிகளைப் பட்டினி போட்டும், தேயிலை விவசாயிகளைச் சிறையில் அடைத்து சித்திரவதை செய்தும், விவசாய கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய மறுத்து கிராமப்புறத்து ஏழை

விவசாயிகளை கண்ணீர்க் கடலிலே மூழ்கடித்தும் கலங்க வைத்த கடந்தகால ஆட்சி ஒரு கெட்ட கனவாக மாறிவிட்ட சூழ்நிலையிலே, புதிய ஆட்சி ஒரு புதிய பாதையைக் காட்டி இருக்கிறது.

*பிற்பகல் 1-10*

தனியார் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 96 காசு முதல் 5 ரூபாய் 27 காசு வரை கொடுத்து, விலைக்கு வாங்கி சராசரியாக 2 ரூபாய் 25 காசுக்கு அது தரப்படுகிறது. அதை மின்வாரியம் விற்று விடுகிறது. அதேநேரத்திலே மராட்டியத்திலே பன்னாட்டு நிறுவனமான, என்ரான் நிறுவனம் யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசு பெற்றுக்கொண்டு அரசுக்கு விற்கத் தயாராக இருக்கிறது. அதனை அந்த அரசு ஏற்க மறுத்து இன்னும் மலிவான விலையில், இன்னும் விலையைக் குறைத்து வாங்குவதற்கு பேரம் பேசிக்கொண்டிருக்கிறது. இங்கோ நியாயமற்ற அதிக விலை கொடுத்துத் தனியாரிடமிருந்து கடந்தகால அரசு வாங்கி, மின்வாரியத்திற்கு அதிகமான இழப்பை ஏற்படுத்தியது. அதனை மாற்றியமைப்பதற்காக தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் இந்த அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்று கூறியிருப்பது ஆறுதலாக அமைந்திருக்கிறது.

கரும்பைப் பொறுத்தவரையிலே அரசு நிர்ணயித்த ஆலோசனை விலையை தனியார் ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்க வேண்டுமென்று அரசால் வற்புறுத்தவும் முடியவில்லை. நீதிமன்றங்களில் புகலிடம் தேடி தனியார் ஆலை அதிபர்கள், நிர்ணயித்த விலையைக் கொடுக்காமல் தப்பித்து விடுகிறார்கள். அதேநேரத்திலே கூட்டுறவுத் துறையிலுள்ள 16 ஆலைகளும், பொதுத் துறையிலே உள்ள 3 ஆலைகளும் அந்த ஆலோசனை விலையைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருந்ததாலே, கடந்த ஐந்து ஆண்டுகளில் 612 கோடி ரூபாய் இழப்பு அடைந்து இருக்கிறது. இந்த நிலையினை மாற்றி, தனியார் ஆலைகளும் விவசாயிகளுக்கு ஆலோசனை விலையை, நிர்ணயிக்கப்பட்ட விலையைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

அரிசியையும் நெல்லையும் பொறுத்தவரையிலே, பிற மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று அதிக விலைக்கு விற்று இலாபம் அடையும் நிலை 25 ஆண்டுகாலமாக நம்முடைய விவசாயிகளுக்கு இல்லாமலே இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே, மட்டரக அரிசி டிகேஎம்9 அரிசியை எங்கே வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம் என்று





சொல்லி, இருந்த தடையை அகற்றியது. இப்போது எல்லா வகை அரிசிக்கும் தடை இல்லை என்று அறிவித்து நெற்பயிரிடுவோர் நிலையை உயர்த்தி இருக்கிறது. அதுமட்டுமல்ல. வருகின்ற குறுவைப் பருவத்திலே இணை கொள்முதல் தொடரும் என்று அறிவித்திருப்பது ஒரு இதமான செய்தி.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்த சிறு தேயிலை விவசாயிகள் துயர் துடைப்பதற்கு அரசு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதிலே காணப்படும் சிறு குறைகளைக் களைந்து சிறந்த முறையிலே செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தேங்காயைப் பொறுத்தவரையிலே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். கொப்பரைத் தேங்காய்க் கொள்முதல், கிலோ ஒன்றுக்கு 33 ரூபாய் என்று கொள்முதல் செய்தார்கள். கடந்த காலத்திலே தவறுகள் நடந்தன. நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் இன்றையதினம் கொள்முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தால் நடப்பு ஆண்டில் கொள்முதல் அனுமதிக்கப்பட்ட நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே அதைச் செய்யவில்லை. இப்போது மத்தியிலே இருந்து பணம் வரவில்லை. NAFED-லேயிருந்து பணம் வரக்கூடிய நிலை இல்லை. இங்கே எப்படி ஒரு கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்களோ அதேபோல மத்தியிலே இருக்கின்ற NAFED-க்கும் பணம் கட்டினால்தான் திரும்பி பணம் வரும் என்ற நிலை. இதிலே, NAFED என்ன செய்கிறது என்று சொன்னால், வேளாண் துறை அமைச்சரிடத்திலே பணம் கேட்டுக்கொண்டு இருக்கிறது, நிதி கேட்டுக்கொண்டு இருக்கிறது. நிதி வரவில்லை. எனவே, அருள்கூர்ந்து இந்த அரசு இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்ல, முடிந்தால் இங்கேயிருந்து ஒரு தூதுக் குழுவைக்கூட அங்கே அனுப்பி வைக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே சில நல்ல விவசாயிகள், சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி வைத்து— (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்ல வருகிறார்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காய்க் கொள்முதல் பற்றி இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே, இதிலே நடந்த ஊழல்களையெல்லாம் வெளிக்கொண்டு வந்த அதேநேரத்திலே இந்த வருடம் எந்தவிதமான ஊழலும் இல்லாமல் ஒழுங்கான முறையிலே கொள்முதலை நடத்த வேண்டும் என்று ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதறகான வழிமுறைகளையெல்லாம் தெரிவித்து. அதற்கு மேலாக இந்தக் கொப்பரைத் தேங்காய்க் கொள்முதலில் இன்னும் மத்திய அரசாங்கததிலேயிருந்து பணம் வராத காரணத்தினாலே கொள்முதல் செய்யாமல் இருக்கிற இந்தச் சூழ்நிலையைப் போக்கி, விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்கவேண்டும் என்பதற்காக தக்க அதிகாரிகளை இரண்டு முறை மத்திய அரசுக்கு அனுப்பி அதற்கான ஏற்பாடுகளையும் செய்து இருக்கிறார்கள். இன்னும் மத்திய அரசாங்கத்திலேயிருந்து பணமும், உத்தரவும் வரவில்லை. அதனால்தான் கொள்முதல் செய்வ்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து பணமும் உத்தரவும் வந்தவுடனே, அம்மா அவர்கள் சொல்லியிருக்கிற வழிமுறைப்படி, எந்தவிதமான ஊழலும் இல்லாமல் முறையான வகையிலே கொள்முதலைச் செய்வதற்கு இந்த அரசு இயந்திரம் தயாராக இருக்கிறது என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதெல்லாம் எனக்குத் தெரியும்; அங்கிருந்து பணம் வரவில்லை; வாங்கச் சொல்லி அங்கிருந்து ஆணையும் வரவில்லை என்பது எனக்குத் தெரியும். வேளாண் துறை அமைச்சகம் ஏற்றுக்கொண்டு நிதியை விடுவித்தாலொழிய, NAFED வாங்கச் சொல்வதற்கு வாய்ப்பே கிடையாது. எனவே வேளாண்மைத் துறை—இந்த வேளாண்மைத் துறை அல்ல, மத்தியிலே இருக்கிற வேளாண்மைத் துறை—அமைச்சகம் நிதியை ஏற்பாடு செய்வதற்கு நாம் எல்லாம் கொஞ்சம் அவர்களுக்குப் போதிய அளவிற்கு pressure கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கென்யா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து மிகக் குறைந்த விலைக்கு முந்திரி இறக்குமதி செய்யப்படுவதால், இங்குள்ள முந்திரி விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், முந்திரி ஏற்றுமதியாளர்கள் பெரிதும்



பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை 80 கிலோ எடை கொண்ட மூட்டை 5,000 ரூபாய் வரை விற்று வந்தது. ஆனால், தற்போது அது 1,500 ரூபாய்க்கும் கீழே குறைந்துவிட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே மட்டுமல்ல, தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன; நூற்பாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன; நெசவாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன; இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அதற்கு நீங்கள் ஏற்கெனவே தொழிலாளர்களோடும் நிர்வாகத்தோடும் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்தி ஆலைகள் இயங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அதுபோல மூடப்பட்ட ஆலைகளும் திறக்கப்பட்டு நடைபெறுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் ஒரு பேரிடியாக—மிகப் பெரிய தொழிற்சாலையாக இருந்து வந்த இன்ஜினியரிங் தொழிற்சாலை டெக்ஸ்டூல் ஆலை—கடந்த சில நாட்களுக்கு முன்னாலே மூடப்பட்டு இருக்கிறது. கோவையிலே இப்போது வேறு தொழிற்சாலைகள் வந்துவிட்டாலும்கூட, மிகப் பெரிய தொழிற்சாலையாக பல ஆண்டுகாலமாக விளங்கி வருவது டெக்ஸ்டூல் ஆகும். அந்த டெக்ஸ்டூல் மூடப்பட்டு இருக்கிறது. எனவே, தொழிலாளர்கள் எல்லாம் தெருவிலே நிற்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் நல்ல வழி காண வேண்டும்.

அதுமட்டுமல்ல. நெசவாளர்களைப் பொறுத்தவரையில் நூலுக்கு விலை போதவில்லை என்று ஆலை அதிபர்கள் சொல்கிறார்கள். ஆனால் நெசவாளர்கள் எங்களுக்கு நூல் விலை அதிகம் என்று சொல்கிறார்கள். நெசவாளர்கள் துயரைத் துடைப்பதற்கும் நீங்கள் வழி காண வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஒரு முக்கியமான பிரச்சினை. கவுண்டம்பாளையம் ஒரு பேரூராட்சி; என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின் மக்கள் தொகை பல மடங்கு உயர்ந்துவிட்டது. அங்கே 8 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் கிடைக்கிறது. 16 இலட்சம் லிட்டர் தண்ணீர் சிறுவாணி திட்டத்திலேயிருந்து கொடுக்கிறார்கள். அது போதாது என்பதைக் குடிநீர் வழங்கல் வாரியமே ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே,

இன்னும் 3 இலட்சம் லிட்டர் தண்ணீரை பில்லூர் திட்டத்திலே இருந்து எடுத்துக்கொள்வதற்கு ஆணை பிறப்பித்துவிட்டார்கள்; 1998 ஆம் ஆண்டே ஆணை பிறப்பித்துவிட்டார்கள். ஆனால், அந்த ஆணையில் என்ன கோளாறு என்று கேட்டால், 1,000 லிட்டர் தண்ணீருக்கு 25 ரூபாய் பேரூராட்சி செலுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டு இருக்கிறது. இது சாத்தியமே கிடையாது. ஆயிரம் லிட்டர் தண்ணீருக்கு 25 ரூபாய் குடிநீருக்காகக் கொடுப்பது என்பது சாத்தியமே இல்லை. தொழிற்சாலையாக இருந்தால் அந்தக் கட்டணம் விதிக்கலாம்; தப்பு சொல்லவில்லை. ஆனால் ஒரு பேரூராட்சி, 5 ரூபாய்க்கு மேலே கொடுக்க இயலாது; மூன்றரை ரூபாய்க்குத்தான் சிறுவாணி திட்டத்திலேயிருந்து தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 1,000 லிட்டருக்கு 25 ரூபாய் செலுத்த வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஏற்கெனவே, செயற் பொறியாளர் அவர்கள் தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்து இருக்கிறார்கள். அங்கே பக்கத்திலே இருக்கிற பேரூராட்சிகளுக்கு எல்லாம் குறைந்த விலைக்கு பில்லூர் திட்டத்திலேயிருந்து கொடுக்கிறார்கள். காளாப்பட்டிக்கு 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கிறார்கள். சரவணம்பட்டிக்கு 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கிறார்கள். அந்த இரண்டு கிராமங்களுக்கும் 5 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். எனவே, அந்தப் பேரூராட்சிக்கு 3 ரூபாய்க்குக் கொடுக்காவிட்டாலும்கூட, ஆயிரம் லிட்டருக்கு 5 ரூபாய்க்காவது கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சினை; எல்லோரும் என்னிடத்திலே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிற பிரச்சினை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அரசு 50 இலட்சம் ரூபாயை இப்படித்தான் ஒதுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. இப்படிச் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னால், அவர்கள் தொகுதிக்குள்ளேயே போக முடியாது. இதை எதிர்க் கட்சிக்கு மட்டுமல்ல, ஆளும் கட்சிக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். தொகுதிக்குள்ளே போனால், அங்கு பெரிதாக எதிர்பார்க்கிறார்கள்; அங்கே சத்துணவுக்கூடம் வேண்டும். பள்ளிக்கூடத்திற்குக் கட்டடம் வேண்டும்; குடிநீருக்குப் பணம் கொடுக்க வேண்டும்; சமுதாயக்கூடம் வேண்டும்; சாலை போடுவதற்கு பணம் வேண்டும் என்று இப்படி பல்வேறு திட்டங்களுக்கும் கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, 82 இலட்சம் ரூபாயில், 50 இலட்சம் ரூபாயை நீங்கள் எடுத்துக்கொண்டு, இப்படித்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டால், நிச்சயமாக ஒரு பணியும் செய்ய முடியாது; யாரையுமே





எங்களாலே திருப்தி செய்ய முடியாது. அதனாலே அருள்கூர்ந்து, மாண்புமிகு அவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து அந்த நிபந்தனையை எடுத்துவிடுங்கள்; தவறு நடைபெறாமல் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்; ஏதாவது சிறிய தவறு நடந்தால்கூட நடவடிக்கை எடுங்கள்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி விரும்புகிறார்களோ, யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, எந்தப் பணிக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அந்தப் பணிக்குத்தான் அதைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று—முதலமைச்சர் அவர்களும் இந்த அவையிலே இருக்கிறார்கள்— நான் மிகுந்த அடக்கத்தோடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மற்றொரு பிரச்சினை; பேசக்கூடிய பிரச்சினைகூட அல்ல. இருந்தாலும் என்னிடத்திலே அதைப்பற்றிப் பேசுமாறு நண்பர்கள் கொடுத்து இருக்கிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திலே குற்ற எண் 51/2001, 1-9-2001-ல் பதிவு செய்யப்பட்ட கொலை வழக்கில் 6 அப்பாவிகளைக் குற்றவாளிகளாகச் சேர்த்து சிறையில் அடைத்துள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது. நான் அதைத் தப்பு என்றுகூடச் சொல்லவில்லை. ஆனால், அங்கே இருக்கிற போலீசார் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனாலே, அருள்கூர்ந்து, C.B., C.I.D. விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நமது முதலமைச்சர் அவர்களுக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்துவைத்த பிரச்சினை குறித்து பல்வேறு வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவை விசாரணையில் இருப்பதால், அவற்றுக்குள் நுழைய நான் விரும்பவில்லை. ஆனால், பத்திரிகைகளிலே ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. அது, தமிழக அரசுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் தி.மு.க. வழக்கறிஞர் கே.வி. வெங்கடபதிக்காக, அட்டர்னி ஜெனரல், தலைமை வழக்கறிஞர் சோலி சொராப்ஜி வாதாடி வருகிறார் என்று செய்தி வருகிறது. அதேபோன்று போபர்ஸ் வழக்கிலே இந்துஜாக்களுக்கு அட்டர்னி ஜெனரலாக இருக்கும் நமது சோலி சொராப்ஜி ஆலோசனை கூறினார் என்றும் பிரச்சினைக்குள்ளாகி இருக்கிறது. மத்திய அரசின் தலைமை வழக்கறிஞராக இருந்துகொண்டு,

அரசுக்கு எதிராக அவ்வாறு ஆலோசனை வழங்கியிருப்பது முறையற்றது என்ற கருத்தும் உருவாகியிருக்கிறது. தற்போது அவரும் இந்த வழக்கில் ஆஜராகி உயர் நீதிமன்ற விசாரணைக்குத் தடையுத்தரவு விதிக்க, வழக்கு விசாரணை பாதியில் இருக்கும்போதே, வேறு நீதிபதியை மாற்றி உத்தரவிடக் காரணமாக இருந்தார் என்றும் கருதப்படுகிறது.

*பிற்பகல் 1-20*

அதுமட்டுமல்ல. இன்னொரு வழக்கறிஞர், சீனியர் வழக்கறிஞர் நாரிமன். நீதிபதி பரூச்சாவைப் பொறுத்தவரையில் இந்த வழக்கறிஞர், தமிழக அரசுக்கு எதிராக வழக்காடும் மூத்த வழக்கறிஞர் நாரிமன், அவர்களோடு சேர்ந்து பணியாற்றினார் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு இருப்பின், நாரிமன் மட்டும் எவ்வாறு இந்த வழக்கில் ஆஜராகிறார் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. நான் வழக்கறிஞர் தொழிலைவிட்டு 32 ஆண்டுகள் ஆகிவிட்டன. இல்லையென்று சொல்லவில்லை. இங்கே உயர் நீதிமன்றத்தில் சில காலம் தொழில் புரிந்திருக்கிறேன். பிறகு மாவட்ட நீதிமன்றத்தில் நான் தொழில் புரிந்திருக்கிறேன். தொழிலில் ஒரு தருமம் உண்டு. யார் யார் எந்த நீதிமன்றத்தில் நிற்கக்கூடாது என்ற தருமமே உண்டு. நான் இங்கே குற்றச்சாட்டுக்கு இலக்கான நீதிபதிகள் உட்பட பலரைச் சந்தித்திருக்கிறேன். உதாரணமாக, தவறாகச் சொல்ல வேண்டுமென்று இல்லை, ஒரு Bench. அதிலே வருமான வரி வழக்கு வந்தது. எடுத்து அவர் பார்த்தார். ``There are two Ganeshes. Which Ganesh" என்று கேட்டார். "R. Ganesh, My Lord" என்றார் வழக்குரைஞர். அவர் உடனே, அந்த வழக்கைத் தூக்கி வேறு Bench-க்குப் போகட்டும் என்று போட்டார். அவர் distant relative. நெருக்கமான உறவினர் இல்லை, ஒரே ஊர்க்காரர். இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தொலைதூர உறவு உண்டு. அவர் அப்படியே தூக்கிப் போட்டுவிட்டார். அதைத் தொடக்கூடவில்லை.

அதேமாதிரி எனக்குத் தெரிந்த இன்னொரு நீதிபதி. அவரும் குற்றச்சாட்டுக்கு இலக்கான நீதிபதியாக இருந்தாலும்கூட அவருடைய கோர்ட்டில் அவருடைய உறவினர்கள் நிறைய பேர் அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருந்தார்கள். அரசு வழக்கறிஞராகக்கூட அவருக்கு எதிராகக் கோர்ட்டில் நிற்கமாட்டார்கள். அரசு வழக்கறிஞர் A.G.P. — Additional Government Pleader-ஆக அன்றைக்கு இருந்தார். அவர் கோர்ட்டில் போய் நிற்கமாட்டார். அவருக்குப் பதிலாக வேறு வழக்கறிஞர்களை அனுப்பி வைப்பார். இன்னொரு சொந்த மருமகன்





வழக்கறிஞர் தொழில்புரிந்து கொண்டிருந்தார். அவர் பெயரைப் பார்த்தாலேகூட அப்படியே case கட்டைத் தூக்கிப் போட்டுவிடுவார். தொடக்கூட மாட்டார். இதுதான் நம்முடைய நீதிமன்றங்களுடைய வரலாறாக, நீதிமன்றங்களுடைய பாரம்பரியமாக, மரபாக இதுவரையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த மரபுகளெல்லாம் இன்றையதினம் காற்றிலே பறந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. மத்திய சட்டம் மற்றும் நீதி அமைச்சர் அவர்களின் ஜூனியர் இந்த வழக்கிலே வக்காலத்து போட்டிருக்கிறார். நீதி என்ன பாடுபடுகிறது என்று பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி பழைய சம்பவங்களைப் பார்த்தால் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு நீதிமன்றங்கள் மசோதா இந்த அவையிலே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அந்த நீதிமன்றம் எப்படிப் பணியாற்ற வேண்டுமென்றால், 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கும் 1996 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் இடையில் நடைபெற்றதாகப் பதிவு செய்யப்பட்ட ஊழல் வழக்குகள் 375. அவற்றில் முதலமைச்சருக்கு எதிரான ஏழு வழக்குகளும் அவரைச் சார்ந்த முன்னாள் அமைச்சர்கள், I.A.S., I.P.S. அதிகாரிகள் போன்றவர்களுக்கு எதிரான 39 வழக்குகளைத் தனியாகப் பிரித்து, 375 வழக்குகளில் 39 + 7 =46 வழக்குகளை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து அவற்றை விரைவாக விசாரித்து முடிப்பதற்கு என்று மூன்று தனி நீதிமன்றங்களை அமைப்பதற்கு வகை செய்யும் அந்த மசோதா உள்நோக்கம் கொண்டது என்றும், பாகுபாடானது என்றும் — நான் சொல்லவில்லை, அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த அவையிலே பேசப்பட்டதை நான் சொல்கிறேன் கூறி—எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கெனவே இயங்கி வரும் நீதிமன்றங்களை விட்டுவிட்டு, இப்படித் தனி நீதிமன்றங்களை அமைக்கும்போது, அரசின் தலையீட்டுக்கு இடம் அளிக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு கூறுவது, நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிப்பதாகும் என்று அன்றைய சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் கடிந்து கொண்டார்கள். அவ்வாறு கூறுவது முறையல்ல, நல்ல பண்பல்ல என்று கோபப்பட்டார். ஆனால் இன்றோ உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் மேல்முறையீட்டு மனுக்களை வேறு உயர் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று, இந்த அரசின் சார்பில்

வாதாடுவதற்கு நீதிமன்றத்தாலே நியமிக்கப்பட்ட தி.மு.க. வழக்கறிஞரே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். இந்தச் செயல் உயர் நீதிமன்றங்களையும், உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் சிறுமைப்படுத்துவதாக அமையாதா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. பொன்முடி, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) சரி, கேளுங்கள்.

(தி.மு.க.வைச் சேர்ந்த சில உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பொன்முடி, கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கிறபோது, அவற்றைப் பற்றியெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் வழக்கு பற்றிப் பேசவில்லை.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிய பிறகு வேண்டுமானால் அவரை அனுமதித்துக் கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது, இடையிடையே குறுக்கிட்டு.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசி முடிக்கட்டும். பேசி முடித்த பிறகு பேசலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** இடையிலே Point of Order கேட்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order இல்லை, உட்காருங்கள். உட்காருங்கள், பேசி முடித்த பிறகு பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும் என்பதற்காகவே, தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. அங்கு நாள்தோறும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்புகளும் வழங்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் பாதிக்கப்பட்டவர் மேல்முறையீடு செய்தால் அந்த வழக்குகளை விரைந்து முடிக்க விடாமல் முட்டுக்கட்டை போடுவது எந்தவகையிலே நியாயமாகும் என்பதை நான் கேட்கிறேன்.



(மேசையைத் தட்டும் ஒலி) இதிலே என்ன வேடிக்கை என்றால், பாதிக்கப்பட்டவர்கள் தனி நீதிமன்றங்களில் இருந்தோ, உயர் நீதிமன்றத்தில் இருந்தோ வழக்குகளை மாற்ற வேண்டும் என்று கேட்காதபோது, வழக்கு தொடுத்த ஒரு கட்சி பின்னணியில் இருந்துகொண்டு இவ்வாறு செயல்படுவது எந்த வகையில் நியாயமாகும்? (மேசையைத் தட்டும் ஒலி) வழக்குகளைச் சந்திப்பதற்கும், மக்களைச் சந்திப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் தயாராக இருக்கும்போது, வழக்குப் போட்டவர்களே அதற்கு இடையூறு விளைவிக்கும்போது, அவர்களின் நோக்கம் என்ன என்பது வெளிப்பட்டுவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

1976 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்மீது, முன்னாள் முதல்வர் கலைஞருக்கு எதிராகவும், மற்றும் சிலர் மீதும், சென்னை C.B.I. தனி நீதிமன்றத்தில் சில வழக்குகள் தொடுக்கப்பட்டன. சர்க்காரியா கமிஷனில் கலைஞருக்காக வாதாடிய சாந்தி பூஷன் 1977 ஆம் ஆண்டு மத்திய ஆட்சியிலே சட்ட அமைச்சராக வந்துவிட்டார். கலைஞருக்கு மிகவும் நெருக்கமான ஜார்ஜ் பெர்னாண்டஸ் மத்திய அமைச்சரவையிலே தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அந்த வழக்கில் வாதாடுவதற்காக யார் யார் எல்லாம் வந்தார்கள் என்றால், இலங்கையிலிருந்து வந்த பாரிஸ்டர் குமார், பொன்னம்பலமும், இங்குள்ள ஜி. இராமசாமி போன்ற மூத்த, முன்னணி வழக்கறிஞர்களும் கலைஞருக்காக வாதாடி பல குற்றச்சாட்டுகளைத் தகர்த்துவிட்டனர். அதேபோன்று நெருக்கடி நிலை காலத்திலே ஜார்ஜ் பெர்னாண்டஸ்மீது மிகவும் கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வழக்குத் தொடுக்கப்பட்டு இருந்தது. பரோடா வெடிகுண்டு வழக்கு என்று பிரபலமாகப் பேசப்பட்டது. அவர் நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது தலைமறைவாகியிருந்ததால், தீவிரமாகத் தேடப்பட்டு வந்தார். தமிழ்நாட்டில் அவருக்கு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு புகலிடம் அளித்தது. (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் எழுப்புகிற எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருக்கிறது. எல்லாக் கேள்விக்கும் பதில் இருக்கிறது.... (குறுக்கீடு) நான் குறுக்கீடுகளுக்கெல்லாம் அஞ்சுபவன் அல்ல.

(ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறுக்கீடுகளைப் பொறுத்தவரையில் நான் கவலையே படவில்லை.... (குறுக்கீடுகள்)

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எம்.எல்.ஏ.வா, இல்லையா? பன்னீர்செல்வம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்களெல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இவ்வளவுக்குப் பின்னர், தலையை மொட்டையடித்துக் கொண்டு கல்கத்தாவில் தலைமறைவாக இருந்தபோது ஜார்ஜ் பெர்னாண்டஸ் கைது செய்யப்பட்டார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தி.மு.க.வா, வேறு கட்சியா? (குறுக்கீடு) தி.மு.க.வா, வேறு கட்சியா? எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். உங்கள் கொறடா உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் என்ன விவகாரம் பண்ணிக் கொண்டிருப்பது? உட்காருங்கள். உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முரட்டுத்தனமாகப் பேசாதீர்கள். உட்காருங்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலையை மொட்டை அடித்துக்கொண்டு.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிக்கொண்டு இருக்கிறார். உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைமறைவாக கல்கத்தாவிலே இருந்தபோது கைது செய்யப்பட்டார். நெருக்கடி நிலை முடிந்தபிறகு, தேர்தலிலே நின்று வெற்றி பெற்று மத்திய தொழில் அமைச்சராக ஆனார்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவரைப் போன்றவர்களும் சாந்தி பூஷன் போன்றவர்களும் பரிந்துரை செய்தும், அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய், கலைஞருக்கு எதிரான ஊழல் வழக்குகளை வாபஸ்





வாங்க மறுத்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். ஆனால், ஜார்ஜ் பெர்னாண்டஸ்க்கும், மற்றவர்களுக்கும் எதிரான பரோடா வெடிகுண்டு வழக்கை வாபஸ் வாங்க உத்தரவிட்டார். சரி, மொரார்ஜி தேசாய்க்கு ஏதோ நம் மேல் கோபம்போல் இருக்கிறது, கொஞ்சம் மகிழ்விக்கலாம் என்று நினைத்து தேர்தலில் தோல்வியுற்று, எதிர்க்கட்சியாக மாறிவிட்ட காங்கிரஸ் இயக்கத்தில் ஒரு தலைவராக — அவர் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராகக்கூட அன்று இல்லை — தமிழகத்திற்கு வருகைத் தந்த அன்னை இந்திரா காந்திக்கு எதிராக மதுரை, சென்னை, காஞ்சிபுரம் போன்ற பல இடங்களிலும் தி.மு.க. கறுப்புக் கொடி காட்டி கலவரங்களை ஏற்படுத்தியது. மதுரையிலே அவருடைய உயிருக்கே உலை வைக்கின்ற நிகழ்ச்சியும் நடைபெற்றது. எனவே, கலைஞருக்கும், மற்றவர்களுக்கும் எதிராகக் கொலை முயற்சி உட்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதற்குப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அதிலே தலையிடவே இல்லை. சட்டம் அதன் கடமையைச் செய்யும் என்று கூறி, மாநில அரசு நடவடிக்கையில் தலையிட மறுத்துவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பின்னர், காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. தேர்தல் உறவு கொண்டு வெற்றியும் பெற்றது. அதனைத் தொடர்ந்து கலைஞருக்கு எதிராக மத்திய அரசு போட்டிருந்த ஊழல் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இவ்வாறு அரசியல் சூழ்நிலைகள் மாறியதால் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதை, குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலையானதாக எடுத்துக்கொள்ள முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதே காலகட்டத்திலே கூட்டுறவுத் துறையிலே தி.மு.க.வினரால் அரங்கேற்றப்பட்ட முறைகேடுகளை, ஊழல் நடவடிக்கைகளை விசாரித்து அறிக்கை அளிக்குமாறு பாரதி என்ற I.A.S. அதிகாரி தலைமையிலே விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், பின்னர் முதலமைச்சராக வந்த எம்.ஜி.ஆர். காலத்தில் பல்வேறு ஊழல் வழக்குகள் போடப்பட்டன. எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின் மீண்டும் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அந்த வழக்குகள் அனைத்தையும் ஒரே அரசாணையின் மூலமாக திரும்பப் பெற்றுவிட்டது. அரசாணை எண் 65, 1990. இதனை இந்த அவையிலே கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசிவிட்டார், அதுபற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியது இல்லை. அப்போது குறுக்கிட்டு தி.மு.க.வின் சார்பிலே ஓர் உறுப்பினர் சொன்னார், அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு, —political vendetta அவர் உபயோகித்த வார்த்தையை நான் சொல்கிறேன், அப்போது நான் சபையில் இல்லை —

போடப்பட்டதால்தான் திரும்பப் பெறப்பட்டன என்று சொன்னார். அதை நான் மறுக்கவில்லை, ஒத்துக்கொள்கிறேன். எனவே, அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு யார்மீது வழக்குப் போடப்பட்டிருந்தாலும் அவற்றைத் திரும்பப் பெறுவதுதான் நியாயமானது என்ற அவர்களுடைய சித்தாந்தத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சிக் காலத்திலே....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நக்ஸலைட்டுகள் நடவடிக்கை அதிகமாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் பலபேர்களுக்கு எதிராகக் கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் புலவர் கலியபெருமாள் தியாகு, ரங்கசாமி, பஞ்சலிங்கம், கிருஷ்ணசாமி மற்றும் கந்தசாமி போன்றவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அவற்றை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. மரணத்தை எதிர்நோக்கி அந்தக் கைதிகள் காத்திருந்தார்கள். அப்போது எஸ். கிருஷ்ணமூர்த்தி, மேயராக முன்பு இருந்தவர். அவருடைய தலைமையில் இயங்கிய தமிழ்நாடு மக்கள் உரிமைக் கழகம் விடுத்த வேண்டுகோளையேற்று அப்போதைய முதலமைச்சர் கலைஞர் தூக்குத் தண்டனையை இரத்து செய்தார்கள். அதேபோல சில மக்களவை உறுப்பினர்களின் வேண்டுகோளையேற்று நாகபூஷண் பட்நாயக் என்ற நக்ஸலைட் தலைவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை மத்திய அரசு இரத்து செய்தது. இதுபோன்று மத்திய, மாநில அரசுகளால் பல்வேறு தூக்குத் தண்டனைகள் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எதிரான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று நான் கேட்கவில்லை — உடனே சத்தம் போடுவார்கள் — நான் கேட்கவில்லை, இந்த அவையிலே ஓர் உறுப்பினர் கேட்டார். வழக்குகளைத் திரும்பப் பெற்று தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு இந்த அவையிலே வற்புறுத்திச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அவ்வாறு தண்டனைகள் இரத்து செய்யப்படும்போது தீர்ப்பும் தண்டனையும் சேர்ந்தே இரத்து ஆகிவிடும் என்று Constitutional Expert, திரு. துர்க்கா





தாஸ் பாசு என்ற அரசியல் சட்ட நிபுணர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இரண்டே இரண்டு வாக்கியம்தான். நான் படிக்கிறேன். I quote:

"The pardon rescinds both the sentence and the conviction". அதுமாதிரி ஏதாவது ஒரு வழக்கறிஞர் சொல்லியிருந்தால், அதை விட்டுவிடலாம். ஆனால் Supreme Court தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

In Kehar Singh Vs. Union of India, Supreme Court, 1989, I quote: "an order granting pardon is not justiciable". என்ன பொருள் என்றால், இங்கே ஒருவேளை இந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன என்று வைத்துக்கொண்டாலும் மீண்டும் அந்த வழக்குகளின்மீது ஏதும் மேல்முறையீடு செய்ய முடியுமா என்றால் செய்ய முடியாது. It is not justiciable. எந்தக் காரணத்தைக் கொண்டும் அதனுடைய தகுதி என்ன, அது சரியான முறையில்தான் செய்யப்பட்டதா என்று சொல்லி வழக்குத் தொடுக்க முடியாது. It is not justiciable on merit except within certain limitations. The grant of pardon may be challenged, if it is wholly irrelevant, irrational, discriminatory or malafide. ஆக, ஒருவேளை அப்படி எடுத்தால்கூட நிச்சயமாக யாரும் அதற்கு எதிராக கோர்ட்டிற்குப் போக முடியாது என்று நான் சொல்லவில்லை, துர்க்காதாஸ் பாசு ஒரு பக்கம் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய Supreme Court *1989* ஆம் ஆண்டு சொல்லி இருக்கிறது. ஆயினும் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் வழக்குகளை நீதிமன்றத்தில் சந்தித்து நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு வெளியே வருவதில்தான் உறுதியாக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைச் சந்தித்து வெற்றி பெறுவதற்கு அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது ஜனநாயகத்தை நாம் மதிப்பதாக அமையும். ஆனால் வழக்குகளை நடத்தவிடாமல் இடையூறுகளை ஏற்படுத்துவதும், நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்து, வழக்கு விசாரணையை அடிக்கடி மாற்றி, காலம் தாழ்த்துவதும் பாதிக்கப்பட்டவர்கள் வேறு பாதையைத் தேர்ந்து எடுப்பதற்கு வழி வகுத்துவிடும் என்பதை எடுத்துரைக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பல்வேறு மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய அமைச்சர்கள் கடந்தகால ஆட்சியில் நடைபெற்ற சீர்கேடுகளைக் களைவோம் என்றும், ஊழல், முறைகேடுகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்கள். மேலும் நெருக்கடியான நிதிநிலைமையில் பல்வேறு சலுகைகளை இந்த நிதிநிலை அறிக்கை வாரி

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2001 செப்டம்பர் 14

வழங்கியிருக்கிறது. பாலைவனத்தில் பயணம் செய்பவர்களுக்கு ஒரு சோலை கிடைத்திருப்பதைப் போல, பாழ்பட்டுப்போன இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையிலும் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஓர் ஆறுதலாக நிதி ஒதுக்கீடுகள் அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை ஒரு பாலைவனச் சோலையாகக் கருதி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது பழிவாங்கும் நடவடிக்கையாக ஒருவர்மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு இருக்கும்போது அவற்றை ஆட்சிக்கு வந்தபிறகு வாபஸ் பெறுவதற்குக்கூட சட்டத்தில் இடம் உள்ளது. அப்படிச் செய்தால்கூட அதில் தவறு இல்லை என்பதை இங்கே சுட்டிக் காண்பித்தார்கள்.

ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள்கூட, கடந்த ஆட்சியாளர்கள், தி.மு.க. ஆட்சியாளர்கள் வேண்டுமென்றே, பழிவாங்கும் நடவடிக்கையாக என் மீது பல வழக்குகளைத் தொடுத்திருக்கிறார்கள், அவற்றையெல்லாம் இந்த அரசு இரத்து செய்தால் என்ன என்ற கேள்வியை இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்ததைப் போலவே, அவருடைய கருத்தை ஆமோதித்து, என்னுடைய கருத்தை இங்கே நான் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

*பிற்பகல் 1-35*

சட்டத்தில் இத்தகைய வழக்குகளை வாபஸ் பெற இடம் உள்ளது என்றாலும்கூட, அதை நான் உணர்ந்திருந்தாலும்கூட, அப்படி நான் செய்ய விரும்பவில்லை. நான் ஆட்சிக்கு வந்தவுடன் நான் செய்த முதல் காரியம், கடந்த ஆட்சிக் காலத்தில் தி.மு.க. அரசு அமைத்த தனி நீதிமன்றங்களுக்கு இன்னும் ஓராண்டுகாலம் பதவிக் காலத்தை நீட்டித்து உத்தரவு போட்டேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்கள் தவறான உள்நோக்கத்தோடு, பழிவாங்கும் நடவடிக்கையாக வழக்குகளை ஜோடித்து என்மீது தொடுத்திருந்தாலும்கூட, நேர்மையான வழியில் நீதிமன்றங்களில் அந்த வழக்குகளைச் சந்தித்து, நான் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக



2001 செப்டம்பர் 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அதேநேரத்தில் எனக்கும் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்பு சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு, அவற்றை விசாரிக்க சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த சர்க்காரியா கமிஷன், திரு. கருணாநிதி பல வழக்குகளில் ஊழல் புரிந்திருக்கிறார் என்று ஓர் அறிக்கையைக் கொடுத்தது. சரியாகச் சொல்ல வேண்டுமானால், சர்க்காரியா கமிஷன் இரண்டு அறிக்கைகளைக் கொடுத்தது. புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு இந்த மாநிலத்தின் முதலமைச்சராக ஆன பிறகு, தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு வரை அவர் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் பலமுறை அவருடைய தலைமையில் அமைச்சரவை கூடி சர்க்காரியா கமிஷன் அறிக்கைகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம்; திரு. கருணாநிதி மீது Criminal வழக்குகள் தொடரலாமா என்பதுபற்றி பலமுறை விவாதிக்கப்பட்டது. ஆனால், அதன்மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல், அமைச்சரவைக் கூட்டங்களின் விவாதங்கள்மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல், புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்து விட்டார்கள். அதன் பிறகு 1989 ஆம் ஆண்டில் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சரானபோது முதல் வேலையாக, அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூடக் கூட்டாமல், சர்க்காரியா கமிஷன் அறிக்கைகள்மீது எந்த மேல்நடவடிக்கையும் தேவையில்லை என்று அவரே உத்தரவு போட்டுவிட்டார் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, திரு. கருணாநிதி அவர்களையும், என்னையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்னுடைய துணிவும், நெஞ்சுறுதியும், நேர்மையான அணுகுமுறையும் எங்கே; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) திரு. கருணாநிதி அவர்களின் கோழைத்தனமான நடவடிக்கை எங்கே என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

[2001 செப்டம்பர் 14

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. *(குறுக்கீடுகள்)* I am not yielding. (Interruption) I am not yielding. (Interruption) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது அவர் கேட்ட வினாவிற்கு நான் விடை அளிக்கிறேன். அமர்ந்து கேட்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am giving the reply.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் withdraw பண்ணினார்கள் என்று சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோப்பின் அடிப்படையிலே முன்னாள் முதலமைச்சர் இட்ட ஆணையினைச் சொல்லியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, மாண்புமிகு நிதியமைச்சர் பதிலுரைக்குப் பிறகு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆணையிட்ட கோப்புகள் இங்கே இருக்கின்றன. கோப்புகள் பேசுகின்றன. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நடந்த உண்மையைச் சொன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரமும் கோபமும் பொத்துக்கொண்டு வருகிறது என்று புரியவில்லை. நான் இங்கே கற்பனையான எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. கோப்புகளிலுள்ள உண்மையைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்தபோது சர்க்காரியா கமிஷன் அறிக்கைகளில் முதன்மையான குற்றவாளியாகச் சுட்டிக்



2001 செப்டம்பர் 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காண்பிக்கப்பட்டிருந்த திரு. கருணாநிதி மீது Criminal வழக்குத் தொடரலாமா என்பது குறித்து பலமுறை அமைச்சரவைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதன்பிறகு 1989-ல் திரு. கருணாநிதி ஆட்சிக்கு வந்தபிறகு அமைச்சரவைக் கூட்டத்தைக்கூடக் கூட்டாமல் 23-11-1989 ஆம் நாள் அன்று அவராகவே, திரு. கருணாநிதியே அந்த சர்க்காரியா கமிஷன் அறிக்கைகளில், பல வழக்குகளில் முதன்மையான குற்றவாளி, Prime accused என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்த திரு. கருணாநிதி அவர்களே, இந்த சர்க்காரியா கமிஷன் அறிக்கைகள்மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்று அவராகவே உத்தரவிட்டு கோப்பில் கையெழுத்திட்டிருக்கிறார் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(கூச்சல்)*

**திரு. பரிதி இளம்வழுதி:** எங்களைப் பதில் சொல்ல விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்மைகளைத்தான் சொல்கிறார். கோப்பிலேயிருக்கிற உண்மையைச் சொல்கிறார். *(கூச்சல்)* நிதியமைச்சர் பதில் சொல்லுங்கள். *(கூச்சல்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் ஆதாரபூர்வமாக குற்றம் சுமத்தப்படுகிறபோது *(கூச்சல்)* கூச்சலிட்டு அவையினுடைய கவனத்தைத் திசை திருப்புவதே அவர்களது அன்றாட நடவடிக்கையாக ஆகிவிட்டது. *(கூச்சல்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. துரைமுருகன்:** எங்களுக்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நிதியமைச்சர் அவர்கள் பதிலுரைக்குப் பிறகு நான் விளக்கமளிக்க அழைக்கிறேன். நிதியமைச்சர் பதில் சொன்னதற்குப் பின்னால் அழைக்கிறேன். *(கூச்சல்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பான நடவடிக்கை மூலம் அவர்களைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்று புரியவில்லை. திரு. கருணாநிதி அப்படி உத்தரவு போட்டார் என்பதை அவர்களால் மறுக்க முடியுமா? *(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பதில் சொல்லுங்கள். (கூச்சல்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் செய்த ஊழல்களை, நிர்வாக முறைகேடுகளைச் சுட்டிக்காட்டுகிறபோதெல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ரத்தம் கொதிக்கிறது. அவையிலிருந்து அவர்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தால் பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லி அதை மெய்யாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு தி.மு.க. தலைவர் கருணாநிதி செயல்படுவதைப் போலவே அவருடைய உறுப்பினர்களும் செயல்படுவதை அவை மன்னிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்)

**திரு. கு. பிச்சாண்டி:** எங்களைப் பதில் சொல்லவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேசியதற்குப் பின்னால் பேசலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்) சர்க்காரியா கமிஷனால் குற்றவாளி என சுட்டிக்காட்டப்பட்ட கருணாநிதி, மாண்புமிகு முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், திரு. கருணாநிதி குற்றவாளி, அவர் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறமாட்டேன் என்று முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கூறக்கூடிய அளவுக்குக் குற்றங்களைப் புரிந்த திரு. கருணாநிதி, குற்றவாளி என சர்க்காரியா கமிஷன் மட்டும் சொல்லவில்லை; C.B.I. investigation-லே ஆதாரம் இருந்த காரணத்தால் அன்று பாரதத்தை ஆண்ட பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள்கூட கருணாநிதி மீது குற்றச்சாட்டுகள் ஆதாரத்தின் அடிப்படையிலே இருக்கிறது என்று சொன்னார். அந்தக் கருணாநிதி கோப்பிலே கையெழுத்திட்டு, ஒரு குற்றவாளியே தன் கோப்பிலே கையெழுத்திட்டு தாம் குற்றமற்றவன் என்று சொல்ல முடியுமா? மீண்டும் வழக்குத் தொடரப்பட்டால் சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகுமே என்ற அச்சத்தின் காரணமாகச் சிறைக்குச் செல்ல அச்சப்பட்ட திரு. கருணாநிதி, குற்றவாளி கருணாநிதி (கூச்சல், குழப்பம்) அவரே கையெழுத்திட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்கிறீர்கள். அவர் பேசி முடிக்கட்டும்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அந்த வழக்கின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்றார். (கூச்சல்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேச வேண்டுமா, விளக்கம் கேட்க வேண்டுமா? (கூச்சல்) உட்காருங்கள். இல்லை, இல்லை, உட்காருங்கள். (கூச்சல்) அனைவரும் உட்காருங்கள். துரைமுருகன், என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ கேளுங்கள். (கூச்சல்) உட்காருங்கள். (கூச்சல்). துரைமுருகன், இந்தப் பக்கம் பாருங்கள், என்னைப் பாருங்கள். (கூச்சல்)

பிற்பகல் 1-45

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனில் புகார் கொடுத்த அன்றைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கருத்துக்கு நீங்கள் விளக்கம் ஏதாவது கேளுங்கள். கோப்பிலே முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் கையெழுத்துப் போட்டு மேல் நடவடிக்கை தேவை இல்லை என்கிற கருத்தினை முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் அதிலே ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆகையால், புகார்கள் கொடுத்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களே அந்த வழக்கில் எந்தவிதமான உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்ற காரணத்தினால்தான்...(குறுக்கீடுகள்) (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம் இருங்கள் நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த வழக்குகளில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று கோப்பிலே எழுதவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சர்க்காரியா கமிஷன் அறிக்கைகள்மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று புரட்சித் தலைவர் அவர்கள் எழுதவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி பலமுறை அமைச்சரவைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. ஆனால் முடிவெடுக்காமலேயே புரட்சித் தலைவர் மறைந்துவிட்டார் என்பதுதான் உண்மை. ஆனால் இங்கே திரு. துரைமுருகன் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் பிரதான குற்றவாளியான திரு. கருணாநிதி அவர்களே கோப்பில் தன்மீது

நடவடிக்கை வேண்டாம் என்று கையெழுத்திட்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இதைப்பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலுரையை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக துரைமுருகன் அவர்களைச் சந்தேகம் கேட்பதற்கு நான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) சந்தேகம் கேட்டார். முதலமைச்சரும் விளக்கம் சொன்னார். பிரச்சினை முடிந்து விட்டது. (குறுக்கீடுகள்) நிதியமைச்சருடைய பதிலுரை. (குறுக்கீடுகள்) ஆள் ஆளுக்கு நீங்கள் நாட்டாமை செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் சொல்வதைத்தான் கேட்க முடியும். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காக்கக்கூடிய வகையில் தி.மு.க. உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு நீங்கள் உணர்த்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நாள்தோறும் அவர்கள் செய்யும் குற்றங்களை எல்லாம், தவறுகளை எல்லாம்..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சொல்லியாகிவிட்டது. நீங்கள் கேட்ட சந்தேகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடுகள்) (கூச்சல்) நிதியமைச்சரை பதில் சொல்லவிடுங்கள். எல்லோரும் சேர்ந்து சத்தம் போட்டால் என்ன பொருள்? (குறுக்கீடுகள்) என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ, கேட்க வேண்டிய விளக்கத்தை உங்களைக் கேட்க நான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் இந்த சர்க்காரியா கமிஷனிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் சொன்னதாக நீங்கள் குறிப்பிட்டீர்கள். அப்படிச் சொல்லவில்லை, அவர் அந்தக் கோப்பிலே எதையும் எழுதவில்லை. அதிலே பிரதான குற்றவாளியாக இருக்கின்றவரே சர்க்காரியா கமிஷனிலே மேல்



நடவடிக்கைத் தேவையில்லை என்று கோப்பிலே எழுதியிருக்கிறார் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (குறுக்கீடுகள்) அதிலே உண்மையா, இல்லையா என்று ஏதாவது சந்தேகம் இருந்தால் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 13 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார். அப்போது சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன்தான். அவர்கள் எடுக்காததற்குக் காரணம் அதில் ஒன்றுமில்லை. ஆகையால் எடுக்கவில்லை. அதுதான் பிரச்சினை. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம், நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கருணாநிதி 1989-லே போட்ட உத்தரவை நான் ஆட்சிக்கு வந்த பிறகு அமைச்சரவையைக் கூட்டி இரத்து செய்திருக்கிறேன். ஆகவே, இனிமேல் திரு. கருணாநிதி மீது வழக்குத் தொடர எல்லா வழியும் இருக்கிறது. அந்த சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் ஏதாவது இருக்கிறதா, இல்லையா? வழக்குத் தொடர முடியுமா, இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மணி அவர்கள் (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள்......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்திக்கத் தயார் என்று சொல்லிவிட்டார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடுகள்)

[2001 செப்டம்பர் 14

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, துரைமுருகன் இருங்கள், இருங்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இருங்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Hon. Speaker has not permitted you.

*பிற்பகல் 1-50*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் சர்க்காரியா கமிஷன் குறித்து நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறார்கள். அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதைத் தாங்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடவடிக்கை எடுப்பதற்கு வழியிருக்கிறது என்று முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள். தாங்கும் என்று துரைமுருகன் சொல்லிவிட்டார். பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன வழக்கு தொடரப்பட்டாலும் அதை தி.மு.க. தாங்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே தெரிவித்தார் இவ்வளவு தாங்கும் சக்தியிருக்கின்ற தி.மு.க. தலைவர் ஏன் அந்த வழக்குகளை முதலில் இரத்து செய்தார் என்பதைத் தெரிவிப்பாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். அந்தக் கோப்பில், அந்த வழக்கில் எந்தவித ஆதாரமும் இல்லாத ஒரு...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் என்ன சொல்கிறார் என்பது தெரிகிறது. (குறுக்கீடுகள்)



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் இல்லை. முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வழிவகையிருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் தாங்கும் என்று சொல்லிவிட்டீர்கள். பிரச்சினை முடிந்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாத நிலையில் அதை இரத்து செய்தார் என்று சொல்ல வருகிறார். ஆதாரம் இல்லையென்றால் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்வது நீதிமன்றம். ஒரு குற்றவாளியே நீதிபதியாக மாறி, குற்றம்புரிந்த திரு. கருணாநிதியே, கோப்பிலே கையெழுத்திட்டு வழக்குகளை இரத்து செய்வது முறையாகாது என்பதுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் இனிமேல் அதிலே நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகையிருக்கிறது, பொறுத்திருந்து பாருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள், நாங்கள் தாங்குவோம் என்று சொல்லிவிட்டீர்கள். இதற்கு முன்னாலே தாங்க முடியாவிட்டாலும் இனிமேல் தாங்குவோம் என்கிற முடிவுக்கு நீங்கள் வந்துவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இனிமேல் என்ன பிரச்சினை இருக்கிறது? நிதியமைச்சர் அவர்கள் சொல்லுங்கள். நிதியமைச்சர் பதிலுரை. அவ்வளவுதான் பிரச்சினை முடிந்தது.

*(உறுப்பினர் திரு. கோ.சி. மணி மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பார்த்து கையை உயர்த்தி ஏதோ பேசினார்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் பேரவைத் தலைவரை நோக்கி கையை உயர்த்தி, உயர்த்திப் பேச வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதுகூட வேண்டாம், நன்றாக இருக்காது.

It is not decent. It is absolutely indecent, against the procedure to be followed in the House. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) துரைமுருகன் பதில் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துகளை இந்தச் சட்டமுன்வடிவின் மீது எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலே மிக முக்கியமாக பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் (குறுக்கீடுகள்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** கோழைத்தனமான என்ற வார்த்தையை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழைத்தனமான என்ற வார்த்தை. It is not an unparliamentary word. That can be allowed to continue. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோழைத்தனமானது என்பது சட்டமன்றக் குறிப்பேட்டில் ஏற்றக்கூடாத வார்த்தை ஒன்றும் இல்லை. தவறான வார்த்தையல்ல. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது எத்தகைய வழக்குகள் என்றாலும் தாங்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். தாங்க முடியாது என்ற மனநிலை முன்னாள் முதலமைச்சருக்கு இருந்த காரணத்தால், அவர் கோழையாக இருந்த காரணத்தால்தான், கோப்பிலே கையெழுத்திட்டு அன்று வழக்கை இரத்து செய்தார். *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதனை அவை உணர வேண்டும். *(குறுக்கீடுகள்)* நான் என்ன சொல்கிறேன் என்று கவனியுங்கள் சார். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் துரைமுருகன் may kindly listen to my speech.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய *(குறுக்கீடுகள்)* பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் நான் பேசுகிறேன். கடைசி நாள். ஒரு cordial ஆன relationship உடன்தான் இந்தக் கடைசி நாளில் பிரிய வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் இன்றைக்கு இந்த மன்றத்தில் பேசக்கூடாத, உச்சரிக்கக்கூடாத பல வார்த்தைகளை உச்சரித்த காரணத்தாலும், எங்களுக்குப் போதிய வாய்ப்பு—அங்கொரு நண்பர் திரும்பச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறபோது—அளிக்கப்படாத அசம்பாவித காரணத்தாலும், அதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது. *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*





*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். உட்காருங்கள், உட்காருங்கள். அதாவது, போதிய வாய்ப்பு, அவகாசமோ அவர்களுக்குப் பதில் சொல்ல அளிக்கப்படவில்லை என்ற காரணம் சொல்லியே பல நாட்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். இது பேரவை சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தாலே நான் அதற்கு விளக்கம் சொல்கிற நிலைமை வருகிறது. அவர்களுடைய கட்சியினுடைய தலைவர்கூடப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் வாளோடு போராடுவதைப் போலவும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்கள் வாளை உறையிலே போட்டுவிட்டு சண்டைக்கு வாருங்கள் என்று கூப்பிடுவது போலவும் அவர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். இது அரசியல் ரீதியான பிரச்சினை என்றால் நான் பதில் சொல்லப் போவதில்லை. நான் பேரவைத் தலைவர். இது பேரவை சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தாலே நான் சொல்கிறேன். வாளை உறையிலே போட்டுவிட்டு நீங்கள் சண்டைக்கு வாருங்கள் என்று யாரும் கூப்பிடவில்லை. இந்தப் பேரவையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் இல்லை; பொறுப்புள்ள பல எதிர்க்கட்சியினர் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்குப் பிரச்சினை எழுந்ததே திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய பேச்சை வைத்துத்தான். அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள். கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இருக்கின்றன. நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணியிலேகூட அவர்கள் இல்லை; இருந்தாலும் கூட எவ்வளவு கண்ணியமாக, நாகரிகமாக, தங்களுடைய கருத்துகளைச் சொல்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்கிறீர்கள். வாளைப் உறையிலே போட்டுக்கொண்டு வாருங்கள் என்று நான் யாரையும் சொல்லவில்லை. இவர்கள் போருக்கு வருகிறபோது, வாளை பிடிக்கத் தெரியாமல் பிடித்தால், அவர்களுடைய கையிலேதான் காயம்படும். அப்படித்தான் அவர்கள் காயத்தை உண்டாக்கிக் கொள்கிறார்களே தவிர, நான் எத்தனை முறை, முதலமைச்சர் அவர்கள் பேசியதற்கு, திரு. துரைமுருகன் அவர்களை விளக்கம் சொல்வதற்கு, நானே, அழைத்திருக்கிறேன். ஒரு கட்சியின் சார்பாக ஒருவரைத்தானே கூப்பிடமுடியும். அவர் விளக்கம் கேட்டு, அந்த விளக்கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிட்டார்கள். இவ்வளவுக்கும் பிறகு

அவர்கள் போகிறார்கள் என்றால் உண்மை சுடும் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. நிதி அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) திரு. கே.சி. கருணாகரன் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் வேறு ஒன்றையும் புதிதாகச் சொல்லவில்லை. கலைஞருடைய கவிதையைச் சொன்னீர்கள். இவர்கள் நடத்தியது, குயிலின் பாட்டு என்றும், இவர்களை எதிர்ப்பது கோட்டானின் கூச்சல் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் தன்னுடைய கவிதையில் இன்னொன்றையும் சொல்கிறார். மயிலின் ஆட்டமாம் நீங்கள் எதிர்ப்பது மந்தியின் நோக்கம் என்கிற மாதிரி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதுமே சொற்குற்றம், பொருள் குற்றத்தோடு கவிதை எழுதுவதுதான் அவருக்கு வழக்கம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதை விட்டுவிட்டீர்களே என்பதற்காக, அதை ஞாபகப்படுத்துவதற்காகத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, டாக்டர் தே. குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சண்டை போட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள். அவர்கள் இருந்திருந்தால் நான்கூடக் கேட்கவேண்டுமென்று ஆசைப்பட்டேன். கடந்த முறை 1991-லும் இதே தமிழக முதல்வர் அவர்கள் முதல்வராக வருகிறபோது, அன்றைக்கு ஒரு நபராக இருந்து சபைக்கு வரவில்லை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள். இப்போதும் அதேபோல, இவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள், அவர் தேர்வு செய்யப்பட்டும் சபைக்கு வரவில்லை. ஆக, முதலமைச்சரைக் கண்டு, முன்னாள் முதலமைச்சர் பயப்பட்டு சபைக்கு வராமல் இருப்பது வீரத்தனமா, கோழைத்தனமா, என்பது எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு அமளிக்கும் காரணம்; முதலமைச்சர் பதவி என்பதே ஒரு நீதிபதி பதவியைப் போன்ற பதவி. பல ஆணைகளை அவ்வப்போது





இடப்படவேண்டிய நிலையிலே உள்ளவர் முதலமைச்சர். ஆனால், சர்க்காரியா கமிஷனால் மட்டும் குற்றவாளி என்று சொல்லப்படவில்லை. மைய அரசு அன்றைக்கு அமைத்திட்ட C.B.I. Investigating Agency கூட வழக்குத் தொடர்ந்தது Aerial Spraying, Wheat scandal ஆகிய இரண்டு வழக்குகளில். ஏதோ சர்க்காரியா கமிஷன் தீர்ப்பு ஒன்று என்று மட்டுமே கூறுவது சரியல்ல.

Independent findings of Sarkaria Commission, CBI மைய அரசினுடைய அமைப்பு தனியாக புலனாய்வு செய்து தனியாக வழக்குகளை அன்றைய முதலமைச்சர் கருணாநிதி மீது பூச்சி மருந்து ஊழல், கோதுமை பேர ஊழலிலும் பல கோடி கொள்ளையடித்து விட்டார் என்ற ஆதாரத்தின் அடிப்படையில் தொடர்ந்தது. அப்போதுதான் அவர்களுக்கு அச்சம் அதிக அளவு வந்துவிட்டது.

Sarkaria Commission was only a fact finding authority. ஆனால், C.B.I. தொடர்ந்த வழக்கு, நீதிமன்றத்திலே குற்றவாளியாக கருணாநிதி அவர்களை நிறுத்த வேண்டிய வழக்காக இருந்தது. அப்போதுதான், அதன் ஆதாரங்கள் documentary evidence, oral evidence and clinching evidence அதிலிருந்து தப்பிக்க முடியாது என்ற நிலை வந்தபோதுதான், அன்றைய முதலமைச்சர், மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களிடம் சென்று வழக்கினை வாபஸ் பெறவேண்டுமென்று கெஞ்சோகெஞ்சு எனக் கெஞ்சினார். ஆனால், நீதிக்கும், நேர்மைக்கும் சொத்தாக விளங்கிய அன்றைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் அந்த வழக்கினை சாந்தி பூஷன் அவர்களே நடத்தியபோதிலும்கூட, எல்லாவற்றையும் படித்துப் பார்த்துவிட்டு, ஆதாரங்கள் இருக்கின்றன, Clinching evidence இருக்கின்றன, இதை நாம் வாபஸ் பெறக்கூடாது என்றும், நீதிமன்றத்தைத்தான் திரு. கருணாநிதி சந்திக்க வேண்டும் என்றும் அன்று ஆணையிட்டு விட்டார்கள். அப்படிப்பட்ட ஆதாரமுள்ள வழக்கு என்ற காரணத்தால்தான், மீண்டும் இதை இப்படியே விட்டு விட்டால், இந்த வழக்கை இரத்து செய்யாமல் விட்டுவிட்டால், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்துவிடுவார், ஆட்சிக்கு வந்த பிறகு ஆபத்து வந்துவிடும், சிறைச்சாலையிலே பல ஆண்டுகளைக் கழிக்க வேண்டிய வேதனை வந்து விடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் முதலமைச்சர் பதவியிலே இருக்கின்ற அவர் Cabinet meeting-ஐ க்கூடக் கூட்டாமல் அந்த வழக்கினை வாபஸ் பெறவேண்டும் என்று ஆணையிட்டார்.

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 14

*பிற்பகல் 2-00*

அவர் குற்றவாளி. ஒரு குற்றவாளியே, தான் செய்த குற்றத்திற்கு, தனக்குத்தானே நீதிபதியாக மாறி விடுதலை செய்து கொள்வது என்பது அரசியல் நாகரிகத்திலே எத்தகைய கேலிக்கூத்து என்பதைப் பற்றிக்கூட கொஞ்சமும் கவலைப்படாமல், வெட்கப்படாமல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், எப்படியும் தப்பித்தால் போதும் என்ற அச்சத்தின் காரணமாக, கோழைத்தனத்தின் காரணமாக அந்த வழக்குகளை வாபஸ் பெற்றார் என்பதுதான் உண்மை. அந்த அடிப்படையில்தான் இத்தனை பிரச்சினைகள். இந்த உண்மையைத் தாங்குகிற சக்தி தி.மு.க. தலைவருக்கு மட்டுமல்ல, தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இல்லாத காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அஞ்சி ஓடிவிட்டார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது பேசுகின்றபோது பல கருத்துகளைச் சொன்னார்கள். VAT என்பதனுடைய விளக்கத்தைப் பற்றி மாண்புமிகு பொன்முடி அவர்கள் பேசுகிறபோது சொன்னார். ஒரு மரத்தை வாங்குகிறார்கள். மரம் மேசையாக மாறுகிறது. அப்போதுதான் அது VAT என்று பொருள் என்று சொன்னார். இது தவறு. மரம் is a product by itself. மேசையாக மாறுகிறபோது That gets a total different transformation. அது வேறு ஒரு பொருளாக மாறிவிடுகிறது. அதற்குத் தனியாக வரிவிதிப்பு இப்போது Value Added Tax என்று அவர்கள், மைய அரசு தற்போது கொண்டு வருவது, வேறு அணுகுமுறையிலே அவர்கள் கொண்டு வருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட பொருள், ஒரு மேசையையே எடுத்துக்கொண்டால், அந்த மேசையை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலையில் ஆயிரம் ரூபாய் என்று இருந்தால் Whole seller-க்கு ஒரு ரேட்டாக நியமிக்கப்படுகிறது. ஸ்டாக்கிஸ்ட்டுக்கு ஒரு ரேட்டாக நியமிக்கப்படுகிறது. அவர்கள் வாங்குகிற அந்த ஏஜென்சி கமிஷனை 20 பர்சன்ட், 30 பர்சன்ட் என்று அதிகப்படுத்துகிறபோது, அந்த 20 பர்சன்ட், 30 பர்சன்ட் ஏஜென்சி கமிஷன் அல்லது கமிஷன் அல்லது சர்வீஸ் சார்ஜ், அது எல்லாம்கூட, அது Value Increase எனக் கருதி அந்தப் பணத்திற்கு tax போடுவதுதான் Value Added Tax. அந்த முறையிலே மைய அரசு தற்போது அதை பல கட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. அப்படி வருகிறபோது பாதிப்பு அதிகமாக வருகிறது. The burden will be passed on to the consumers. மைய அரசைப் பொறுத்தவரைக்கும், மாநில அரசுக்கு ஓரளவிற்கு Sales-tax வந்தாலும்கூட பல மடங்கு அதிகமாக மைய அரசுக்கு Income



2001 செப்டம்பர் 14] [திரு. சி. பொன்னையன்]

Tax கிடைக்கும் என்ற நோக்கோடுதான் மறைமுகமாக இந்த VAT திட்டத்தை, இந்தியத் துணைக் கண்டத்திலே தற்போது கொண்டு வருகிறார்கள். Consumer-களுக்கு இது பாதிப்பை உருவாக்கும் என்பதுபற்றி மைய அரசு கவலைப்படவில்லை. ஆனால், மாநில அரசு கவலைப்பட்டாக வேண்டும். மக்களை நேரடியாகச் சந்திக்கின்றவர்கள் நாம்தான். மைய அரசு மக்களை நேரடியாகச் சந்திப்பது இல்லை. இந்த நிலையிலே அவர்கள் மாநில அரசினுடைய கோரிக்கையை ஏற்காமல், அந்தத் திட்டத்தைக் கட்டாயமாக மாநிலங்களின் மீது திணிக்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அத்தகைய நடவடிக்கைக்கு நாங்கள் உடன்படவில்லை. ஆனால், முன்னால் ஆண்ட தி.மு.க. அரசு அதற்கு ஏற்கெனவே ஒப்புதல் தந்துவிட்டது என்பதனை அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது மற்றும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். Tender பற்றிச் சொன்னார். Tender Schedule தரப்படுவதில்லை என்று சொன்னார். உண்மைக்கு மாறான ஒரு தகவலை அவைக்கு அவர் தந்திருக்கிறார். Tender-cum-auction என்ற மாறான ஒரு முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்து, அதிலே Tender தராமலேயே தமிழகத்திலே இருக்கிற எண்ணற்ற மணல் குவாரிகளைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, கட்சிக்காரருக்குக் கொடுத்து வரலாற்றைப் படைத்ததே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-05*

அதுமட்டுமல்ல. அந்த Tender-cum-auction, அந்த டெண்டர் முறையை, Open tender முறையைக் கொண்டு வந்தார்கள். அதற்காக Tender Transparency Act என்ற சட்டத்தையும் கொண்டு வந்தார். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதிலே, மாநிலத்திலே இருக்கிற சிறு தொழில்கள், குறுந்தொழில்கள், அவற்றில் உற்பத்தியாகின்ற பொருட்களை வாங்க முடியாத ஒரு நிலையையும் உருவாக்கிவிட்டு, வெளிமாநிலங்களிலே இருக்கின்றவர்கள் அதிலே பங்கேற்கக்கூடிய ஒரு வாய்ப்புத் தந்தார்கள். அப்படி வெளிமாநிலங்களில் இருக்கின்றவர்களை அந்த டெண்டரில் பங்கேற்க வாய்ப்புத் தந்தபோது, அங்கேகூட ஒரு விஞ்ஞான ரீதியான முறைகேட்டை ஊழல் முறையை நடைமுறைப்படுத்தினார்கள். எப்படிக் கொண்டு வந்தார்கள் என்றால் the participating tenderer should have a turnover of 300 crores, 400 crores or 1,000 crores என்றெல்லாம்

அவர்களினுடைய ஒட்டுமொத்த ஆண்டு வருமானத்தை அதிகப்படியான அளவிற்கு நிர்ணயித்து, தமிழகத்திலே இருக்கிற எந்தவொரு கம்பெனியும் Tender-லே participate பண்ண முடியாத அளவிற்கு ஒரு தடைக்கல்லை மறைமுகமாகக் கொண்டு வந்தார்கள். இங்கே இருக்கிற East Coast Construction என்ற கம்பெனி பல tender-களில் பங்கேற்கும் அவர்களாலேயே— தமிழகத்திலே இருக்கிற காண்ட்ராக்டர்களிலேயே, அமைப்புக்களிலேயே மிகப் பெரிய நிறுவனம் East Coast Construction என்ற நிறுவனம். அவர்கள்கூட— அதிலே பங்கேற்க இயலக் கூடாது என்று ஒரு விஞ்ஞான ரீதியிலான ஊழல் திட்டத்தைக் கொண்டு வந்து L&T நிறுவனமும், கோயல் என்ற நிறுவனமும் அதுபோன்ற வட புலத்து நிறுவனங்களெல்லாம் பங்கேற்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய annual turn-over என்ன என்பதனை முன்கூட்டியே கேட்டறிந்து அதையே Tender Condition-ஆகப் போட்டு, அப்படி Tender-களை விட்டு தமிழகத்திலே இருக்கிற பெரும்பான்மையான 50 கோடி, 100 கோடி, 200 கோடி என வருகிற டெண்டர்கள் எல்லாம் மைய அரசிலே இருக்கிற Commerce and Industries Minister-ஆக இருக்கிற திரு. முரசொலி மாறன் அவர்களுடைய நெருக்கத்தில் இருக்கின்ற L & T நிறுவனத்திற்கும் கோயல் நிறுவனத்திற்குமே—பல்லாயிரக்கணக்கான கோடி Tender-கள் வழங்கப்பட்டன என்ற குற்றச்சாட்டை அவை உணர வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதிலும்கூட இன்னொன்றையும் செய்தார்கள். அவர்களுக்கு எப்படிப்பட்ட இலாபத்தைத் தந்தார்கள் என்றால், பொன்முடி அவர்கள் இருந்திருக்க வேண்டும். இதை அவர் கேட்க வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் சென்று விட்டார். தமிழகத்திலே ஒரு Tender-ஐ விடுகிறபோது, உதாரணமாக TWAD Board-லே tender-ஐ விட்டிருக்கிறார்கள். அதற்காக Agriculture No.77/2000-1, dated 3-11-2000 என்ற தேதியிலே Tender விடப்படுகிறது. அதிலே, தமிழகத்தைச் சேர்ந்த சின்னச் சின்ன காண்ட்ராக்டர்களுக்கு வேலையைப் பிரித்துத் தருகிறார்கள். அப்போதே Agriculture WER No. CEWR No.11/2000-2001, dt.4-8-2000 என்பதிலே டெண்டரை விடுகிறார்கள். ஆங்கே Turn-key project என்ற ஒரு முறையைக் கொண்டு வந்தார்கள். Turn-key project என்ற ஒரு முறை ஒரு பஞ்சாயத்து யூனியன், இரண்டு பஞ்சாயத்து யூனியன், மூன்று பஞ்சாயத்து யூனியன் அல்லது 4,5, பஞ்சாயத்து யூனியன்களையெல்லாம் ஒன்று சேர்த்து அந்த Tender Value-ஐ 5 கோடி, 10 கோடி என்றிருப்பதை 100 கோடி, 200 கோடி, 300 கோடி ரூபாய் என உயர்த்தி அந்த வடபுலத்து





மாநிலங்களுக்கு மைய அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கு வேண்டிய அந்த நிறுவனங்களே பெறவேண்டுமென்ற உள்நோக்கோடு அந்த டெண்டருக்கான வழிவகைகளைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவந்தபோது அவைக்கு இந்த முக்கிய தகவலைத் தருகிறேன். Soft disintegrated rock, laterite soft rock or congur not requiring blasting என்று ஒரு தலைப்பு. குடிநீருக்காகக் குழாய்களைப் பதிக்கிறபோது அந்த பூமி, அதிலுள்ள மண் soft sand என்ற முறையிலே அல்லது மிருதுவான மண்ணா இருக்கின்ற பட்சத்திலே ஒரு கியூபிக் மீட்டருக்கு 220 ரூபாய் என அந்த நிறுவனத்திற்கு அந்த வரையறையைக் கொண்டு வந்தார்கள். அந்த L & T-க்கு வேண்டிய நிறுவனத்திற்கு அந்த ஒப்பந்தத்தைத் தருகிறார்கள். அதே நேரத்தில் லோக்கல் காண்ட்ராக்டர்கள் தமிழகத்தைச் சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள், அவர்கள் போட்ட அந்தச் சிறு ஒப்பந்தங்களுக்கு 82.50 காசுகள் கியூபிக் மீட்டருக்கு என்று தருகிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களுக்கு ஒரே விதமான பணிக்கு 82 ரூபாய் 50 காசு என்று நிர்ணயம் செய்த தி.மு.க. அரசு L & T. நிறுவனத்திற்கு திரு. முரசொலி மாறனுக்கு வேண்டிய நிறுவனத்திற்கு 220 ரூபாய் கியூபிக் மீட்டர் என்று நிர்ணயித்து பல கோடி ரூபாய் கொள்ளையடிப்பதற்கு அன்று வழிவகை செய்தார்கள்.

அதைப்போலவே ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். Pipe; குடிநீர்க் குழாய்களைப் பதிக்கிறபோது ஒரு குழாயை இன்னொரு குழாயோடு இணைக்க வேண்டும், பூமிக்கு அடியில் போட்டு. தமிழகத்தைச் சேர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்காரர்களுக்கு 5.90 காசு ஒரு மீட்டருக்கு என்று தந்தார்கள். ஆனால், அதே L&T, கோயல் போன்ற வடபுலத்து திரு. முரசொலி மாறனுக்கு நெருங்கிய, வேண்டிய நிறுவனத்திற்கு 39 ரூபாய் ஒரு மீட்டருக்கு எனப் போட்டார்கள். கிட்டத்தட்ட 7 மடங்கு அதிகமாகப் போட்டு மக்கள் வரிப்பணத்தை மறைமுகமாக, இதைத்தான் நாங்கள் விஞ்ஞான ரீதியிலான ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருபுறம் யாருக்கும் தெரியாத அளவிற்கு இங்கேயிருக்கிற தமிழகத்து ஒப்பந்தக்காரர்களுக்கு 5 மடங்கு குறைவாக, ஆனால் ஆதாயம் இருக்கின்ற காரணத்தினால் 5.9 என்ற முறையிலே தமிழகத்து ஒப்பந்தக்காரர்கள் அந்த இனத்தைப் போடுகிறபோது, அதிலேயே அவர்களுக்கு 10 பர்சன்ட், 20 பர்சன்ட் இலாபம் இருக்கும். அதற்குப் பதிலாக 39 ரூபாய் என 7 மடங்கு அந்தத் தொகையை வடபுலத்துக்காரர்களுக்கு அதிகமாக சலுகை

காட்டியதன் நோக்கமென்ன? மீதமுள்ள பணத்தையெல்லாம் குறுக்கு வழியிலே விஞ்ஞான ரீதியான ஊழலை மேற்கொண்டு, கொள்ளையடிப்பதற்குத்தானே தி.மு.க. அரசு, திரு. கருணாநிதி, முந்தைய அரசிலே இத்தகைய ஊழல் முறைகளை மேற்கொண்டார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு உதாரணமாக இதுபோன்ற பல புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. Tender என்ற முறையை அவர்கள் கொண்டு வந்தார்கள். Tender என்ற முறையைக் கொண்டு வந்தது பெருமையான ஒன்று என்று மாண்புமிகு பொன்முடி அவர்கள் தெரிவித்தார். அந்த Tender என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, விஞ்ஞான ரீதியாக, Turn over limit-ஐ fix செய்து Turn-key project என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அந்த ஒப்பந்தக்காரர் L&T நிறுவனமே அந்தக் காண்ட்ராக்ட் வேலைக்கு வேண்டிய எல்லா உபகரணங்களையும், இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து எங்கு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற ஆணையும் இட்டார்கள். அப்படி இட்டு, அரசுக்கு கடந்த 5 ஆண்டு காலத்தில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தி முறைகேடுகளில் ஈடுபட்டு முந்தைய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுடைய அரசு பலகோடி ரூபாய்களைக் கொள்ளையடித்தது என்பதற்கு ஆதாரமாகத்தான் இந்த உதாரணத்தை நான் அவைக்கு தற்போது படித்துக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-10*

அதைப்போலவே. வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கியதைப் பற்றி மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் இன்று காலையில் அறிவித்ததைப்பற்றி அவர் கூறினார். வீட்டுவசதித் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு செல்வராஜ் அவர்கள் பேசுகிறபோது, மிகத் தெளிவாகச் சொன்னார். விலைகுறைவு என்று சொல்லவில்லை. அவர்கள், ஏற்கெனவே தமிழகத்தில், சென்னையில் வீடு வைத்துக்கொண்டிருக்கின்ற வசதி படைத்தவர்களுக்கு, விதிமுறையை மீறி, வேண்டியவர்கள் என்கிற காரணத்திற்காக முறைகேடாக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, வீடுகளை ஒதுக்கினார் என்பதனைத்தான் அவர் ஆதாரத்தோடு சுட்டிக்காட்டினார். உடனே, பொன்முடி அவர்கள், மாண்புமிகு தம்பிதுரை அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது, எனக்கும் ஒதுக்கப்பட்டது என்ற தவறான தகவல்களைச் சொன்னார்கள். எந்தக் காலத்திலுமே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு





முன்னாலேயே அண்ணா நகரிலே சொந்தமாக மருத்துவமனையும், சொந்தமாக வீடும் எனக்கு இருந்தது அண்மையிலே அரசியலுக்கு வந்த பொன்முடி அவர்களுக்குப் புரியாதது ஒன்றும் ஆச்சரியமல்ல என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு தம்பிதுரை அவர்களுக்குக்கூட மருத்துவமனைகளுக்கு, தனியார் துறைகளுக்கு உற்சாகம் தர வேண்டும் என்ற நோக்கோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு முடிவினை எடுத்தார்கள். அந்த அடிப்படையில், ஏற்கெனவே வீடு உள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டாம். பணக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டாம், Commercial Plot என்று இருப்பதை மருத்துவமனைகள், தனியார் துறையிடம் அதிகம் வரவேண்டும். அரசு மருத்துவமனைகள் போதாது என்ற நிலை இருக்கிற காரணத்தால், கொடுக்க வேண்டும் என்ற முறையிலே மாண்புமிகு தம்பிதுரை அவர்களுடைய மனைவிக்கு மட்டுமல்ல, மருத்துவமனை தொடங்குவதற்கு முன்வந்த பலருக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்று இடத்தை ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், காழ்ப்புணர்ச்சியினுடைய உறைவிடமாக இருக்கிற காரணத்தினால், பழிவாங்கும் உணர்வோடு அவர் செயல்பட்ட காரணத்தால், பலபேருக்கு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் ஒதுக்கப்பட் தையெல்லாம் விட்டுவிட்டு, பொறாமையின் காரணமாக, ** அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த வீட்டுமனையை மட்டும், மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்ட அந்த மனையை, அந்த ஆணையை இரத்து செய்தார். உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். உயர்நீதிமன்றம் அதை ஆய்ந்து, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அப்படி இரத்து செய்தது தவறு என்பதை உணர்ந்த காரணத்தால்தான் அதற்குத் தடையாணை வழங்கி இருக்கிறது என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, தரிசு நில மேம்பாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தனியார்களுக்கு Land Reforms Act-ஐத் தளர்த்தி சலுகை செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்குத் தனது நன்றியினைத் தெ ந்தார்கள். ஆனால், தொழிற்சாலைகளுக்காக, Fixation of ceiling for i[illegible]trial purpose என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 14

இருக்கின்ற அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஒரு வேளை பணக்காரர்கள் எல்லாம், விவசாய நிலத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ என்ற அச்சத்தை வெளியிட்டார். அந்த Fixation of Land Ceiling for Industrial purpose is always subject to the provisions of Agricultural Land Ceiling Act என்பதனை மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய அச்சம் உங்களுக்கு வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இட்டிருக்கிற ஆணையை இந்த அரசு நடைமுறைப்படுத்தும் என்பதனை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது ஒட்டுமொத்தமாக வருவாய் குறைவாக இருக்கிற நிலையில் செலவினங்கள் அதிகமாக இருக்கின்ற நிலையில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொருளாதாரச் செம்மையை நாம் எய்திட முடியும் என்பதைப்பற்றிப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை ஏற்கெனவே தீட்டியிருப்பதைப்பற்றி நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் Gross State Domestic Product-ஐப் பொறுத்தவரைக்கும், மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த பொருளாதார வருமானத்தை, மிகைப்படுத்த வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அக்கறையோடு இருக்கிறார்கள். அதற்காக 80 சதவீதம் மக்கள் வாழ்கிற கிராமப்புறத்தில் முதலிலே பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும்; ஆங்கு தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்ற மக்கள் வாழ்கிற பகுதியில் பொருளாதாரச் செம்மை உருவாக்கப்பட வேண்டும்; ஆங்கிருக்கின்ற Economically weaker sections— பொருளாதாரத்தினுடைய அடிமட்டத்திலே இருக்கின்ற நலிந்த பிரிவு மக்களுடைய வருமானம்—உயர வேண்டுமென்ற நோக்கோடுதான், Water-shed management, Rain-water harvesting தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களையெல்லாம் ஒருபுறம் கொண்டு வந்து கிராமப்புற பொருளாதாரத்தை முன்னேற்ற திட்டத்தைத் தீட்டி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-15*

அடுத்தகட்டமாக Small-Scale Industries, Cottage Industries, Tiny Industries இப்படிப்பட்ட தொழில் துறைகளை முன்னுக்குக் கொண்டு வருவதன் மூலமாக பொருளாதாரச் செம்மையை உருவாக்க முடியும்;



2001 செப்டம்பர் 14] [திரு. சி. பொன்னையன்]

வருமானத்தைப் பெருக்க முடியும்; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்; Gross State Domestic Product என்று சொல்லக்கூடிய மாநிலத்தின் ஒட்டுமொத்த வருமானமும் மிகைப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கோடுதான், தி.மு.க. ஆட்சியிலே இந்தத் தொழில் நலிவுக்குக் காரணமாக, தங்களுடைய தனிப்பட்ட ஆதாயத்துக்குப் பலனாக அவர்கள் கொண்டு வந்த, அரசாணை 75-ஐ மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இரத்து செய்தார்கள். அப்படி இரத்து செய்துவிட்டு, தற்போது தமிழகத்திலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான சிறுதொழிற்சாலைகள், பல்லாயிரக்கணக்கான குறுந்தொழிற்சாலைகள், குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு எல்லாம் Price preference and Purchase preference என்ற சலுகைகளைத் தந்து, அப்படி சிறு, குறு தொழில்களை ஊக்குவிக்கின்றபோது, பொருளாதாரம் ஒட்டுமொத்தமாக வளரக்கூடிய வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். Medium scale industries, Large-scale industries; they too contribute commendably for the economic development of the State என்ற அடிப்படையிலே நலிந்த தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும், நலிந்த தொழிற்சாலைகள் நல்ல நிலைக்கு வருவதற்கு அவர்களுக்கு Technology upgradation guidance என்ற முறையிலும், Cost Management, Material Management, Inventory Management போன்ற அணுகுமுறைகளை மேற்கொண்டு, அந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் புதுப்பித்து, அவை நல்ல நிலைக்கு வர, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்ட, ஒட்டுமொத்தமாக மாநில வருமானம் மிக, என்னென்ன ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தேவையோ, அவற்றையெல்லாம் எடுக்க வேண்டுமென்ற ஆணையை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இட்டிருக்கிறார்கள் என்பதனை நான் அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, சட்டக் கல்லூரிகளையெல்லாம் தனியார்மயமாக்கக்கூடிய ஒரு கொள்கை முடிவை அரசு எடுத்துவிட்ட காரணத்தால், சட்டக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதனை எடுத்துச் சொன்னார்கள். அது தவறான தகவல். இருக்கின்ற சட்டக் கல்லூரி எதையுமே தனியாரிடம் விட வேண்டுமென்ற கொள்கை அரசிடம் அறவே இல்லை என்பதை அவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் அதைத் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு ஜி.கே. மணி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 14

மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது பல்வேறு அரிய கருத்துகளை அவையிலே எடுத்துவைத்தார்கள். குறிப்பாக, பருத்தி, கரும்பு, கோதுமை, முந்திரி, தென்னை போன்ற பொருட்களுக்கு விலைவீழ்ச்சி ஏற்பட்டுவிட்ட காரணத்தால், வேளாண் துறையிலே ஒரு பெரிய நலிவு ஏற்பட்டிருப்பதை எடுத்துச்சொன்னார்கள். அதை மேலும் பாதிக்கிற வகையிலே, தவறான கொள்கையை, மைய அரசிலே இருக்கிற Industries and Commerce Ministry—தவறான அணுகுமுறையை—விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மாறாக எடுத்து வருகிற காரணத்தால், பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அவர்கள் ஆணையிட்டுவிட்ட காரணத்தால், இன்றைக்குக் கிராமத்திலே இருக்கின்ற உழவுத் தொழில் பெரிதும் நசுக்கப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 2-20

நமது அரசைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தெள்ளத் தெளிவாக இருக்கிறார்கள். Globalisation Policy-ஐப் பொறுத்தவரைக்கும் நமது தமிழகத்திலே, இந்தியத் துணைக் கண்டத்திலே உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற நிலையிலேதான் அந்தக் கொள்கை இருக்க வேண்டுமேயொழிய பாதிப்பைத் தருகின்ற நிலையிலே எந்த ஒரு நடவடிக்கையை மைய அரசு எடுத்தாலும் அதை வன்மையாகக் கண்டிக்க, எதிர்க்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு கட்டங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். தொடர்ந்து அந்த நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதனை அவைக்கு எடுத்துச்சொல்லிக் கொள்கிறேன். இந்த விலை வீழ்ச்சி கிராமங்களிலே ஏற்படுவதைத் தடுக்க என்ன நெறிமுறைகளைக் கையாளப்போகிறீர்கள் என்ற ஒரு வினாவைக் கேட்டார்கள். இது நடைமுறையில் இருக்கின்ற உண்மை. நெல் அதிகம் உற்பத்தியாகிவிட்டால் நெல்லுக்கு விலை வீழ்ச்சி, தக்காளி அதிகம் உற்பத்தி ஆகிவிட்டால் தக்காளிக்கு விலை வீழ்ச்சி. ஒரு கிராமத்திலே தக்காளியைப் போட்டு இந்த ஆண்டு நல்ல இலாபம் என்றால் அடுத்த ஆண்டு ஆயிரக்கணக்கான கிராமங்களில் தக்காளியைப் போடுவது என்பது நமது நாட்டில் நடைமுறையில் இருந்து வருகின்ற முறை. அதை மாற்றி அமைக்க வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவி அவர்களுடைய புதிய பொருளாதாரக் கொள்கை. எப்படி தாய்லாந்து நாட்டிலே எந்தெந்த



2001 செப்டம்பர் 14] [திரு. சி. பொன்னையன்]

கிராமத்திற்கு, எந்தெந்த வட்டத்திற்கு எத்தனை ஏக்கர் தக்காளி பயிர் செய்யப்படவேண்டும், எத்தனை ஏக்கர் நெல், கரும்பு பயிர் செய்யப்பட வேண்டும், எந்தெந்தப் பயிர் வகைகளை எந்தெந்தப் பகுதிகளிலே எத்தனை எத்தனை ஏக்கரில் பயிர் செய்ய வேண்டும், நாட்டினுடைய அந்த இறுதிப் பொருளினுடைய தேவை என்ன, இவற்றையெல்லாம் ஆய்ந்து கணினி மயத்தின் மூலமாக, Directorate of Agriculture மூலமாக அதை நடைமுறைப்படுத்த, தாய்லாந்து நாட்டில் இருப்பதைப் போன்று தமிழகத்திலும் கொண்டுவந்து விவசாயிகளுக்கு விளை பொருளில் வீழ்ச்சி ஏற்படாத நிலையை உருவாக்கக்கூடிய உன்னதமான கிராமப் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அவை ஏற்க வேண்டுமாய் நான் வேண்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

13-362—18

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை. நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 10. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2001) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2001). மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2001) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.



பிற்பகல் 2-25

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2001), மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி அவர்களே, பேசவேண்டுமா, (குறுக்கீடு) வேண்டாம். ஏதேனும் விளக்கம் இருந்தால் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 12-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 14

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்முடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2001), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2001), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 13-9-2001 ஆம் நாளி... சிறப்பு அரசிதழில் வெளியி...

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 14

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2001), நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2001), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2001), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

* 13-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2001), நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-30

### (ஊ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2001) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

• **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

---

@ 13-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 11. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவைக்கான தேர்தல் 10-5-2001 அன்று நடைபெற்று, பேரவையின் முதல் கூட்டத் தொடர் 22-5-2001 அன்று தொடங்கி 1-6-2001 வரை நடைபெற்றது. இரண்டாவது கூட்டத் தொடர் 16-8-2001 அன்று தொடங்கி 14-9-2001 வரை நடைபெற்றுள்ளது. பேரவை கூடிய மொத்த நாட்கள் 32. மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் 14. அவைக்கூட்டம் நடைபெற்ற நேரம் 153 மணி, 15 நிமிடம். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் 5. உரையாற்றிய உறுப்பினர்கள் 51 பேர். உரையாற்றிய நேரம் 16 மணி 23 நிமிடம்.

வினாக்கள்-விடைகள் 22-5-2001-ல் பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 13-9-2001 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு செயலகத்தால் ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் 15,216. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றிலேயே, குறுகிய காலத்தில் இந்த அளவிற்கு உறுப்பினர்களிடமிருந்து வினாக்கள் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 158. அனுமதிக்கப் பெற்றவை, உடுக்குறியிட்டவை 6404, உடுக்குறியிடாதவை 1700. உடுக்குறியிட்ட வினாக்கள்: அவையில் விடையளிக்கப்பட்டவை 91. மொத்த துணை வினாக்கள் 407. வினாக்கள்-விடைகள் எடுத்துக் கொள்ளப்பெற்ற நாட்கள் 17. வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் 3. நீட்டிக்கப்பட்ட நேரம் 22 நிமிடம். குறுகிய கால வினாக்கள் 8. உடுக்குறியிடாத வினாக்கள்: அவைமுன் வைக்கப்பெற்றவை 76, உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் 100.

சிறப்புக் கவன ஈர்ப்பு: அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்பெற்றவை 23. மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை 2. எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நேரம் 6 மணி, 4 நிமிடங்கள். உரையாற்றிய உறுப்பினர்கள் 77 பேர்.

கவன ஈர்ப்பு: வரப்பெற்றவை 349. அனுமதிக்கப்பெற்றவை 35. அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் வரப்பெற்றவை 15. நிறைவேற்றப்பெற்றவை 15. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்: அளிக்கப்பெற்றவை 6. அதில் மாண்புமிகு

முதலமைச்சர் அளித்தவை 3. அரசினர் தனித் தீர்மானம்: வரப்பெற்றவை 1. நிறைவேற்றப்பெற்றவை 1. பேரவைக் குழுக்கள் அளித்த அறிக்கைகள்: பொதுக் கணக்குக் குழு 13, பொது நிறுவனங்கள் குழு 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: சட்டமுறை விதிகளும் ஆணைகளும் 83. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் 143.

22-5-2001 முதல் இன்று வரை அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் 67 பேர். பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம் 19,348 பேர். பேரவை நடவடிக்கைகளை பேரவைத் தலைவர் மாடத்தில் அமர்ந்து பார்வையிட்ட காமன்வெல்த் பாராளுமன்ற உறுப்பினர் திரு. லார்ட் டேவிட் லீ க்ராண்டால் அவர்களை பேரவைத் தலைவர் வரவேற்றார். சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் 783 பேர். வழங்கப்பெற்ற நூல்கள் 977. இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் 75. இக்கூட்டத் தொடர்களில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் 502.

செப்டம்பர் திங்கள் 5 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்கள் மாண்புமிகு முதலமைச்சர் ஆணைக்கிணங்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிக இன்றியமையாத பொருள்கள் பற்றி புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது. பெரும்பான்மையான மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் கருத்தரங்கிற்கு வருகை புரிந்து பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*பிற்பகல் 2-35*

தமிழக சட்டமன்றத்தில் மீண்டும் வரலாறு படைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக, உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும் தனித்தனியாக அவையில் பதில் அளித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு எவ்வளவு உயர்ந்த மதிப்பு அளித்துள்ளார்கள் என்பதைப் பேரவையின் மூலமாக நாட்டு மக்கள் அறிந்துகொள்ள இது உதவிற்று. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை கூடிய மிகக் குறுகிய 32 நாட்களிலே 14 நாட்கள் மாலையிலும் கூடியது. இதில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் 15 நாட்கள் நடந்தது. அதில் 9 நாட்கள் மாலையிலும் கூடி 61 மானியக் கோரிக்கைகளும்





விரிவாக விவாதிக்கப்பெற்ற பின்னரே நிறைவேற்றப்பெற்றுள்ளன. மாலையிலே பேரவை அதிக நாட்கள் தொடர்ச்சியாகக் கூடியதும் இந்தப் பேரவையில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டமன்றப் பணிகளைத் தொடர்ந்து இடையறாது, இடைவிடாது நாள்தோறும் ஆற்றிவருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். (மேசையைத் தட்டும் ஒலி)

காலை, மாலை, இரவு என இடையறாது அவையில் அமர்ந்து தேவையான விளக்கங்களை அவ்வப்போது உறுப்பினர்களுக்கு அளித்து பேரவை மூலம் நாட்டுக்கு அரசின் கருத்துகளை எடுத்துரைத்த அவருக்கு பெரிதும் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவாதங்களில் சூடேற்றாமல், சுவையேற்றி, ஆழமாகக் கருத்துகளை எடுத்துரைத்த, பெருமைக்குரிய நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர், ஏனைய அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆகியோரையும் உளமாரப் பாராட்டுகின்றேன்.

உரிய நேரத்தில், அலுவல்களைச் சீரிய முறையில் நடத்துவதற்கு எனக்குப் பேருதவியாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வரகூர் அருணாசலம் அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இவ்வவையின் மாண்பினை மனதில் நிறுத்தி நன்முறையில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், ஏனைய நிர்வாகிகளுக்கும், கொறடாக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவையில் தங்களுக்குள்ள பேச்சுரிமையை முழுவதும் பயன்படுத்தி, கடமையாற்றிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுநல ஆர்வத்துடன் பேரவை நடவடிக்கைகளை நன்முறையில் மக்களுக்கு விரைந்து எடுத்துச் சென்ற தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தாள்கள், செய்தி நிறுவனங்கள் ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும், குறிப்பாக, இக்கூட்டத் தொடரில் பெருமளவில் மாலை நேரங்களில் அவை நடத்தப்பட்டும் கூட, பல்வேறு சிரமங்களைப் பொருட்படுத்தாது அவையின் நடவடிக்கைகளை, மறுநாள் காலை செய்தித் தாள்களில் தவறாமல் வெளியிட்டு தங்கள் ஆற்றலை வெளிப்படுத்திய செய்தியாளர்களுக்கும் என் உளப்பூர்வமான

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 14

பாராட்டுக்கள். பேரவை நடவடிக்கைகளை ஒளிபரப்புவதற்கு ஏற்ற வகையில் தினமும் ஒளிநாடாவில் பதிவு செய்த தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கும் பாராட்டுக்கள்.

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட உளப்பூர்வமான ஈடுபாட்டுடன் எனக்குத் துணை நின்ற பேரவை முதன்மைச் செயலாளர் திரு. ஜானகிராமன் அவர்களுக்கும், பேரவைச் செயலாளர் திரு. இராசாராமன் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஒலிபெருக்கி மற்றும் இதர வசதிகள் செய்த பொதுப் பணித் துறையினருக்கும் பேரவைக் காவலர்களுக்கும் மற்றும் உதவிய அனைவருக்கும் பேரவையின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வவையின் எல்லா அலுவல்களையும் முன்னின்று சிறப்பாக நடத்தப் பெரிதும் துணையிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அவை முன்னவர் அவர்களுக்கும் தனித்தனியே நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கு உங்கள் அனைவர் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, கேள்வி கேட்டவர்கள் யார், எவ்வளவு பேர் கேட்டார்கள், இதையெல்லாம் சொல்ல வேண்டும். இது மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனுடைய முழு விவரம் இன்னும் வரவில்லை. அடுத்த கூட்டத் தொடரிலே அறிவிக்கச் சொல்கின்றேன்.

## 10. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்த அரசினர் தீர்மானம் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2001 செப்டம்பர் 14]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-38 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெ றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*73. சென்னை, உயர் நீதிமன்ற நீதிபதியான திரு. எஸ். தங்கராஜ் (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தமிழ்நாடு வரி விதிப்பு தனி நடுவர் மன்றத்தின் தலைவராக நியமித்திருப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 9-8-2001 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு தனி நடுவர் மன்றச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 42/1992(23) (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*74. வணிக வரித் துறையில் 1999ஆம் ஆண்டு ஜன ரித் திங்கள் 12ஆம் நாளன்று உருவாகி, 1999ஆம் ஆண்டு ஜனவரித் தி கள் 12ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளி ப்பட்ட II(2) வ.வ./ 11(1-2)/1999ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து*

வணிக வரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளில் மோட்டார் வண்டிகள் நுழைதல் மீதான வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

75. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-3-2001 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-ஏ (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

76. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திரப் பதிப்புரிமையாளர்கள் உரிம விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17-4-2001 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டுப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-ஏ (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 23-4-2001 ஆம் நாளிட்ட 186 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180- (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

78. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

123. வரவு-செலவுத் திட்டம், 2001-2002 மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலைக் குறித்த வெள்ளை அறிக்கை குறித்த ஒரு கண்ணோட்டம். (தமிழ்)

124. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)





125. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

126. 2001-2002 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

127. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

128. பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை. (2001-2002)

129. பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2001-2002)

130. பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2001-2002)

131. பொதுக் கணக்குக் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை. (2001-2002)

132. பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை. (2001-2002)

133. பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2001-2002)

134. பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2001-2002)

135. பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002)

136. பொது நிறுவனங்கள் குழுவின். ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

137. பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002)

138. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது.)

139. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 26 வரை)

223750
Y211,3180 P01. B12